

கோகுலம்



GOKULAM
செப்டம்பர் '95
ரூ. 5.00

INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS



800th ISSUE

CHACHA CHAUDHARY RAAKA'S GAME

Barbarous RAAKA has returned. He has drunk the miraculous potion which has made the dreaded dacoit immortal. The brute stands as an upheaval task before sharp brain CHACHA CHAUDHARY and muscular SABU.

FREE GIFTS Big Babol 1



JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ____________________

ADDRESS ____________________

____

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ____________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

DIAMOND COMICS PVT. LTD. X-30, Okhla Industrial Area, Phase-2, New Delhi-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore) **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar, •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut


கோகுலம்

1995 செப்டெம்பர்
மாத இதழ்
மலர் : 14
இதழ் : 8



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,




அனைவருக்கும் வணக்கம்.

புதிய தொடர்கதை 'புவனா தேடிய புதையலை'ப் பாராட்டி ஏகப்பட்ட கடிதங்கள். ஆரம்பமே அசத்தலாக இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். போகப் போக இரண்டாவது சாவியின் ராஜா, சந்திப்பைப் போல, புவனாவும் வாசகர்களின் மனத்தில் நிரந்தரமாக இடம் பிடிக்கப் போவது நிச்சயம்.

எத்தனையோ முறை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். தாங்கள் எழுதிய கதை, கட்டுரை, பாடல்களை அனுப்பும் போது பலர் தங்கள் முகவரியைத் தருவதில்லை. உறையில் மட்டுமே எழுதுகிறார்கள். உள்ளேயும் கண்டிப்பாக முகவரியை எழுத வேண்டும். உறையைக் கிழிக்கும் போது, அதில் உள்ள முகவரி போய் விடும். எனவே அனுப்பும் கதை கட்டுரை பாடல்களிலும் தவறாமல், முழு முகவரியையும் எழுதுங்கள்.

இந்த இதழுடன் வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதைகள் நிறைவு பெறுகின்றன. ஏராளமான வாசகர்களாலும் ஆசிரியர்களாலும், பெற்றோர் மற்றும் சிறுவர் இலக்கியத் திறனாய்வாளர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டுள்ள இவை சிறுவர் இலக்கியத்தின் சிறுகதைப் பிரிவு செழித்தோங்கி வருகிறது என்பதற்குப் போதுமானது. அடுத்த இதழில் இருந்து பிரசுரம் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிறுகதைகள் வெளிவரும்.

இம்மாதம் 5-ஆம் தேதி ஆசிரியர் தினமல்லவா? கோகுலத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு ஆயிரக்கணக்கான வாசகர்கள் சார்பில் கோகுலத்தின் வாழ்த்துகள். மாணவர்களாக உள்ள கோகுலம் வாசகர்கள் அனைவரும் ஆசிரியரை வணங்கி தங்கள் அன்பைக் காட்ட வேண்டும் என்று கோகுலம் விரும்புகிறது. இது பற்றித் தங்கள் அனுபவத்தை அவர்கள் எழுதி அனுப்பலாம். தகுதியானவை கண்டிப்பாக கோகுலத்தில் இடம்பெறும்.



மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்

1995 செப்டெம்பர்

இந்த இதழில்...



* மரகதச் சிலை - பக்கம் 41

* மு. ஜா. மகேஷ் - பக்கம் 17






* சிங்கம் ராஜாதானா? - பக்கம் 7

* தண்ணீரில் போடாதே! - பக்கம் 55





பழம் தின்னும் பாம்பு!

பாம்புகள் எல்லாமே மாமிச பட்சிணிகள்தாம். ஆனால், ஆப்பிரிக்காவில் வாழும் ஒரே ஓர் இனப் பாம்பு மட்டும் "மார் மார்டிகா" என்னும் பழத்தை மாத்திரம் தின்று சாகபட்சிணி யாக உயிர்வாழ்கிறது.

— தக்கோலம். அ. முஸ்தபா



காற்றுக்கும் பெயர்

55 கி.மீலிருந்து 75 கி.மீ. வரையிலான வேகத்தில் வீசும் காற்றுக்கு கேல் (Gale) என்று பெயர்.

75 கி.மீ. முதல் 120 கி.மீ. வேகத்தில் வீசினால் அதற்கு ஸ்டார்ம் (Storm) என்று பெயர்.

130 கி.மீ.க்கும் அதிகமான வேகத்தில் வீசினால் அதற்கு ஹரிக்கேன் (Hurricane) என்று பெயர்.

- செஞ்சி. தா. ஷேக் உசேன்

மராத்திய மன்னர்களுக்கு அமைச்சராக விளங்கியவர், நானா என்று செல்லமாக அழைக்கப்பட்ட நானாபத்னாவிஸ். அவர் மிகுந்த மதியூகி. அவர் தமது புத்திசாதுரியத்தால் அரசுக்கு ஏற்பட்ட பலவிதப் பிரச்னைகளையும் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தார்.

ஒரு சமயம் அரபு நாட்டுக் குதிரை வியாபாரி ஒருவன் தர்பாருக்கு வந்தான். அவன் தன்னோடு இரண்டு குதிரைகளைக் கொண்டு வந்திருந்தான். ஒரே மாதிரியாக இருந்த அந்த இரண்டு குதிரைகளும் அழகாகக் கம்பீரத்தோடு விளங்கின. மன்னர் அவற்றின் அழகில் மயங்கினார். எப்படியாவது அவற்றை வாங்க முடிவு செய்தார்.

வியாபாரியோ வெறும் பணத்துக்காக அவற்றை விற்கத் தயாராக இல்லை. அவன் மன்னனைப் பார்த்து, "அரசே! இந்தக் குதிரைகளை நான் என் குழந்தைகளைப் போல் வளர்த்திருக்கிறேன். மிகுந்த புத்தி சாதுரியம் படைத்தவை இவை. வெறும் பொன்னாசை கொண்டு இவற்றை நான் விற்கப் போவதில்லை. நான் பல ராஜ்யங்களுக்கும் சென்று வந்திருக்கிறேன். பல மன்னர்கள் என் குதிரைகளை வாங்க ஆசைப்பட்டனர். ஆனால், குதிரைகளை நன்கு பயன்படுத்தத் தெரிந்த புத்தி சாதுரியமுள்ள நாட்டுக்கு மட்டுமே விற்பதென்று உறுதியாக முடிவு செய்திருக்கிறேன்" என்றான்.

"சரி, வணிகரே! எங்கள் நாட்டின் புத்தி சாதுரியத்தை, எப்படி நீர் நிர்ணயிக்கப் போகிறீர்?" என்றார் சேனாபதி.


அதற்கு அந்த வியாபாரி, "நான் இதற்கென்று ஒரு சிறிய பரீட்சை வைத்து வருகிறேன். நான் கொண்டு வந்திருக்கும் ஒரே மாதிரியான இந்த இரண்டு குதிரைகளில் ஒன்று தாய், மற்றது அதன் குட்டியாகும். இவற்றுள் எது தாய், எது குட்டி என்று எந்த நாட்டிலே கண்டு பிடிக்கிறார்களோ, அந்த நாட்டு மன்னருக்கே குதிரையை விற்பேன்" என்றான்.

சபையிலிருந்த எல்லோரும் இரண்டு குதிரைகளையும் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தார்கள்.

அவற்றுள் வித்தியாசமே கண்டு பிடிக்க முடியவில்லை. எல்லோருடைய கண்களும் நானாபத்னாவீஸின் மீது திரும்பின. அமைச்சர் தமது புத்தி சாதுரியத்தால் மகாராஷ்டிரத்தின் மானத்தைக் காப்பாற்றுவார் என்று அவர்களுக்கு நம்பிக்கை. இரண்டொரு நாட்கள் அவகாசம் கொடுத்தால் இதற்கு விடை காண்பதாகக் கூறினார் நானா. மன்னனும் வியாபாரியும் சம்மதித்தார்கள்.

மறுநாள் குதிரைகளைக் கட்டியிருந்த லாயத்துக்குப் போனார் நானா. இரண்டு குதிரைகளையும் கூர்ந்து





கவனித்தார். அவைகளின் நிறம், மச்சங்கள், வால் நீளம் ஆகியவை எல்லாமே ஒரே மாதிரியாக இருந்தன. பிரச்னைக்கு விடை காண முடியாமல் கவலையோடு வீட்டுக்குப் போனார் நானா. அன்றிரவு முழுவதும் அவருக்குத் தூக்கம் வரவில்லை. மறுநாள் காலைப் பொழுது விடிந்தது. "சோ"வென்று பெருமழை கொட்டிக் கொண்டிருந்தது. நானாவின் மனத்தில் திடீர்த் திட்டம் ஒன்று தோன்றியது.

குதிரைகளை அழைத்துக் கொண்டு வருமாறு வியாபாரியிடம் சொன்னார் நானா. அவர்கள் குதிரையோடு ஆற்றங்கரைக்குப் போனார்கள். மழையின் காரணமாக ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

"குதிரைகளை அவிழ்த்து ஆற்றிலே விரட்டி விடுங்கள். அவை நீந்தி அக்கரைக்குப் போகட்டும்" என்று கட்டளை இட்டார் நானா.

பொங்கிச் சுழித்தோடும் வெள்ளத்தில் குதிரைகள் தள்ளப்பட்டன. கூடியிருந்தவர்கள் எல்லோரும் நானா பைத்தியக்காரத்தனமாக ஏதோ செய்கிறாரே என்று வியப்போடு பார்த்தனர். ஆற்றிலே இரு குதிரைகளும் நீந்த ஆரம்பித்தன. ஆற்றின் நடுவிலே ஒரு பெரிய சுழல் இருந்தது. அதை நெருங்கியவுடன் இரு குதிரைகளும் சிறிது நேரம் தயங்கி நின்றன. திடீரென்று ஒரு குதிரை முன்னேறிச் செல்ல ஆரம்பித்தது. மற்றது அதைப் பின் தொடர்ந்தது. விரைவில் இரு குதிரைகளும் பத்திரமாக அக்கரை போய்ச் சேர்ந்தன.

நானா குதிரை வியாபாரியைப் பார்த்து, "வியாபாரியே! சுழலிலிருந்து முதலாவதாகச் சென்றதே, அதுதான், தாய்க் குதிரை. அதிக வயதால் ஏற்பட்ட அனுபவத்தோடு, தாயன்பும் கொண்டது அது. அதனால் தாய்ப்பாசம் தாங்காது தான் முந்திச் சென்று, குட்டிக்கு வழிகாட்டி உதவியுள்ளது" என்றார்.

சரியான விடையைக் கண்டுபிடித்த நானாவின் புத்தி கூர்மையைக் கண்டு வியாபாரி வியந்தான். தனது இரு குதிரைகளையும் மன்னருக்கு விற்றுவிட்டுப் புறப்பட்டான். மன்னர் நானாவிற்குப் பல பரிசுகளை அளித்தார்.

— பி. சுந்தரி

ஓடப்பிரு சுரேஷ்!



சுரேஷ் அந்தத் தெருவுக்கு நல்ல பையன். யார் எந்த சமயத்தில் வந்து கூப்பிட்டாலும் உதவி செய்யப் போவான்.

இப்படிப்பட்ட நல்ல குணமுடைய சுரேஷுக்கு, கரப்பையும் எலியையும் கண்டால் மரண பயம்! இது மற்றவர்களுக்குத் தெரியாது.

மூன்றாவது வீட்டில் ஒண்டிக் கட்டையாக தனியாக இருந்த தங்காயிப் பாட்டி அன்று அவனைத் தேடி வந்தாள்.

"தம்பி சுரேஷு. எங்க வீட்டுல எலி புகுந்துடிச்சு தம்பி. நீதான் வந்து அடிச்சுக் கொல்லனும்" என்று அழைத்தாள்.

சுரேஷுக்கு பகீர் என்றது. தப்பிக்க முடியவில்லை. பாட்டியோடு தைரியமாகப் போனான்.

"அதோ அந்த மேசைக்கு அடியில போயிருச்சு" என்றாள் தங்காயிப் பாட்டி.

விறகுக் கட்டை ஒன்றைத் தேடி எடுத்துக் கொண்டான் சுரேஷ்.

"பாட்டி... நீங்க கதவ அடைசிட்டு வெளியே நில்லுங்க. நான் எலியை அடிச்சுக் கொன்னுட்டுக் கூப்புடுறேன்" என்றான் சுரேஷ்.

பாட்டியும் நல்லதாப் போச்சு என்று வெளியேறினாள்.

சுரேஷ் மெதுவாக மேசையைத் தட்டினான். சப்தமில்லை. ஓங்கி ஒரு அடி போட்டான். மேசையை இலேசாக இழுத்துப் பார்த்தான். விறகுக் கட்டையைக் கொண்டு கீழே துளாவினான். ஒரு துணிப் பையின் அருகில் சுரேஷ் போட்ட அடியில் எலி மறு பக்கம் ஓட... சுரேஷ் தடாலென எதிர்ப் பக்கம் ஓடினான். கீழே கிடந்த பெஞ்சின் மீது கால் இடறக் கீழே விழுந்தான். "யப்பா" என்றவனின் சத்தத்தால் பாட்டி வெளியே இருந்து "சுரேஷ் என்னா? என்னா?" என்று கேட்க அவன் "எலி... எலி... என்றான். பாட்டி "அடி.... அடி...." என்றாள்.

எப்படியோ எலியை வெளியில ஓட்டணும்னு மேசையைப் பிடித்து இழுத்தான் சுரேஷ். சத்தத்தில் எலி வெளியே ஓடிவரவும், மேசையின் மேலிருந்த பூரிக்கட்டை கீழே விழவும் சரியாக இருக்க, "நச்" என்ற அடியில் எலி கீச்சு என்றபடி பரிதாபமாகச் செத்தது.

சுரேஷுக்கு ஒரே ஆச்சரியம். நம்மைக் காப்பாத்தும் அந்தத் தொந்தி கணபதிதான் பூரிக் கட்டை வடிவுல எலியைக் கொன்னுட்டார்" என நினைத்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

தங்காயி பாட்டிக்கு ஒரே சந்தோஷம். "ஏ... ராசா... உன்னத் தவிர இந்த காலனில யாரு ராசா இந்தக் காரியத்தப் பண்ண முடியும்?" என்று பாராட்டினாள்.

இப்ப எல்லா யார் வீட்டில் எலி என்றாலும் சுரேஷைத்தான் கூப்பிடுகிறார்கள். அதனால் அவன் யார் வந்து அழைத்தாலும் ஓடியே போய் விடுகிறான்!

— டி.வி.எம்.வி. எழிலன், சவுதி



சிங்கம் ராஜாதானா?

ரேவதி

கடைக்கு வந்தவரை பூபதி அடையாளம் கண்டு கொண்டு விட்டான்.

"வணக்கம் சார். சர்க்கஸில் நான்கு சிங்கங்களுக்கு நடுவே படுத்து பாட்டுப் பாடிக் காட்டிய ரிங்மாஸ்டர் நீங்கதானே?"

வியப்புடன் அவனை நோக்கிய ரிங்மாஸ்டர் "ஆமாப் தம்பி. நானேதான்," என்றார்.

"சார், உங்களை மாதிரி சிங்கம் புலிகளை அடக்கிக் காட்டணும்னு எனக்கும் ஆசை சார். உங்க அளவுக்கு இல்லைன்னாலும் குறைந்தது ஒரு சிங்கத்தைத் தொட்டாவது பார்க்கணும் சார்."

"அதுக்கு என்ன தம்பி. இன்றைக்கு சாயங்காலம் வா. சிங்கத்தைத் தடவிப் பார்க்கலாம்."

இவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டே வந்த அம்மா பதறிப்போனாள்.

"ஐயோ சார். இவன்தான் அறியாப்பய. முட்டாள்தனமா கேட்கறான் என்றால் நீங்களும் வரச் சொல் நீங்களே! இது நியாயமா? இவனுக்கு கையில் அரிவாள் பட்டு காயம். சிங்கங்களோ இரத்த வெறி பிடித்தவை. இந்த இரத்த வாசனையை முகர்ந்ததும் அதுகளுக்கு மனித இரத்த வாசனை நினைவுக்கு வந்து, அடிச்சு முழுங்கிட்டா என்ன ஆகும்?"

ரிங்மாஸ்டர் சிரித்தார். "அம்மா, நீங்க நினைப்பது தப்பும்மா. சிங்கத்திற்கு மோப்ப சக்தி மிகவும் குறைவானது. பார்க்கும் சக்திகூட மட்டமானதே. செவிப்புலன் மட்டுமே கூர்மையானது. அதனால் சிங்கம் இரத்த வெறி பிடித்தது என்பது தவறான எண்ணம். பசி எடுத்தால்தான் அது மற்ற விலங்குகளை வேட்டையாடும். பசி இல்லாதபோது தீங்கு விளை

மிகச்சிறந்தது!

விஜயபுரி நாட்டை வீரசிம்மன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். நீதி, நேர்மை தவறாது, தர்மநெறி பிறழாது அறமே பெரிதென ஆட்சி புரிந்தார்.

அதே ஊரில் விஷ்ணுசித்தர் என்ற குருவும் வாழ்ந்து வந்தார். அவர் குருகுலம் நடத்தி வந்தார். நிறைய மாணவர்களுக்குக் கல்வியுடன், கலைகளும் போதித்தார். அன்பு நெறியை உபதேசித்தார். அரசரின் மகனும், ஆண்டியின் மகனும் அவருக்குச் சமமாகவே தோன்றினர். ஏழைகளுக்கு இலவசமாக வித்தைகள் கற்றுத் தந்தார். அவரிடம் வித்தை பயின்றவர்கள், பிற்காலத்தில் அமைச்சராக, சேனாதிபதியாக, படைவீரர்களாக உருவெடுத்து, உயர்வு அடைந்தனர்.



ஒருநாள் வீரசிம்மன் போரில் வீரசுவர்க்கம் எய்தினார். சொர்க்கத்தில் இடம்பெற்றார். சில நாள் சென்றபின் குரு விஷ்ணுசித்தரும் பூவுலகை நீத்து வானுலகம் வந்தார். சொர்க்கத்தில் அவரையும் மிகுந்த மரியாதைகளுடன் வரவேற்றனர். தனக்களித்த மரியாதையைக் காட்டிலும், குரு உயர்வாகப் போற்றப்படுவது கண்டு, மன்னர் வியந்தார்.

"நான் எத்தனை எத்தனையோ தர்மங்கள் செய்தேனே? கோவில், குளம் என்று கட்டினேனே? அன்னசத்திரங்கள் கட்டி ஆயிரமாயிரம் மக்களின் வயிறு குளிர வைத்தேனே? இருந்தும் எனக்குச் சமமான அந்தஸ்து, இந்த குருவுக்குச் சொர்க்கத்தில் கிடைத்திருக்கிறதே! இது என்ன நியாயம்?" என்று மனதிற்குள் புலம்பினார்.

ஒருநாள் எமதர்மராஜனிடமே தன் மனக்குறையை நேரில் கேட்டு விட்டார். அவரது கேள்வியைக் கேட்டு எமதர்மன் சிரித்தான்.

"அரசே! நீங்கள் எல்லா தர்மங்களும் செய்ததை மறுக்கவில்லை. ஆனால், எல்லாவற்றிலும் மிகச் சிறந்த தர்மம் ஒருவரது கல்விக் கண்களைத் திறப்பதுதான்! அதனால், பல்லாயிரம் பேரின் கல்விக் கண்கள் திறக்கக் காரணமாயிருந்த குருவே உம்மிலும் உயர்வைப் பெறுகிறார்."

எமதர்மனின் பதிலில் இருந்த நியாயத்தை அரசரும் ஏற்று அமைதியாகி குருவின் பாதம் பணிந்தார்.

— ராதாபாலா

களும் கதிகலங்கி ஓடும். அதனிடம் பதுங்கித் தாக்கும் கோழைத் தனம் இல்லை. இரையை நேருக்கு நேர் தாக்கி வீழ்த்தும். தின்றதுபோக மிச்ச இரையைப் பதுக்கி வைக்கும் நீச குணம் அதற்கு இல்லை. எல்லா வற்றையும் விட முக்கியமானது. சிங்கம் இரை தின்று விட்டால், எந்த விலங்கும் அச்சமின்றி அதன் அருகேயே சென்று மேயும். வீணாக அது எந்த விலங்கையும் தாக்குவதில்லை. இந்த உயர்ந்த குணங்களாலும், கம்பீரமான தோற்றத்தாலுமே 'விலங்குகளின் ராஜா' என்ற பட்டப் பெயரால் உலக இலக்கியங்கள் எல்லாம் சிங்கத்தைப் புகழ்கின்றன."

"சிங்கமும் புலியும் சண்டையிட்டால் எது ஜெயிக்கும் சார்?"

ரிங்மாஸ்டர் சிரித்தார்.

"கண்டிப்பாகப் புலிதான் ஜெயிக்கும் தம்பி. நன்கு வளர்ந்த ஆண் சிங்கத்தின் எடை 230 கிலோ. நன்கு வளர்ச்சி யுற்ற ஒரு புலியின் எடை 300 கிலோ. அது மட்டுமா? சிங் கத்தைவிட புலிதான் மிக வேக மாக ஓடக் கூடியது. சிங்கத் தைவிட புலியே வலிமை மிக்கதும்கூட."

"என்ன சார் குழப்புகிறீர்கள்! இந்த அளவுக்கு சிங்கத்தைவிட



வலிமை மிக்க புலிதானே காட்டுக்கு ராஜாவாக இருக்க முடியும்? புலியை விட சிங்கத்திற்கு என்ன தகுதி இருக்கிறது!"

"இத்தனை பிளஸ் பாயிண்டுகள் இருந்தும் சிங்கத்தின் கம்பீரமான தோற்றமும், நடுநடுங்க வைக்கும் அதன் கர்ஜனையும் புலியை வெருண்டு ஓட ஸ்வைப்பவை. தோற்றத்தில் பெரிய யானையும் கூட சிங்கம் இருக்கும் இடத்தைத் தவிர்க்கும். மற்ற மிருகங்களுக்கு இல்லாத பெருந்தன்மையும், அச்சமின்மையும், கம்பீரத் தோற்றமும் இருப்பதால்தான் உலக நாடுகள் எல்லாமே சிங்கத்தை மிருக ராஜாவாக ஏற்றுக் கொண்டாடுகின்றன."

"சிங்கம் மரம் ஏறுமா?"

"அவசியம் என்றால் கண்டிப்பாக மரம் ஏறும்."

"ஆண்ட்ரோக்குளோசும் சிங்கமும் கதை நடக்கக் கூடியதா சார்?"

"கண்டிப்பாக நடக்கக் கூடியதே. சிங்கங்கள் அபாயமானவை அல்ல. வேளா வேலைக்கு உணவு போட்டு வயிறு நிறைந்து விட்டால் அவைகளை எளிதில் பழக்க வைக்க முடியும். ஒரு நாள் எனக்கு உடம்பு சரியில்லை என்று நான் வராவிட்டால் இவை இரை எடுப்பதில்லை. அந்த அளவுக்கு நன்றி உணர்வு உள்ளவை."

"அப்போ ஏன்சார் அதுகளை அடிக்கிறீர்கள்?"

"திடீரென்று இத்தனை பெரிய கூட்டத்தினரையும் அவர்கள் எழுப்பும் ஆரவாரத்தையும் கண்டு அவை மிரண்டு விடும். அப்பொழுது மூர்க்கத்தனமே தலைதூக்கி நிற்கும். அவைகளைப் பணிய வைக்கவே அவைகளுடன் பழகிய நான் சாட்டையாடு நிற்கிறேன். அவை என்னைத் தாக்க எண்ணினால் சாட்டை எல்லாம் எந்த மூலை?" என்று சிரித்தார் மாஸ்டர்.

"சிங்கக் குட்டிகள் பிறந்ததுமே கர்ஜிக்குமா?"

"இல்லை. வளர ஆரம்பித்த பிறகே கர்ஜிக்கத் தொடங்கும். பிறந்த உடனே குட்டிகளின் உடம்பில் புள்ளி இருக்கும். பிடரிமயிர் இருக்காது. வளர வளர புள்ளிகள் மறையும். பிடரி மயிர் முளைக்கும்."


"அம்மா, நான் இவருடன் போய் ஒரு சிங்கத்துடன் கைகுலுக்கிவிட்டு வரேம்மா" என்று கிளம்பினான் பூபதி.

"போதுமான அளவுக்கு இரைதின்ற சிங்கமா பார்த்து கூட்டிக்கிட்டுப் போங்க" என்று சிரித்து மாஸ்டரிம் கைகூப்பி விடை கொடுத்தாள் அம்மா.

அறிவியல் உண்மைகள்

- சிங்கங்கள் ஊன் உண்ணிகள் வரிசையில் ஃபேலிடே (FELIDAE) குடும்பத்தின் உட் குடும்பமான பேந்திரினே (PANTHERINAE) பிரிவைச் சேர்ந்தவை. விலங்கியல் பெயர் PANTHERALEO PERSICA.
- ஒரு காலத்தில் உலகம் முழுவதும் காணப்பட்ட சிங்கங்கள் இன்று இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும் மட்டுமே உள்ளன. இந்தியாவில் கூட சொற்ப எண்ணிக்கையில் கிர் புகலரணில் மட்டுமே உள்ளன.
- சோமாலி நாட்டுச் சிங்கங்களுக்கு பிடரி மயிர் கிடையாது.
- சிங்கம் கம்பீரமான தோற்றமுடையது. இரைதேடும் போது கூட நேருக்கு நேர் சென்று தாக்கும். ஒளிவு மறைவு இன்றி சமவெளியில் புற்களுக்கிடையில் வாழும். இதுவே இதன் அழிவுக்குக் காரணம். வயதான சிங்கங்களே குகைகளில் வசிக்கும். இவைகளே இரைக்காக மனிதரைத் தாக்கும்.
- இரைதேடி வருவது பெரும்பாலும் பெண் சிங்கமே. முதலில் தின்பது ஆண் சிங்கமே. அது தின்றது போக மீதியே மற்றவைகளுக்கு. ஆங்கிலத்தில் உள்ள (LION'S SHARE) இதையே குறிக்கும்.
- சிங்கத்தைவிட புலியும் யானையும் வலிமை மிக்கவை. எனினும் சிங்கத்தின் கம்பீரமும், நடுங்க வைக்கும் கர்ஜனையும், அஞ்சாத குணமும் 'ராஜா' பட்டத்தை உலக இலக்கியங்கள் வழங்கியுள்ளன.
- ஆண் சிங்கத்தின் வாலில் கறுப்பு வண்ணத்தில் அழகிய குஞ்சம் இருக்கும். இதன் நடுவில் ஒரு முள் இருக்கும்.

மிகச்சிறந்தது!



விஜயபுரி நாட்டை வீரசிம்மன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். நீதி, நேர்மை தவறாது, தர்மநெறி பிறழாது அறமே பெரிதென ஆட்சி புரிந்தார்.

அதே ஊரில் விஷ்ணுசித்தர் என்ற குருவும் வாழ்ந்து வந்தார். அவர் குருகுலம் நடத்தி வந்தார். நிறைய மாணவர்களுக்குக் கல்வியுடன், கலைகளும் போதித்தார். அன்பு நெறியை உபதேசித்தார். அரசரின் மகனும், ஆண்டியின் மகனும் அவருக்குச் சமமாகவே தோன்றினர். ஏழைகளுக்கு இலவசமாக வித்தைகள் கற்றுத் தந்தார். அவரிடம் வித்தை பயின்றவர்கள், பிற்காலத்தில் அமைச்சராக, சேனாதிபதியாக, படைவீரர்களாக உருவெடுத்து, உயர்வு அடைந்தனர்.

ஒருநாள் வீரசிம்மன் போரில் வீரசுவர்க்கம் எய்தினார். சொர்க்கத்தில் இடம்பெற்றார். சில நாள் சென்றபின் குரு விஷ்ணுசித்தரும் பூவுலகை நீத்து வானுலகம் வந்தார். சொர்க்கத்தில் அவரையும் மிகுந்த மரியாதைகளுடன் வரவேற்றனர். தனக்களித்த மரியாதையைக் காட்டிலும், குரு உயர்வாகப் போற்றப்படுவது கண்டு, மன்னர் வியந்தார்.

"நான் எத்தனை எத்தனையோ தர்மங்கள் செய்தேனே? கோவில், குளம் என்று கட்டினேனே? அன்னசத்திரங்கள் கட்டி ஆயிரமாயிரம் மக்களின் வயிறு குளிர வைத்தேனே? இருந்தும் எனக்குச் சமமான அந்தஸ்து, இந்த குருவுக்குச் சொர்க்கத்தில் கிடைத்திருக்கிறதே! இது என்ன நியாயம்?" என்று மனதிற்குள் புலம்பினார்.

ஒருநாள் எமதர்மராஜனிடமே தன் மனக்குறையை நேரில் கேட்டு விட்டார். அவரது கேள்வியைக் கேட்டு எமதர்மன் சிரித்தான்.

"அரசே! நீங்கள் எல்லா தர்மங்களும் செய்ததை மறுக்கவில்லை. ஆனால், எல்லாவற்றிலும் மிகச் சிறந்த தர்மம் ஒருவரது கல்விக் கண்களைத் திறப்பதுதான்! அதனால், பல்லாயிரம் பேரின் கல்விக் கண்கள் திறக்கக் காரணமாயிருந்த குருவே உம்மிலும் உயர்வைப் பெறுகிறார்."

எமதர்மனின் பதிலில் இருந்த நியாயத்தை அரசரும் ஏற்று அமைதியாகி குருவின் பாதம் பணிந்தார்.

— ராதாபாலா

எங்கள் ஊரில் நடந்தது! எங்கள் ஊரில் நடந்தது!

உப்பு அதிகமா!

என் அக்கா வீட்டில் ஒரு சுபநிகழ்ச்சி நடந்தது. அதற்காக நாங்கள் சென்றோம். எல்லோருக்கும் அங்கே விருந்து வைத்தார்கள். சாப்பாட்டுப் பந்தியில் அமர்ந்தோம். கூடவே என் அக்கா பெண் மூன்று வயதுச் சிறுமி ஜெயப்பிரதாவும் உட்கார்ந்தாள். சாப்பாடு நன்றாகத்தான் இருந்தது. ஆனால் சிறுமி ஜெயப்பிரதா மட்டும் சாப்பாட்டில் உப்பு அதிகமாக உள்ளது என்று தொடர்ந்து புகார் சொல்லிக் கொண்டே இருந்தாள். எங்களுக்கு எதனால் அவள் அப்படிச் சொல்கிறாள் என்பது புரியவில்லை. அவள் வேண்டுமென்றே கூறுகிறாளா என்பதை அறிய அவளுடைய சாப்பாட்டில் கொஞ்சம் சாப்பிட்டுப் பார்த்தேன். நிஜமாகவே உப்புக் கரித்தது! பிறகுதான் தெரிந்தது. சாப்பாட்டு இலையில் வைத்த தூள் உப்பை அவள் சர்க்கரை என்று நினைத்துக் கலந்து சாப்பிட்டிருக்கிறாள்! நான் எல்லோருக்கும் விளக்கினேன். அனைவரும் சிரித்தனர். பாவம், உப்பை அதிகம் தின்றதால் அன்று அவள் அதிகம் சாப்பிட்டது தண்ணீர் தான்!

துத்திப்பட்டு, இராம. ஜெயகாந்தன்.





ஒரே ஒருவர்!

எங்கள் ஊரில் பொதுக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பேச வந்த ஒரு பேச்சாளர் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார். அவர் பேச்சு யாருக்கும் புரியவில்லை. ஒரே போர்! மக்கள் பொறுமை இழந்து கலையத் தொடங்கினர். இருப்பினும் அவர் தன் பேச்சை நிறுத்தவே இல்லை. விழாக் குழுவினருக்கு தர்மசங்கடமாகப் போய் விட்டது. கடைசியில் எல்லாரும் கலைந்து, ஒரே ஒருவர் மட்டும் பார்வையாளர் வரிசையில் உட்கார்ந்திருந்தார். அதைப் பார்த்த அந்தப் பேச்சாளர், உங்களைப் போல் "ஒரே ஒருவர் உன்னிப்பாகக் கேட்டால் கூடப் போதும். நான் உங்களுக்காகப் பேசுவேன்" என்றார். உட்கார்ந்திருந்த நபர் உடனே எழுந்தார். "நான் உங்கள் பேச்சைக் கேட்பதற்காக உட்காரவில்லை. உங்களுக்கு அடுத்துப் பேச வேண்டியவன் நான்" என்றாரே பார்க்கலாம். பேச்சாளர் முகத்தில் ஈயாடவில்லை!

சென்னை, ப. கணேஷ்ராகவன்.

எங்கள் ஊரில் நடந்தது! எங்கள் ஊரில் நடந்தது!

வாயில் புடவை

பி.டி. பாடவேளையின் போது என் நண்பர்களும், நானும் மரத்தடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். விளையாட்டாக ஒவ்வொருவரும் வரிசையாக ஒரு 'ஜோக்' சொல்ல வேண்டும் என்று முடிவு பண்ணினோம். அதன்படி ஒவ்வொருவரும் ஒரு ஜோக்கைச் சொல்லிக் கொண்டே வந்தோம். கடைசியாக ஒரு நண்பனின் முறை. அவன் எழுந்து நின்று எங்களிடம் தன் கையைக் காட்டி "இதைப் புடவை என்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி, கையை வாய் மீது வைத்துக் கொண்டு "இப்போ இதுக்குப் பெயரென்ன?" என்று கேட்டான். ஒருவருக்கும் பதில் தெரியவில்லை. முழித்தனர். நானுந்தான்! பிறகு, விடையென்ன என்று நாங்கள் கேட்க, அவன் "வாயில் புடவை" என்று கூறினான். அவனுக்கு தர்ம அடிதான் கிடைத்தது.

வாலாஜாபேட்,

கே. பாலசுந்தர்.





காய்களை

ஒருநாள் விளையாடி விட்டு வீட்டினுள் நுழைந்ததும், என் அப்பா ஏகமாகச் சத்தம் போட்டுக் "காய்களை எல்லாம் எடுத்துப் பரணில் போட்டு விடுகிறேன் பார்" என்று கோபமாகக் கத்திக் கொண்டிருந்தார். உடனே நான் அப்பாவிற்கு உதவி செய்வதாக எண்ணிக் கொண்டு சமையலறையிலிருந்த ஒரு கிலோ கத்தரிக்காயையும் நாற்காலி வைத்து ஏறிப் பரணில் போட்டு விட்டு வந்தேன். நான் செய்ததை அப்பாவிடம் பெருமையாகக் கூறினேன். அவர் கோபத்தை மறந்து சிரித்தார். மற்றவர்களும் சிரித்தனர். பிறகுதான் புரிந்தது. அவர் கூறியது கத்தரிக்காயை அல்ல. என் தம்பியும், அம்மாவும் விளையாடிக் கொண்டிருந்த சதுரங்கக் காய்களை என்று. இதைப் புரியாது நான் செய்த அசட்டுத்தனத்தை எண்ணிச் சிரித்துக் கொண்டேன்.

அனந்தபுரம், டி. தென்றலரசு.

எங்கள் ஊரில் நடந்தது! எங்கள் ஊரில் நடந்தது!

குறைக்கக் கூடாதா?

ஒருநாள் நானும் எனது ஐந்து வயதுத் தம்பியும் கடைத் தெருவுக்குச் சென்று காய்கறி வாங்கினோம். காய்கறி விலை அதிகமாக இருந்ததால் "குறைச்சு சொல்லக் கூடாதா?" என்று கேட்டேன். கேட்டதால் கடைக்காரரும் விலையைக் கொஞ்சம் குறைத்துக் கொடுத்தார். பின்னர் வீட்டிற்குத் திரும்பி வரும்போது நான் ஒருவரிடம் "மணி எவ்வளவு?" என்று கேட்டேன். அவரும் "பன்னிரண்டு" என்று கூறினார். உடனே என் தம்பி, "கொஞ்சம் குறைச்சுச் சொல்லக் கூடாதா?" என்று கேட்டானே பார்க்கலாம்! எல்லோரும் சிரித்தனர்.

செஞ்சி, கே. ஜெகன்நாதன்.





அம்மா சொல்லு!

சிறு குழந்தைகளுக்குச் சோறு ஊட்டும் போது, "அம்மாச் சொல்லு" என்பார்கள். அதைச் சொல்ல குழந்தை தன் வாயைத் திறக்கும். அப்போது சாதத்தை வாயில் ஊட்டி விடுவார்கள். அதே போல் எனது 5 வயதுத் தம்பி சபாபதியிடம், என் அம்மா, "அம்மாச் சொல்லு" என்றார்கள். உடனே என் தம்பி தன் வாயை இரு கைகளால் பொத்திக் கொண்டு "அம்மா" என்றானே பார்க்கலாம். அவனது குறும்புத்தனத்தை வெகுவாக ரசித்தோம்.

சோழன்மாளிகை, கு. கருணாநிதி.

என் வயது!

நான் எட்டாம் வகுப்பில் படிக்கிறேன். எனக்கு மூன்று தம்பிகள். ஒருநாள் எல்லோரும் ஊருக்குச் சென்றோம். பஸ்சில் என் கடைசித் தம்பிக்கு டிக்கெட் எடுக்கவில்லை. கண்டக்டர் அவனுக்கு டிக்கெட் எடுக்க வேண்டும் என்று அப்பாவிடம் கூறினார். அப்பா அவனுக்கு "ஐந்து வயது கூட ஆகவில்லை" என்றார்கள். உடனே கடைசித் தம்பி "எனக்கு ஐந்து வயது ஆகலையா! யார் சொன்னது? ஏழாவது வயது நடக்கிறது" என்று கண்டக்டரிடம் கூறி விட்டான். பஸ்சில் உள்ள அனைவரும் சிரித்தார்கள்! கண்டக்டர்

உட்பட. பாவம் அப்பா! அசடு வழிய தம்பிக்கும் டிக்கெட் எடுத்தார்!

வடக்குவேப்பிலாங்குளம், எஸ். மகேந்திரன்.

பட்டபாடு!

கடந்த ஆண்டு, மைசூர், பெங்களூர் போன்ற இடங்களுக்கு சுற்றுலா சென்றிருந்தோம். எங்கள் ஒருவருக்கும் கன்னடம் தெரியாது. இருப்பினும் என் நண்பன் ஒருவன் தனக்குக் கன்னடம் தெரிந்தது போல் காண்பித்துக் கொள்ள கன்னட தினசரி ஒன்றை வாங்கி, கைகளில் விரித்து வைத்துக் கொண்டு படிப்பது போல் பாவனை செய்தான். கன்னடக்காரர் ஒருவர் அருகே வந்து அவனிடம் தினசரியைப் படிக்கக் கேட்டது மட்டுமின்றி, கன்னடத்தில் அவனுடன் உரையாடவும் செய்தார். பதிலுக்குப் பேச முடியாத நண்பன் தலையை மட்டும் ஆட்டினான். மொழி தெரியாமல் அவன் பட்டபாடு உள்ளதே அதை இன்று நினைத்தாலும் சிரிப்பாக உள்ளது.

விசலூர், ஜி.ஜி. கிருஷ்ணன்.





குறள் விளக்கம்!

எங்கள் தமிழ் வாத்தியார் மாணவர்களிடம் அன்பாகப் பழகுவார். பாடம் நடத்தும் பொழுது இடையே சிரிப்பாகவும் பேசுவார். ஒருநாள் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது, திடீரென்று நிறுத்தி விட்டு, "நான் ஒரு குறள் கூறுகிறேன். அதற்குச் சரியான குறள் விளக்கம் கூற வேண்டும்" என்று கேட்டார். கடைசி பெஞ்சில் ஓர் ஓரமாக மாணவன் ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி, 'தீயினால் சுட்டபுண்' என்ற குறளுக்கு, புரியும்படியா விளக்கம் சொல்" என்று கேட்டார். அவன் எழுந்து, "தீயினால் சுட்டபுண் பர்னால் போட்டால் ஆறிடும். ஆனால், நாவினால் சுட்ட வடு எந்த மாதிரி பர்னால் போட்டாலும் ஆறாது!" என்று கூறினான்! வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது.

ஈரோடு, ச. மகேஷ்.

எங்கள் ஊரில் நடந்தது! எங்கள் ஊரில் நடந்தது!

நியாயமா?



மல்லுக்குடி கிராமத்தில் சந்திரன் விவசாயம் செய்து வந்தான்.

கிராமத்தில் நிறையப் பேர் வெளி நாடுகளுக்குச் சென்று வேலை செய்து வந்தார்கள். அவர்களில் கமலும் ஒருவன். அவன் வெளிநாட்டில் பெரிய பதவியில் மிகுந்த செல்வாக்குடன் இருந்தான். மல்லுக்குட்டியிலிருந்தும், அதன் அருகேயுள்ள கிராமங்களிலிருந்தும் வருபவர்களுக்கு அவன்தான் வேலைக்கு ஏற்பாடு செய்து வந்தான். அதனால் அவனுக்கு ஒரே கர்வம். வேலை தேடி வருபவர்களை அவன் மிகவும் இழிவாகப் பேசுவான்.

ஒருமுறை கமல் மல்லுக்குடி கிராமத்திற்கு வந்தான். ஊர் மக்கள் பெரும்பாலோரது சுற்றத் தார்கள், அவனிடம்தான் வெளிநாட்டில் வேலை செய்து வந்தனர். அதனால் எல்லோரும் அவனைக் கொண்டாடிப் புகழ்ந்தார்கள். ஏற்கெனவே பெருமை தலைக் கேறியிருந்த கமலுக்கு இன்னும் அதிகமாகக் கர்வம் ஏற்பட்டது. "என்னிடம் வந்து வேலை செய்யாத வீடும் இந்த கிராமத்தில் இருக்கிறதா?" என்று கேட்டான்.


"இருக்கிறதே" என்று பதிலளித்த ஒரு பெரியவர், சந்திரனைக் குறிப்பிட்டார்.

"இந்தக் கிராமத்தில் உள்ளோர் அனைவரும் வெளிநாட்டுக்குச் சென்றுதான் வேலை செய்கிறாகள். நீ மட்டும் ஏன் இங் கேயே வேலை செய்கிறாய்?" என்றான் கமல். சந்திரன் சற்று சிரித்து விட்டு, "கமல், "இந்தக் கிராமத்தில் இருக் கின்ற நிலம், வளம் எல்லாவற்றையும் விட்டு விட்டு எல்லோரும் வெளிநாடு களுக்குச் சென்று விட்டால் இங்கு உள்ள நிலத்தை யார் அறுவடை செய்வார்கள்? அப்பா அம்மாவுக்கு உடல்நிலை சுகமில்லை என்றால் உடனே தன்னி வைத்து வேறு அப்பா அம்மாவையா அழைத்து விடுகிறோம்? இந்த மண், நீர், காற்று எல்லாம் தானே நம்மை உருவாக்கி யவை? இவை பாதிக்கப்பட்டு இருக்கையில் நாம் வளமான வாழ்க்கையை நாடி வெளிநாடு போவது எந்தவிதத்தில் நியாயம்?" என்றான் சந்திரன்.

கமல் தலையைக் குனிந்து கொண்டு, "என்னை மன்னித்து விடு சந்திரா," என்றான்.

— வே. கனிமொழி.

மு.ஜா. மகேஷ்!



காட்சி — 1

(மதுரை பஸ் ஸ்டாண்ட்டுக்கு வெளியே பஸ் நிறுத்தம். கையில் பெட்டியுடன் ரமணி நின்று கொண்டிருக்க, மகேஷ் பெட்டியுடன் வருகிறான்.)

மகேஷ் : (ரமணியை உற்றுப் பார்த்து) நீ ரமணி இல்லே?

ரமணி : (மகேஷைப் பார்த்து) ஆமாம். நான் ரமணியேதான். ஆமாம் நீ வந்து... வந்து... (தலையைச் சொரிகிறான்)

மகேஷ்: (சிரித்து) நான் மகேஷ். இதுக்குள் ஒன்னாப் படித்த நண்பர்களின் பெயரைக் கூட மறந்து விட்டியே ரமணி.

ரமணி : இப்போ நினைப்பு வருது. நீ முன் ஜாக்கிரதை மகேஷ்தானே? இதைச் சுருக்கி மு.ஜா. மகேஷ்னு கூப்பிடுவாங்க இல்லையா? உன் பெயரை மறந்தாலும் உன்னுடைய முன்ஜாக்கிரதை நடவடிக்கைகளை மறக்க முடியுமா மகேஷ்? ஆமாம்... இன்னும் நீ அப்படியேதான் இருக்கியா? இல்லே மாறிட்டியா?

மகேஷ் : இதெல்லாம் பிறவிக் குணம் ரமணி. எங்க தாத்தா, அப்பா எல்லோரும் என்னைவிட முன் ஜாக்கிரதை இருப்பவங்க. அவங்ககிட்டேருந் தான் எனக்கு இந்த குணம் வந்திருக்க வேண்டும்.

ரமணி : பாவம் மகேஷ் நீ.

மகேஷ் : எதுக்காக என்னைப் பார்த்து நீ பரிதாபப் படறே? இது மாத்திக்க வேண்டிய குறைபாடுள்ள குணம் அல்ல ரமணி. உண்மையில, என்னைக் கிண்டலும் கேலியும் பண்றதுக்காக நீங்கள் எல்லோரும் எனக்கு மு.ஜா. மகேஷ்னு பட்டம் வைத்து கலாட்டா பண்ணிக் கூப்பிட்டீங்க. இதனால எனக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லே. இன்னும் சொல்லப் போனால், இந்த 'முஜா' பட்டத்தைப் பார்த்து நான் பெருமைப் படறேன். முன் ஜாக்கிரதையோடு இருப்பதால் நமக்கு இழப்பு ஏதும் இல்லை. இன்னும் கேட்டால் இதனால் நமக்கு நன்மையே. இதை என்றைக்காவது ஒரு நாள் கண்டிப்பா உணர்ந்து வருத்தப் படுவே. ஆமாம்... நீ எங்கே இப்படி மதுரைக்கு வந்திருக்கே?

ரமணி : இலக்கிய மணின்னு இங்கே மதுரையிலேருந்து ஒரு வாரப்பத்திரிகை வருதே? அதுக்கு ஓவியர் வேணும்னு நாளிதழிலே கேட்டிருந்தாங்க. விண்ணப் பம் போட்டேன். இன்னிக்கு வரச் சொல்லிக் கடிதம் வந்தது. அதான் வந் திருக்கேன்.

மகேஷ் : அட! நானும் அதுக்குத் தான் வந்திருக்கேன். அவங்களே அவங்க

அலுவலக அவுட் ஹவுசில் தங்கலாம்னு எழுதியிருந்தாங்களே... போகலாமா?

(இருவரும் போகிறார்கள்)

காட்சி – 2

(இலக்கியமணி பத்திரிகையின் அலுவலக அவுட் ஹவுஸ் அறை. ரமணியும் மகேஷும் வருகிறார்கள்)

ரமணி : என்னென்னவோ கேள்வி கேட்கப் போறாங்கன்னு நினைச்சேன் ஒண்ணுமே கேட்கலையே!

மகேஷ் : அது மட்டுமா! ரெண்டு பேரையும் ஒன்றாகவே அழைத்து, உட்கார வைத்து, குடும்பம், ஓவியப் பயிற்சி எல்லாத்தையும் பத்திக் கேட்டாங்களே? இன்னிக்கே முடிவு வரும். ஊருக்குத் திரும்பிடலாம்னு நினைச்சேன். நாளைக்கும் இருக்கணும் போலத் தெரியுதே?

ரமணி : மகேஷ், நீ மதுரைக்கு இதுக்கு முன்னாடி வந்திருக்கியா?

மகேஷ் : இல்லை ரமணி. இப்பத்தான் முதல் தடவையா வரேன். நீ...?

ரமணி : நானும் இப்பத்தான் முதல் முறையா வரேன். சாப்பிட்டதும் வெளியே போய் ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம். வரயா?


மகேஷ் : ரமணி, நாம எதுக்காக இங்கே வந்திருக்கிறோம் என்பதை மறந்துட்டியா? ஆளுக்கு ஒரு சிறு கதையைக் கொடுத்து, அதுக்கு ஏற்றபடி படம் போட்டுக் காலைல ஏழு மணிக்கு ஆசிரியரை வந்து பார்க்கச் சொல்லியிருக்காங்களே?

ரமணி : நாளை காலை ஏழு மணிக்குத்தானே? இப்போ மணி பன்னிரண்டு. இன்னும் பத்தொன்பது மணி நேரம் இருக்கு. இரவு எட்டு மணிக்குத் திரும்பி வந்தாக் கூட பத்து மணிக்குள் போட்டு முடித்து விடலாம்.

மகேஷ் : கதையைப் படித்து விட்டுப் படம் போட இரண்டு மணி நேரம் போதும் என்றால், படம் அந்த அளவுக்குத்தான் அமையும். நாம நல்லா கற்பனை பண்ணி பார்த்துத்தான் எழுதணும்னு அவங்க இத்தனை அவகாசம் தந்து, இருக்க இடமும் தந்திருக்காங்க. திரும்பி வரும்போது களைத்துப் போயிடுவோம். அதனால், படத்தையும் ஏனோ தானோன்னுதான் போடுவோம். அது மட்டுமல்ல, இரவில் ஏதாவது எதிர் பாராத இடையூறு ஏற்படலாம் இல்லையா?

ரமணி : (சிரித்து) டேய் மு.ஜா. மகேஷ். நீ இன்னும் மாறவே இல்லைடா. அப்படியேதான் இருக்கே! நான் வரேன்.

மகேஷ் : (சிரித்து) நீயும் கூடத்தான்



மாறவே இல்லை ரமணி. பழைய மாதிரியேதான் இருக்கிறாய். போய் வா.

காட்சி — 3

(அவுட் ஹவுஸ் அறை. இரவு. மகேஷ் உறங்கிக் கொண்டிருக்க கதவை யாரோ தட்டுகிறார்கள். மகேஷ், விளக்கைப் போட்டுக் கதவைத் திறக்கிறான்)


மகேஷ் : ரமணியா! (கடிகாரத்தைப் பார்த்து) ஐயோ மணி பத்தரையா! இப்பத்தான் திரும்புகிறாயா?

ரமணி : ஆமாம் மகேஷ். சுற்றுலா பஸ்லதான் கிளம்பினோம். அழகர் மலைக்கிட்டே பஸ் ரிப்பேர் ஆயிடிச்சு. அதை சரி பண்ணிக்கிட்டுக் கிளம்ப நேரமாயிடிச்சு. அதோட, திரும்பி வரும் போது, ஒரு பயணி தன்னுடைய பையில் வைத்திருந்த ஐநூறு ரூபாய் பணத்தைக் காணோம்னு கத்தி ரகளை பண்ணினார். பஸ்ஸை நேராப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனாங்க. அங்கே ஐம்பத்தைந்து பயணிகளையும் தனித்தனியாக சோதனை போட்டு அப்புறம்தான் போக அனுமதித்தாங்க. சாப்பிடக்கூட இல்லை. காலையில் இங்கே சாப்பிட்டதுதான். பசி வேறு வயித்தைக் கிள்ளுது.

மகேஷ் : என்னிடம் ரொட்டியும் உப்புவெண்ணெயும் இருக்கு. இவங்க நம்மை இத்தனை வசதியாத் தங்க வைப்பாங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. அதனால், எதுக்கும் கையோட இருக்கட்டும்னு இங்கேதான் மதுரை பஸ் ஸ்டாண்டில் இறங்கியதும் வாங்கினேன். இப்போ உனக்கு பயன்படப் போகுது.

ரமணி : நன்றி மகேஷ். ரொட்டியைத் தின்னுட்டு ஆரம்பிக்க வேண்டியதுதான். நீ போட்டு முடிச்சுட்டியா?

மகேஷ் : முடிச்சுட்டேன்... அதோ அந்த நீல உறையில் வைச்சிருக்கேன். பார்த்துட்டு அப்படியே வைச்சுடு.





"யானைக்கு மதம் பிடிச்சிடுச்சாம்."
"எந்த மதம்?"

— பழனி

நான் தூங்கப் போறேன் ரமணி.

ரமணி: *(நீல உறையைத் திறந்து பார்த்து மனதிற்குள்)* என்னமா வரைந்திருக்கான்! குற்றால அருவிக் காட்சியை நேரிலேயே பார்ப்பது போல இருக்கே!

காட்சி — 4

(அதே அவுட் அவுஸ் அறை. மகேஷ் உறங்கிக் கொண்டிருக்க, ரமணி அவனை எழுப்புகிறான்)

ரமணி : மகேஷ்... கொஞ்சம் கண்ணை முழிச்சுப் பாறேன். *(மகேஷ் பார்க்க)* ஒரு சிக்கல்ல சிக்கிக் கிட்டிருக்கேன் மகேஷ்... படிச்சுப் படம் போடச் சொல்லித் தந்திருக்கிற கதை... ஹிந்தியில் எழுதப்பட்ட கதை மகேஷ்! அந்தக் கவரையே நான் இப்பத்தான் பிரிச்சுப் பார்த்தேன் மகேஷ். எனக்கு ஹிந்தி தெரியாது...

மகேஷ் : எனக்கு தெலுங்கில் எழுதின கதையைத் தந்திருந்தாங்க. நீ போனதும், படிச்சுப் பார்க்க எடுத்தால் அதிர்ச்சியாக இருந்தது. உடனே எடுத்துக்கிட்டுப் போனேன். 'சாரி, மன்னிச்சுக்குங்க,' மாறிடுச்சுன்னு சொல்லி வேற கதை கொடுத்தாங்க. படிச்சுப் படம் போட்டு முடிச்சேன்.

ரமணி : நீ சொல்றதைப் பார்த்தால், வேணும்னே இப்படி வைச்சிருப்பாங்களோன்னு தோணுது. முதல்லயே பார்த்திருந்தால், உடனே நீ பண்ணின மாதிரி வேற கதை வாங்கி வந்திருக்கலாம். இப்ப என்ன பண்ணுவேன் மகேஷ்?

மகேஷ் : கவலைப் படாதே. எனக்கு நல்லா ஹிந்தி தெரியும். நான் கதையை உனக்கு படிச்சு சொல்றேன். நீ படம் போடு.

ரமணி : உனக்கு எப்படி நன்றி சொல்லுவேன்னே எனக்கு தோன்றலே மகேஷ்.

காட்சி — 5

(அதே அவுட் ஹவுஸ் அறை. மகேஷ் கதையைப் படித்துக் கொண்டிருக்க, ரமணி கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறான். திடீரென்று விளக்கு அணைகிறது)

ரமணி : ஐயோ...! இந்த ஒரு தடை தான் பாக்கியிருந்தது. இதுவும் வந்தாச்சு.

மகேஷ் : மனத்தைத் திடப்படுத்திக் கொள் ரமணி. பாதிக் கதையைக் கேட்டு விட்டாய். இதை வைத்து கற்பனை பண்ணிக் கொண்டு, விளக்கு வந்ததும் படத்தைப் போட்டு முடி. நான் தூங்கப் போறேன்.

ரமணி : எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்.

காட்சி — 6

(அதே அறை. மின்சாரம் வரவில்லை)

ரமணி : *(தனக்குள்)* மணி மூன்றாகப் போகிறது. இனிமே விளக்கு வந்தால் கூட என்னால் ஏழுமணிக்குள் படம் போட்டு முடிக்க முடியாது. மு.ஜா. மகேஷ்னு இந்த அசடுக்கு பட்டப் பெயர் வைச்சவன் நான். இப்போ அவன் புத்திசாலியாகி என்னை அசடாக்கி விட்டானே! இதை அனுமதிக்கக் கூடாது. *(நீல உறையை எடுத்து)* எனக்கு நேரப் போகின்ற அதே நிலைதான் உனக்கும் ஏற்பட வேண்டும் மகேஷ் *(கிழித்து ஜன்னலுக்கு வெளியே போடு கிறான்.)*

காட்சி — 6

(பத்திரிகை ஆசிரியர் அறை. ஆசிரியர் தனி மேஜையில் அமர்ந்திருக்க எதிரே ரமணியும் மகேஷும் உட்கார்ந்திருக்கின்றனர்)

ஆசிரியர் : *(ரமணியிடம்)* ஆக, எதிர்

பாராத சில நிகழ்ச்சிகளால் உன்னால் படம் போட முடியாமல் போய்விட்டது. சரி (மகேஷின் பக்கம் திரும்பி) தம்பி மகேஷ், உன் நிலை என்ன? படம் தயாரா?

மகேஷ் : இதோ படம் சார் (நீல உறையைத் தருகிறான். ரமணி திகைப்புடன் பார்க்கிறான்)

ஆசிரியர் : கடமை என்பது மூட்டை சுமப்பதைப் போல. மூட்டை சுமப்பவனை இளைப்பாறச் சொன்னால், அவன் என்ன பண்ணுவான்! மூட்டையை இறக்கி வைத்துவிட்டுப் பிறகே இளைப்பாறுவான். கடமை இருக்கும்போது; பொறுப்பு இருக்கும்போது அதை முடித்து இறக்கி வைத்து விட்டுப் பிறகே பொழுது போக்கவோ, இளைப்பாறவோ செய்யலாம். பத்திரிகை அலுவலகப் பணி என்பது எளிதல்ல. கடைசி நிமிஷத்தில்தான் ஒரு கதையோ, கட்டுரையோ வரும். அதைப் படித்து விட்டு பொருத்தமான படத்தை உடனே வரைந்து தர வேண்டும். தள்ளிப் போடவே முடியாது. உங்கள் குணத்தை அறியவே மகேஷுக்கு தெலுங்குக் கதையும், உனக்கு ஹிந்திக் கதையும் தந்தேன். மகேஷ் உடனே கவனித்துவிட்டு வேறு கதை வாங்கிக் கொண்டு போய், முன்னதாகவே படத்தை முடித்து விட்டான்.

(ரமணி தலை குனிகிறான்)


ஆசிரியர் : ஆனால் நீயோ, கதை என்று தந்ததை இரவு பத்து மணிவரை பிரித்துக்கூடப் பார்க்க வில்லை. நல்ல வேளை. மகேஷ் இந்தியில் படித்துச் சொல்லி கைகொடுத்தான். நான்தான் வேண்டுமென்றே மின் இணைப்பைத் துண்டித்து உன்னால் படம் போட முடியாதபடி பண்ணினேன்! நான் வைத்த சோதனைகளில் மகேஷ் தேறிவிட்டான். எந்த ஒரு செயலைச் செய்யும் போதும், அதைச் செய்ய விடாது என்னென்ன தடைகள் வரக்கூடும் என்பதை எதிர் பார்த்து, தடைகளைக் கடந்து, எடுத்த செயலை முடிப்பதுதான் அறிவுள்ளவர்களின் செயல் என்கிறார் திருவள்ளுவர். இங்கே என்னவெல்லாம் இடையூறுகள் ஏற்படலாம் என்பதை எதிர்பார்த்து கொடுத்த பணியை உடனுக்குடன் முடித்திருக்கிறான் மகேஷ்.

மகேஷ் : என்னை மு.ஜா. மகேஷ் என்று கிண்டல் பண்ணி மகிழ்ந்தாயே தவிர, என் முன் ஜாக்கிரதையால் யாருக்கும் கெடுதல் இல்லை என்பதை உணரத் தவறிவிட்டாய். நான் இங்குமட்டும் தடைகளை எதிர்பார்க்கலே. உன்னிடம் இருந்தும் தடையை எதிர்பார்த்தேன். அதனால்தான், படத்தை நீ பார்த்த பிறகு இருட்டில் உனக்குத் தெரியாது, வேறு நீல உறையை வைத்து படத்தைக் காப்பாற்றிவிட்டேன். நீ கிழித்துப் போட்டது அதைத்தான். என் முன்ஜாக்கிரதை என்னைக் கடைசி வரை கைவிடவில்லை.

உறுபொருள் ஓரால் உற்றபின் ஒல்காமை
இவ் விரண்டின்
ஆறு என்பர் ஆய்ந்தவர் கோள். (குறள்)

"விக்டோரியா மகாராணியின் பேரன்களில் ஊதாரித்தனமாகச் செலவு செய்யும் பேரன் ஒருவன் தன் பிறந்த நாளுக்குப் பணம் அனுப்புமாறு ராணியாருக்கு மடல் எழுதியிருந்தான். மகாராணியார் பணம் அனுப்பாமல் அவனது ஊதாரித்தனத்தைக் கண்டித்தும், அறிவுரை கூறியும் கடிதம் அனுப்பினார். அதற்கு பேரனிடமிருந்து வந்த பதில் ராணிக்கு வியப்பை அளித்தது. பேரன் திருந்தி விட்டான் என நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை! பிறகு என்ன நடந்தது? மகாராணியார் கைப்பட எழுதிய கடிதமெனக் கூறி அதை ஐந்து பவுனுக்கு விற்றுவிட்டேன். பணம் அனுப்பாவிட்டாலும், அனுப்பிய அறிவுரைக் கடிதத்திற்கு மிக்க நன்றி" எனப் பேரன் எழுதியிருந்தான்."

— எஸ்.பி. முத்துமாரி, கல்லூரணி.



கேளுங்கள் சொல்லப்படும்

● தமக்கை என்பது சமஸ்கிருதமா? இல்லை தமிழ்ச் சொல்லா?


- வெ. கணபதி,
பாலூர்.

தமக்கை என்பது தம்+அக்கை என்பதன் சேர்க்கை. சமஸ்கிருதம் அல்ல. மூத்தவள், அக்காள், அக்கைச்சி என்பவை என்பன சரியான தமிழ்ச் சொற்கள் 'தம்' சேர்த்ததால் வந்த விளைவே 'தமக்கை'!

● குதிரைகளைப் போல் வரிக் குதிரைகளைக் கொண்டு வண்டி ஓட்ட முடியுமா?

- தா. ராஜகோபாலன்,
மன்னார்குடி.

லார்டு ரோத்சைல்டு (LORD ROTHSCHILD) என்ற இயற்கையாளர் தன்னுடைய கோச் வண்டியை



இழுக்க வரிக் குதிரைப் படையையே வைத்திருந்தாராம்! அதனால் வரிக்குதிரையை, சாதாரணக் குதிரையைப் போலவே வண்டி இழுக்க வைக்க முடியும் என்றாகிறது. ஆனால், வரிக் குதிரை வண்டியை தெருக்களில் ஓட்டிச் செல்ல நகராட்சிகள் அனுமதிக்குமா என்பது தெரியாது!

● கொரில்லாக்கள் மனிதர்களைப் போலவே எல்லாம் செய்யும் என்கிறார்களே? அவை சித்திரம் வரையுமா?

- சி. மாலினி,
கந்தர்வகோட்டை.

கொரில்லாக்கள் சித்திரம் வரையுமா?

டிரம், கிடார் வாசிக்கும் கொரில்லாக்கள் உள்ளன. இங்கிலாந்தில் பால்டிமோர் (BALTIMORE) என்ற நகரத்தில் ஓர் உயிர்க் காட்சி சாலை இருக்கிறது. இங்கு ஒரு பெண் கொரில்லா இருந்தது. பெயர் BETSY. இந்த கொரில்லா ஓவியம் வரையும் திறமையுடையது. இது மிருகக் காட்சி சாலையில் எழுபது ஓவியங்களை வரைந்தது. இவை ஏலம் விடப்

பட்டன. ஒவ்வொன்றும் எழுபத்தைந்து டாலர் வரை விலை போனது! இந்தத் தொகையைக் கொண்டு இந்த கொரில்லாவுக்கு ஒரு மாப் பிள்ளையை வாங்கித் தந்தார்கள்! பழக்கினால் எதுவும் சாத்தியமே!

● **கண்ணீர் குண்டுக்குப் (TEAR GASS) பயப்படாதவர்கள் இருக்கிறார் களா?**

- கா. ராமஜெயம்,
பூண்டி.

மனிதர்கள் இருக்கிறார்களோ என்னமோ தெரியாது. ஆனால், கண்ணீர் குண்டுக்கு அஞ்சாத ஒரு நாலு காலர் இருக்கிறார். அவருக்கு இந்த குண்டு எந்தப் பாதிப்பையும் செய்வதில்லை (IMMUNED) என்பது அண்மைக் காலக் கண்டுபிடிப்பு! அவர் வேறு யாருமல்ல. குதிரையார்தான்!

● **கோனி மீட்டர் என்பது என்ன? இது எதற்குப் பயன்படுகிறது?**

- வி. தணிகாசலம்,
லால்குடி

மாதிரிக்காக சேகரிக்கப்பட்டுள்ள



காற்றில், தூசின் விதம் எத்தனை உள்ளது என்பதைக் கண்டுபிடிக்கும் கருவியே கோனி மீட்டர்.

● **பாலைத் தயிராக்குவது ஒரு வகை பாக்டீரியா என்கிறீர்களே, இதன் பெயர் என்ன?**

- கா. சலாவுதீன்,
சிவகங்கை.

பாலைத் தயிராக்கும் பாக்டீரியாவின் பெயர் லேக்டோபேசிலஸ் (LACTOBA CILLUS)

● **நம் கைரேகை மாறுபடுவது போல், விலங்குகளுக்கு மாறக்கூடிய உறுப்பு ஏதாவது உள்ளதா?**

- வா. சாய்கோபால்,
திருநின்றவூர்.

பசுவின் நாக்கில் உள்ள ரேகைகள், ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. ஒன்று போல் மற்றொன்று இருக்காது.


● **என் தம்பி சந்திரபாபுவுக்கு**

சேரநம்பி

பிறவியிலேயே ஒரு கால் ஊனம். 6வது படிக்கிறான். அவனுக்குத் தன்னம்பிக்கை வரும்படி ஏதாவது கூறுங்களேன்?

- காசி. ராஜாபாதர்,
பவானி.

சந்திரபாபு, உனக்கு ஒரு கால்தானே ஊனம்? இறைவன் கொடுத்த இரண்டு கைகள், ஒரு கால் இருக்கிறதே தம்பி? இதை வைத்துக் கொண்டு சவாலாக நீ முயன்றால் எதையும் சாதிக்கலாம். மற்றவர்களுக்கு அறிவில் நீ எந்த விதத்திலும் குறைந்தவன் அல்ல. பிரிட்டிஷ் கயானாவில் ரேண்டியன் (RANDION) என்று ஒரு குட்டி இளவரசன் பிறந்தான். ஆண்டு 1871. இவனுக்கு இரண்டு கைகளும் இல்லை! இரு கால்களும் இல்லை! இளவரசன் சோர்ந்து விடவில்லை. படிக்கக் கற்றான். வாய் உதடுகளுக்கு இடையே ஒரு பென்சிலைச் சிக்க வைத்துக் கொண்டு எழுதப் பழகினான்! ஒரு சர்க்கஸில் ஆட்டக்காரனாகி, லட்சக்கணக்கான மக்களின் பாராட்டு தல்களைப் பெற்று அசத்தினான். ஒரு சினிமாவில் கூட நடித்தான். மணந்து கொண்டு அப்பாவானான்.





வசதிகள் இல்லாத அந்த 18-ஆம் நூற்றாண் டிலேயே இரண்டு கைகள் இரண்டு கால்கள் இல்லாத ரேண்டியன் இப்படி அசத்தியிருக்கிறான் என்றால் ஒரே ஒரு கால் ஊனமான உன்னால் என்னதான் சாதிக்க முடியாது தம்பி? முயற்சி செய். தாழ்வு மனப் பான்மையை விரட்டியடி. நீ சாதனை புரியப் போவது உறுதி. ஆமாம், உன் முழு முகவரியைத் தரவில்லையே!

- தேசிய அளவில் அதிக நேரம் ஓடிய இந்திய திரைப்படம் எது?

- இ. நெல்லையப்பன்,
புதுகை.

! ராஜ்கபூர் தயாரித்த 'மேரா நாம் ஜோக்கர்' என்ற இந்தித் திரைப்படம் 4 மணி நேரம் ஓடியது. இதற்காக இரண்டு இடைவேளை விட்டார்கள்.

- புகழ்பெற்ற கால் பந்தாட்ட வீரர்கள் யாராவது சினிமாவில நடித்திருக்கிறார்களா?

- வா. சிக்கந்தர்,
வேலூர் - 2.

ஓ! பீலே (PELE) என்ற உலகப்

புகழ்பெற்ற இந்திய கால்பந்தாட்ட விரர் "HOT SHOT" என்ற ஆங்கிலப் படத்தில் நடித்திருக்கிறார்.

● சிங்கம் புலிகள் கூட அரண்டு ஓடும் பயங்கரமான செந்நாய் (HYENAS) மாமிசத்தை விரும்பிச் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார் களா?

- எச். புவனகிரி,
காட்டுமன்னார்கோயில்.

எகிப்தியர்கள் செந்நாய் மாமிசத்தை உணவாக்கிக் கொள்கிறார்கள்.





● அமெரிக்க ஜனாதிபதி ரெனால்டு ரீகன் ஒரு சினிமாவில் நடித்திருக்கிறார் என்பது உண்மைதானா? - மு. கண்ணகி,
முசிறி.

உண்மைதான். அரசியலில் ஈடுபட்டு ஜனாதிபதியாகுமுன் சினிமாக்களில் நடித்திருக்கிறார். நடிக்க வருமுன் வானொலி அறிவிப்பாளராகவும் பணியாற்றிப் புகழ்பெற்றிருந்தார். இதெல்லாம் கூட பிளஸ் பாயிண்டுகளாக இருந்து அவர் தேர்தலில் வெற்றி பெற உதவின.

"உங்க வீட்டிலே மொத்தமா எத்தனை பேர் இருக்கீங்க?"
"யாருமே மொத்தமா இல்லே. எல்லோரும் ஒல்லி யாத்தான் இருக்கோம்."

- எஸ். தட்சிணாமூர்த்தி





"மழை கொட்டுது! வாசலில் ஏண்டா நிக்கிறே...?"
"மழைக்குக் கொடுக்கு இருக்கான்னு பார்ககறேம்மா."

- எம். பி. எம். ராஜவேலு

காது கேட்காத ஒருவன் ஆட்டு மந்தையை மேய்த்துக் கொண்டிருந்தான். மத்தியான நேரமாயிற்று. அவனுக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது. பக்கத்தில் ஏர் உழுது கொண்டிருந்த ஒருவனிடம், "இந்த ஆடுகளைக் கொஞ்சம் பார்த்துக்கோ. நான் போய்ச் சாப்பிட்டு விட்டு வருகிறேன்" என்றான்.

பாவம், அந்த ஏர்க்காரனுக்கும் காது கேட்காது என்பது இவனுக்குத் தெரியாது. ஏர்க்காரன், ''இவன் என்னமோ சொல்கிறான். நாம் எதற்கும் தலையாட்டி வைப்போம்'' என்று நினைத்துத் தலையாட்டினான்.

ஆட்டுக்காரன் சந்தோஷமாக வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு வந்தான். அவன் வரும் வரை ஆடுகள் சிதறி ஓடாமல் ஒரே இடத்தில் மேய்ந்து கொண்டிருந்தன.

அதனால், ஏர்க்காரனுக்கு ஏதாவது வெகுமதி கொடுக்க வேண்டும் என்றெண்ணி, ஒரு காலொடிந்த ஆட்டைப் பிடித்துக் கொண்டு அவனிடம் போனான்.

ஆட்டுக்காரன் ஒரு காலொடிந்த ஆட்டைப் பிடித்துக் கொண்டு தன்னிடம் வருவதைக் கண்ட ஏர்க்காரன், அஞ்சி அரண்டு போய் விட்டான்.

ஆட்டுக்காரன், "இந்தாய்யா...! இத்தனை நேரம் நீ என்னுடைய ஆடுகளைப் பார்த்திட்டிருந்தியே, அதுக்கு வெகுமதியா இந்தக் காலொடிந்த ஆட்டை சும்மா வச்சுக்கோ'' என்றான்.

ஏர்க்காரனோ, "ஐய்யோ... நானா இதன் காலை ஒடிச்சேன்? என்ன அநியாயமாயிருக்கு! என் பாட்டுக்கு ஏர் ஓட்டிக்கிட்டிருக்கேன்! என்னிடம் வந்து 'காலை ஒடிச்சியா'ன்னு கேக்கிறியே? இது உனக்கே நியாயமாப் படுதா?" என்று அரற்றினான்.

அவன் என்ன சொல்கிறான் என்பது கேட்காத ஆட்டுக்காரனுக்குக் கோபம் வந்து விட்டது.

"என்ன...! காலொடிந்த ஆடு வேண்டாம், நல்ல ஆடு வேணும்னா கேக்குறே! நல்லாயிருக்கே கதை! கொஞ்ச நேரம் ஆடுகளைப் பார்த்திட்டிருந்ததுக்காக நல்ல ஆட்டைப் பிடிச்சுக் குடுக்க முடியுமா? அது

நாஞ்



முடியாது. இந்தக் காலொடிந்த ஆட்டைத்தான் குடுக்க முடியும். இந்தா வச்சுக்கோ'' என்றான்.

ஏர்க்காரன், "மறுபடியும் அப்படியே சொல்றியே! இதன் காலை நான் ஒடிக்கலே! எனக்கு ஒன்றும் தெரியாது'' என்றான். இருவரும் இப்படியே நீண்ட நேரம் வாக்குவாதம் நடத்திக் கொண்டிருந்தனர். பிறகு, நியாயம் கேட்பதற்காக அந்த ஊர் மணியக்காரரிடம் வந்தனர்.

இவர்கள் தங்கள் வழக்கை மணியக்காரரிடம் கொண்டு வந்த போது, அவர் தன் மனைவியிடம் சண்டையிட்டுக் கொண்டு சாப்பிடாமல் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.

ஆட்டுக்காரன் முதலில் சொன்னான்.

''கொஞ்ச நேரம் ஆட்டைப் பார்த்துக்கோ'ன்னு சொல்லிட்டு சாப்பிடப் போயிட்டேனுங்க. போயிட்டு வந்து ஒரு காலொடிந்த ஆட்டைப் பிடிச்சு வெகுமதியா குடுத்தா, அது வேண்டாம். நல்ல ஆடு தான் வேணும்'னு இந்த ஆள் கேக்கிறான். நீங்க தான் ஒரு நல்ல தீர்ப்பு சொல்லணும்.''



ஒழிக்கலே!

அவலை சொல்லி முடித்த பிறகு ஏர்க்காரன் சொன்னான். "நான் எந்தப் பாவமும் செய்யலீங்க. என் பாட்டுக்கு ஏர் ஓட்டிக்கிட்டிருந்தேன். இந்த ஆளு நான்தான் ஆட்டின் காலை ஒடிச்சேன்'னு சண்டைக்கு வர்றான். நீங்கதான் தீர்ப்புச் சொல்லணும்."

இருவரும் பேசி முடித்த பிறகு மணியக்காரர் கோபத்துடன் சொன்னார்.

"நீங்க ரெண்டு பேர் என்ன, இந்த ஊர் ஜனங்க அத்தனை பேர் வந்து சமாதானம் சொன்னாலும் சரி. இனிமே நான் என் மனைவியோட குடும்பம் நடத்தறதா இல்லை."

பாவம், அந்த மணியக்காரருக்கும் காது கேட்காது என்ற உண்மை ஆட்டுக்காரனுக்கும் ஏர்க்காரனுக் கும் தெரிந்திருக்கவில்லை. இருவரும் கையெடுத்துக் கும்பிட்டனர்.

மனைவியுடன் சேர்ந்து வாழவே அவர்கள் கெஞ்சுவதாக நினைத்து, "நீங்கள் என்ன கெஞ்சினாலும் நடக்காது" என்று வீறாப்புடன் பேசினார் மணியக்காரர்.

அந்த வழியாக வந்த வழிப்போக்கன் இவர்களுடைய சண்டையைக் கவனித்தார். மூவருக்கும் காது கேட்காது என்பதை அவர் புரிந்து கொண்டார்.

மணியக்காரரை வீட்டுக்குள் அனுப்பினார். கால் ஒடிந்த ஆட்டைத்தானே வாங்கிக் கொண்டு ஆட்டுக்காரனை அனுப்பினார். அவன் போன சிறிது நேரம் கழித்து, ஏர்க்காரனை அனுப்பினார். காலொடிந்த ஆட்டைத் தூக்கிக் கொண்டு தன் வீட்டுக்கு நடையைக் கட்டினார்.

வி. ஏ. சுப்பையன்

பார்க்கலாம்!

வான ஊர்தி ஏறியே
வான வெளி போகலாம்!
காணக் காண புதுமைகள்
கண்டு வந்து சொல்லுவேன்!



காற்றில் மிதந்து செல்லலாம்!
கடலும் மலையும் காணலாம்
கட்டுச் சோறு கட்டியே
களித்து சுவைத்து உண்ணலாம்!

ஆசை மட்டும் போதுமோ
அதற்கும் பணம் வேண்டுமே!
ஈசன் அருள் வேண்டலாம்
இன்னும் அதிகம் உழைக்கலாம்!

— வே. சுந்தரம், கூடலூர்.

பேனா!

நல்ல நல்ல பேனா
நீல வண்ணப் பேனா
இல்லை இதற்கு ஈடு
இருப்பின் உடனே கூறு!



முத்து முத்தாய் எழுத
மிகவும் உதவும் பேனா
சத்தம் இன்றி நன்கு
சொகுசாய் எழுதும் பேனா!

தேர்வில் நன்கு எழுத
தயக்கம் தரும் பேனா
இரண்டு எடுத்துச் சென்றால்
இனிது உதவும் பேனா!

— எச். சிக்கந்தர், காரைக்கால்.

தேடித்தான்!

மலரைத் தேடித் தேடித்தான்
முரலும் வண்டு சென்றிடும்.



இனிப்பைத் தேடித் தேடித்தான்
இணைந்து எறும்பு விரைந்திடும்.

நெல்லைத் தேடித் தேடித்தான்
நாட்டுக் குருவி பறந்திடும்.

பழத்தைத் தேடித் தேடித்தான்
பச்சைக் கிளியும் அலைந்திடும்

பணத்தைத் தேடித் தேடித்தான்
பாரில் மனிதர் உழைப்பாராம்!

— சி. மணி, வடாபுதுப்பட்டி.



திறந்தாச்சு!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு!
புதிய நண்பர் வந்தாச்சு!
எல்லா வகுப்பும் நிறைஞ்சாச்சு!
எதிலும் கவனம் பிறந்தாச்சு!

புத்தம் புதிய புத்தகம்
பொலிவு குறையா குறிப்பேடு
எத்தனை எத்தனை மலைக்கிறோம்
எப்படி சுமப்பது திகைக்கிறோம்!

புதிய பாடம் கேட்கவே
பலரும் ஆவல் காட்டுறோம்
எதையும் அறிந்து கொள்ளவே
ஆவல் பொங்க இருக்கின்றோம்!

— அ. கங்காதரன், கீழப்புலியூர்.



← "மந்திரியாரே! ஆறு, குளங்கள் நிரம்பி இருக்கா?"
"இல்லை மன்னா. மூன்று குளங்கள்தான் நிரம்பி இருக்கு!"

—செஞ்சி தா. ஷேக்உசேன்

'ஒண்ணுக்கு அப்புறம் மூணு'ன்னு சொல்றானே, யார் அவன்? →
என் 'ஒண்ணு விட்ட' தம்பி!!
!!!:::!!

- ப.கணேஷ்ராகவன்





தாங்க!

அம்மா, அம்மா, வாங்க,
ஆப்பிள் பழம், தாங்க!

அப்பா, அப்பா வாங்க,
ஆரஞ்சு பழம் தாங்க!

அண்ணா, அண்ணா, வாங்க,
அன்னாஸிப் பழம் தாங்க?

அக்கா, அக்கா வாங்க,
அத்திப்பழம் தாங்க!

தங்கையே தங்கையே வாம்மா,
தக்காளிப் பழம் தாம்மா!

மாமா, மாமா, வாங்க,
மாம் பழத்தைத் தாங்க!

மாமி, மாமி, வாங்க,
மாதுளம் பழம் தாங்க!

— ஏ.எம். ஜெகபர் சாதிக், காரை.

பாடு!

சின்ன, சின்ன பிள்ளைகளே,
சிரித்து ஓடி வாருங்கள்!



அன்பு உள்ள பிள்ளைகளே
அருகில் ஓடி வாருங்கள்.

முத்து முத்து பிள்ளைகளே
முறுவல் காட்டி வாருங்கள்.

ஆசை உள்ள பிள்ளைகளே,
அறிவில் சிறக்க வாருங்கள்!

நல்ல நல்ல பிள்ளைகளே
நன்றியுடன் வாழுங்கள்!

— ஏ.எம். சாதிக் மரைக்கான், காரை.

ரோஜா!

வண்ண வண்ண ரோஜா
வாசம் மிக்க ரோஜா.
வண்டு மொய்க்கும் ரோஜா,
வனப்பு மிக்க ரோஜா.

மஞ்சள் சிவப்பு என்று
மனதைக் கவரும் ரோஜா.
பஞ்சைப் போல மென்மை,
பட்டு அழகு ரோஜா.



பெருமை மிக்க ரோஜா,
பெண்கள் விரும்பும் ரோஜா.
அருமை நேரு அணிந்த
அழகு மிக்க ரோஜா.
— **சோம்நாத், அருண்குமார், விழுப்புரம்.**

மின் விசிறி!

காற்று தரும் மின் விசிறி!
கரண்டில் ஓடும் மின் விசிறி!
வேற்று மனிதர் வந்தாலும்,
வேற்றுமை காட்டா மின் விசிறி!


தலைகீ ழாகவே தொங்கிடுமாம்!
தட்டா மாலை சுற்றிடுமாம்!
தலைக்கு மேலே சுழன்றாடும்
துளியும் அயரா மின் விசிறி!

இறக்கை கொண்ட மின் விசிறி!
இரவிலும் இயங்கும் மின் விசிறி!
உறக்கம் அளிக்கும் மின் விசிறி!
உயர்ந்த பெருமை மின்விசிறி!
— **பொன் குமார், சேலம் - 6.**



முயலுங்கள்!

கயலைப் போல நீந்துங்கள்;
குயிலைப் போல பாடுங்கள்;
மயிலைப் போல ஆடுங்கள்;
மானைப் போல ஓடுங்கள்;



கிளியைப் போல பேசுங்கள்;
முயலைப் போல தாவுங்கள்;
பறவை போல இன்பமாய் -
பறக்க வானில் முயலுங்கள்.
— **ஐ. சுபத்ரா, போரூர்.**

தங்கப் பாப்பா!

தங்க நிற பாப்பாவாம்!
தத்தித்தத்தி நடக்குமாம்
தண்ணி கண்டால் போதுமாம்!
தப்பு தப்புன்னு தப்புமாம்!

அப்பா செல்லம் அவளானாலும்
அம்மா செல்லம் நான்தானே!
அண்ணா என்றே அழைத்திடுவாள்!
அன்பாய் நானும் கொஞ்சிடுவேன்.
— **நா. மல்லிகா, மேட்டூர் அணை -1.**

அன்புதான் தேவை!


பௌத்த துறவி நாகார்ச்சுனருக்கு ஓர் உதவியாளர் தேவைப்பட்டார். இந்த விஷயத்தை நாகார்ச்சுனரே பௌத்த மடத்துத் தலைவரிடம் தெரிவித்தார். அவரது விருப்பப்படியே மடத்துத் தலைவர் இரு இளைஞர்களை அவரிடம் அனுப்பி வைத்தார்.

நாகார்ச்சுனர் அந்த இருவரிடமும் ஓர் இரசாயனப் பொருளைக் கொடுத்து அதன் தன்மைகளைப் பிரிவு செய்து கொண்டு இரண்டு நாட்களில் கொண்டு வர வேண்டுமெனக் கூறினார். இருவரும் விடைபெற்றுச் சென்றனர்.

இளைஞர்கள் இருவரும் இரண்டு நாட்கள் கழித்து நாகார்ச்சுனரிடம் வந்தனர். ஒருவனிடம் பிரித்த இரசாயனப் பொருளின் பாத்திரம் இருந்தது. மற்றவன் வெறுங்கையோடு நின்று கொண்டிருந்தான்.

"நீங்கள் கூறியவாறே இரசாயனத்தைப் பிரிவு செய்து கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் முதல் இளைஞன்.

இரண்டாவது இளைஞன் நாகார்ச்சுனரைப் பார்த்து, "ஐயா, என்னை மன்னிக்க வேண்டுகிறேன். அன்று நான் தங்களிடம் விடைபெற்று இங்கிருந்து போகும்போது வழியில் ஒரு நோயாளி மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். உடனே நான் அந்நோயாளிக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தேன். அவரது நோய் குணம் பெற இரண்டு நாட்கள் ஆயின. அந்த இரண்டு நாட்களும் அவருக்குப் பணிவிடைகள் செய்வதிலேயே எனது பொழுதைக் கழிக்க வேண்டியதாகிவிட்டது. ஆகவே, தாங்கள் இட்ட பணியைச் செய்து முடிக்க முடியாத நிலையில் வந்திருக்கிறேன்" என்று பணிவுடன் தெரிவித்தான்.



நாகார்ச்சுனர் இளைஞர்கள் இருவரில், இரண்டாவது இளைஞரையே தனக்குத் துணையாளனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

இரசாயனப் பொருட்கள் அனைத்தும் உயிரினங்களுக்கு நலம் செய்வதற்குத் தானே? உயிரினங்களுக்கு அன்பு செய்யும் துடிப்பு இரண்டாவது இளைஞரிடம் அதிகமாக இருப்பதை நாகார்ச்சுனரால் அறிந்து கொள்ள முடிந்தது.

— **கிருஷ்ண. முத்துராமலிங்கம்**

புவனா தேடிய புதிர்

மதிஒளி

இதுவரை: 'யாழிசை' என்ற அழகிய பங்களாவின் முடிசூடா இளவரசியான சிறுமி புவனாவுக்குப் பிறந்த நாள் விழா கோலாகலமாக நடந்து கொண்டிருக்கிறது. ஏராளமான பரிசுகள் குவிகின்றன. கலை உணர்வு மிக்க புவனா, தன் தந்தையிடம் கேட்டிருந்த பிறந்த நாள் பரிசும் அளிக்கப்படுகிறது. அது ஒரு கலையழகு கொஞ்சும் வி.சி.ஆர். டீ.வி., ஸ்டாண்ட். அதை அவள் தந்தை ஈஸ்வர், பழைய கலைப் பொருள்கள் விற்கும் கடையில் இருந்து வாங்கி வந்திருந்தார். அடுத்த நாள் எல்லோரும் கூடியிருக்கும் போது புவனா, தன் வி.சி.ஆரைப் புதிய ஸ்டாண்டில் வைக்க வி.சி.ஆர். அறையைத் திறக்கிறாள். அதற்குள் ஒரு இரகசிய அறை இருக்கிறது. அந்த அறைக்குள் மிகப் பழைய கேசட் ஒன்று இருக்கிறது. அது கெட்டுப் போன பழைய கேசட். அதைப் போட்டால் வி.சி.ஆர். பழுதாகிக் கெட்டு விடும் என்று எல்லோரும் எச்சரிக்கிறார்கள். அதைப் பிடிவாதமாக ஏற்க மறுக்கும் புவனா, அந்தப் பழைய வீடியோ கேசட்டை வி.சி.ஆரில் போடுகிறாள். கரைந்து போன படம் திரையில் விட்டு விட்டுத் தெரிகிறது. கலைநயம் மிக்க மாளிகை ஒன்றின் பகுதிகள் தெரிகின்றன. பார்க்கப் பார்க்க, அவைகளை முன்பே எங்கேயோ பார்த்திருப்பது போன்ற உணர்வு புவனாவுக்கு ஏற்படுகிறது. ஆனால் எங்கு, எப்பொழுது, எப்படி என்பது தெரியவில்லை. எல்லோரும் திகைப்புடன் திரையைப் பார்த்துக் கொண்டிருக்க புவனா மட்டும் குழப்பத்தின் சிகரத்தில் நின்று தவித்துக் கொண்டிருந்தாள்.

2. மயங்கி விழுந்தாள்!



திரையில் வெள்ளையும் கருப்புமாகப் புள்ளிகள் நெளிந்தன. தூண்களோ, கோபுரங்களோ என்று உருவமே சரியாகத் தெரியாது இடையிடையே நெளிந்து ஓடின. மூன்று நிமிடங்கள் படம் தெரிந்தால், இரண்டு நிமிடங்கள் ஒரேயடியாக உருவம் தெளிவில்லாத காட்சிகளும், புள்ளிகளும்.

''எந்த ஊரோ? அரண்மனையோ இல்லை மாளி

கையோ? எதுவும் சரியாகத் தெரியவில்லை. இதை இப்படியே பார்த்தால் கண்ணுக்குக் கெடுதல்தான். வேண்டாம்மா. இதை எடுத்திட்டு, நம்மகிட்ட இருக்கிற நல்ல கேசட்டுகளில் எதையாவது ஒன்றைப் போடும்மா'' என்று அலுத்துக் கொண்டே கூறிய ஈஸ்வர் புவனாவின் முகத்தைப் பார்த்ததும் துடிதுடித்துப் போனார். அதில் குழப்பத்தின் சாயல் படிந்திருந்தது. இதற்குள் அம்மாவும் இதைக் கவனித்து விட்டாள்.

''என்னம்மா ஆச்சு புவனாக் கண்ணு?'' என்று அம்மா பதறி அருகே வர, அப்பாவும் ஓடி வந்தார். அம்மா அவளைத் தன் மடியில் ஆதரவாக சாய்த்துக் கொண்டாள். அப்பா நெற்றியைத் துடைத்து விட்டார். கேசட்டை நிறுத்தி விட்டு மின் விசிறியை வேகமாக்கி விட்டு மாமாவும் வந்தார்.

"எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லேம்மா'' என்று கூறிய புவனா, "நீங்க ரெண்டு பேரும் இந்த வீடியோ படத்தைப் பார்த்தீங்களே... உங்களுக்கு என்ன தோன்றியது?'' என்று கேட்டாள்.

"என்னம்மா! இதுலே படமா தெரிஞ்சுது?" என்று சலித்துக் கொண்டாள் அம்மா.

"ஏதோ தெரிஞ்சவரை என்னவோ புராதன ராஜாக்களின் அரண்மனை மாதிரி இருந்தது" என்றார் அப்பா ஈஸ்வர்.

''எனக்கும் கூட அப்படித்தான் தோன்றியது," என்று பதிலளித்து நிறுத்திய புவனா, "அப்பா, இந்த மாளிகைக்கு எப்பொழுதாவது நீங்க என்னை அழைச்சுக்கிட்டுப் போயிருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

''என்னம்மா இது குழப்பமான கேள்வி! இந்த மாளிகையைப் பார்த்தால் இது ஏதோ மேவார், சித்தூர், ராஜஸ்தானில் இருக்கும் ராஜபுத்திர மன்னர்களின் அரண்மனை மாதிரி இருக்கு. நான் எப்படிம்மா இங்கே உன்னைக் கூட்டிக் கொண்டு போயிருக்க முடியும்?''

''உங்கப்பாவும் நானும் வடக்கே திருப்பதியைக் கூடத் தாண்டிப் போகாதவர்கள்," என்று அப்பாவை ஆதரித்துப் பேசிய அம்மா, "ஏம்மா இந்தக் கேள்வியைக் கேட்டே?" என்று கேட்டாள்.

"எனக்கு என்னவோ இந்தக் கேசட்டில் வரும் பாழடைந்த அரண்மனையை நான் ஏற்கெனவே பார்த்திருப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. அதனால்தான் இதைக் கேட்டேன்."

அப்பாவும் அம்மாவும் அதிர்ச்சியும் கவலையும் நிறைந்த முகத்துடன் புவனாவை நோக்கினார்கள். மாமா ரவியும் திகைப்புடன் அருகே வந்து நின்று கொண்டார்.

''இதில் கவலைப்படும்படி ஒன்றுமே இல்லை. இந்தக் கேசட்டில் வரும் மாளிகையின் ஒவ்வொரு தூணையும், படிக்கட்டுகளையும் ஏற்கெனவே பார்த்திருப்பது போன்ற ஓர் உணர்வு எனக்கு ஏற்படுகிறது. முதலில் பிரமையோ என்று எண்ணினேன். பிறகு நன்றாக சோதித்துப் பார்த்த பிறகே இது பிரமை இல்லை என்ற முடிவுக்கு வந்தேன்.

"அப்படியானால், அதிசயச் செய்திகளில், கதைகளில் வருவது போல் உனக்கு போன பிறவியின் நினைப்பு வந்து விட்டதா?" - இது அப்பா.

"போன பிறவியின் உறவினர்கள், நண்பர்களைப் பற்றிய நினைப்பு வந்து விட்டதா? அவர்களைத் தேடிக் கொண்டு எங்களை விட்டு விட்டுப் போய் விடுவாயா?" - இது அம்மா ஈஸ்வரி. கேள்வியைக் கேட்டு முடித்ததும்

கடைசிப் படி தெரிந்தது. புவனா நெளிந்தாள். மயங்கிச் சரிந்தாள்!



துக்கம் தாங்காது அப்பா கலங்கலங்கினாள். இதே நிலை நீடித்தால் அம்மா அழுது விடுவது நிச்சயம்!

மாமா ரவி அதிர்ச்சியுடன் புவனாவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"அம்மா! அம்மா! நீங்கள் கலவரப் படுவது போல் பழைய பிறவியின் நினைவு ஏதும் எனக்கு ஏற்படவில்லை. பழைய பிறவியின் நினைப்பு ஏற்பட்ட எத்தனையோ நாவல்களையும் திரைப் படங்களையும் பார்த்தவன்தான் நானும். அது ஏற்பட்டால்தானே, பழைய உறவினர்களைப் பற்றிய நினைப்பும், அவர்களைக் காண வேண்டும் என்ற துடிப்பும் ஏற்படும்? எனக்கு இப்பொழுது தோன்றியுள்ளது, இந்தக் கேசட்டில் வரும் அரண்மனையை நாம் ஏற் கெனவே பார்த்திருக்கிறோம் என்ற நினைப்புத்தான். அதனால்தான் என்னை இந்த மாளிகைக்குக் கூட்டிக் கொண்டு போயிருக்கிறீர்களா என்று கேட்டேன்" என்றாள் புவனா.


"இல்லேம்மா. நாங்க இதுவரை திருப்பதிக்கு அப்பால் கூடப் போனதே இல்லை."

"ஒருவேளை, குஜராத் ராஜஸ்தான் மாநில கலாசாரத்தை விளக்கும் ஏதாவது கலைப் படத்தை நீ பார்த்திருக்கலாம். அந்த நினைப்பு இன்னும் மாறாமல் இருந்திருக்கலாம். அதனால், ஏற்கெனவே பார்த்தது போன்ற உணர்வு ஏற்பட்டிருக்கலாம் அல்லவா?" என்றாள் அம்மா.

"அந்த மாதிரி எதுவும் இல்லேம்மா. இப்படிப்பட்ட கலைப் படங்கள் எதையுமே இதுவரை நான் பார்த்தது கிடையாது" என்றாள் புவனா.

அப்பாவும் அம்மாவும் கவலையோடு அவளை நோக்கினர்.

"இந்த அரண்மனையின் அமைப்பு முழுக்க முழுக்க குஜராத் ராஜஸ்தான் மாநில கட்டட அமைப்பாகவே தோன்றுகிறது. எதற்கும் பாக்கிப் படத்தைத் தொடர்ந்து பார்க்கலாம்" என்ற ரவி, "ஒரு சோதனை புவனா. நீ இப்போ வர வேண்டாம். மாடியில் உன் படிப்பறையில் இரு. நான் அம்மா, அப்பா மூவரும், இந்தக் கேசட்டின் மீதிப் பகுதியைப்



போட்டு முதலில் பார்க்கிறோம். பிறகு இந்த மீதிப் பகுதியை மட்டும், எல்லோருமாக மறுபடி பார்க்கலாம். அடுத்து என்ன வரப் போகிறது என்பதை நீ சொல்லிக் கொண்டே வா. உனக்கு ஏற்பட்டுள்ள உணர்வு சரியானதுதானான்னு கண்டு பிடித்து விடுகிறோம்'' என்றார்.

''சரி மாமா'' என்று சிரித்து விட்டு மாடிக்குப் போனாள் புவனா.

அப்பாவும் அம்மாவும் வந்து அமர்ந்து கொண்டனர். மாமா ரவியும் கேசட்டை இயக்கி விட்டு, அவர்களோடு வந்து அமர்ந்து கொண்டார். விட்ட இடத்தில் இருந்து கேசட் தொடர்ந்து ஓடியது.


கேசட் இப்பொழுது பரவாயில்லை. உருவங்கள் பொருள்கள் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. கலையழகு கொஞ்சிய ஒரு மாளிகையின் பகுதிகள் நன்கு தெரிந்தன.

வராந்தாக்கள், காவல் கோபுரங்கள், மாடிப்படிகள், குளியல் தொட்டிகள், மணிக்கூண்டுகள், கேளிக்கை அரங்குகள், கலைக்கூடங்கள் என்று எல்லாம் தெரிந்தன. ஒவ்வொன்றிலும் ராஜஸ்தான் மாநிலத்தின் கட்டிட கலைத் திறன் வெளிப்பட்டது. ஆங்காங்கே தொங்கிய லஸ்தர் விளக்குகளும், ஊஞ்சல்களும், ஆடும் தொட்டில்களும் கலையழகை அள்ளி வீசின!

''ஏதோ ராணாக்களின் மாளிகையாகத்தான் இருக்க வேண்டும்'' என்று கூறிய ரவி, கேசட்டை 'ரீவைண்டு' பண்ணி இப்பொழுது பார்க்க ஆரம்பித்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தினார்.

''புவனா இனிமே வரலாம்'' என்று ரவி குரல் கொடுக்கவும் புவனா சிரித்துக் கொண்டே இறங்கி வந்து அமர்ந்து கொண்டாள். வீடியோ இயங்கியது. திரையில் படம் ஓடியது.

''அப்பா, இதோ இந்த வராந்தா தெரிகிறது இல்லையா? இது இப்போ இடது பக்கம் வளைந்து மாடிப் படிக்கட்டுக்



குக் கொண்டு போய் விடப் போகுது,'' என்று புவனா கூறிக் கொண்டிருக்கும் போதே வராந்தா வளைந்தது. மாடிப்படிக் கட்டுகள் தெரிந்தன. படிகளில் ஏறியதும் பரந்த கூடம் தெரிந்தது.

மாமா கேசட்டை நிறுத்தினார். புவனாவும் மற்றவர்களும் ரவியை நோக்கினர்.

"புவனா, இந்த அழகான கூடத்தில் ஒரு பொருள் இருக்கிறது. அது என்ன என்பதை இப்பொழுது கூறி விடு. நீ

எங்கப்பாதான்!



ரோட்டில் ஒரு இடத்தில் ஆக்ஸிடெண்ட் ஆகி, அதைச் சுற்றிப் பெரிய கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்திற்கு வெளியே ஒரு ஆசாமி நின்று கொண்டு எட்டி எட்டிப் பார்த்தார். ஒன்றுமே தெரியவில்லை. யாரும் வழி விடவும் இல்லை. ஒரு யோசனை தோன்றியது. உடனே 'ஐயோ! உள்ளே அடிபட்டு கிடப்பது எங்கப்பாதான். பார்க்க வழி விடுங்கள்' எனக் கத்தினார். எல்லோரும் அவரைக் கேலியாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டே வழி விட்டனர். அவர் அவசரம் அவசரமாக உள்ளே சென்று பார்த்தார். செத்துக் கிடந்தது ஒரு 'கழுதை'! முகத்தில் வழிந்த அசடைத் துடைத்துக் கொண்டே உடனே வெளியேறி விட்டார் அந்த ஆசாமி!

- முகம்மது மியான்தத்.

இந்த மாளிகைக்கு ஏற்கெனவே போயிருப்பவள் என்பதை ஒப்புக் கொண்டு, இது எங்கே இருக்கிறது என்பதையும் கண்டுபிடித்து உன்னைக் கூட்டிக் கொண்டு போகிறேன்" என்றார் ரவி.

புவனா ரவியைப் பார்த்துச் சிரித்தாள். பெற்றோர் இருவரும் திகைப்புடன் அவளை நோக்கினர்.

"இந்த அழகான கூடத்தில் ஒரு ஊஞ்சல் இருக்கு மாமா. இந்த ஊஞ்சலுக்கடியில் கீழ்ப் பக்கத்தில் சின்னச் சின்ன வெள்ளி மணிகள் இருக்கின்றன. ஊஞ்சல் ஆடும் போது இவையும் ஆடி ஒலி எழுப்பும்."

"அவ்வளவுதானா?"

"இந்த ஊஞ்சல் உயரமானது. இதில் சாய்ந்து உட்கார நம் ஊர் சோபாவைப் போல் முதுகு இருக்கு. இந்த முதுகுப் பக்கத்தில் கயிறு இருக்கு. இதைப் பிடித்து இழுத்து இழுத்து யாராவது ஊஞ்சலை ஆட்டுவார்கள்."

மாமா திகைப்புடன் கேசட்டை ஓட விட்டார். புவனா கூறியது போலவே சோபா முதுகு வைத்த ஊஞ்சல், அதன் கீழ்ப்பக்கம் வெள்ளி மணி வரிசைகள், மணிக்கயிறு எல்லாம் தெரிந்தன!

அப்பாவும், அம்மாவும், மாமாவும் கலவரமடைந்தனர்.

வீடியோ தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது.

கண்ணாடிச் சில் பதித்த அழகிய சாளரத்தை ஒட்டி, மாடிப்படிக்கட்டு வளைந்து வளைந்து கீழே சென்றது. படிகள் எல்லாமே மரத்தால் செய்யப்பட்டவை. பக்கக் கைப்பிடி வரிசை நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் இருந்தது. படிக்கட்டு கீழே சென்றது. ஒவ்வொரு படியாக வந்து கீழே கடைசிப் படி தெரிந்தது. புவனா நெளிந்தாள். அவள் உடலில் ஏதோ ஓர் அதிர்வு ஏற்பட்டது. மறு வினாடி... 'அம்மா...!' என்றலறியபடியே மயங்கிச் சரிந்தாள்.

(தொடரும்)

நேச நாற்காலி!

புகழ்பெற்ற அந்த இந்தியக் கவிஞர் 1924 ஆம் ஆண்டு நவம்பர் மாதம். அர்ஜெண்டீனா நாட்டில் சுற்றுப்பயணம் செய்யக் கப்பலில் கிளம்பிப் போனார். கடல் பயணம் அவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. இடைவழியில் உடல்நலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. எனவே, நடுவழியில் ஒரு நகரத்தில் இறங்கிக் கொண்டார்.

அந்த நகரத்தின் பெயர் 'போனஸ் அயர்ஸ்' என்பது. அங்கு ஓர் பெரிய ஓட்டலில் தங்கி விட்டார்.


கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பல்லவா? அவர் ஓட்டலில் தங்கி இருப்பதைக் கேள்விப்பட்டதும், அந்த நகரத்தில் வசித்த ஒரு பிரபல பெண் கவிஞர் அவரைச் சந்திக்க ஆவலோடு ஓடோடி வந்தார்.

அவரை வற்புறுத்தித் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

பெண் கவிஞரின் வீடு பெரிய அரண்மனை. கவிஞருக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்து, மிகவும் கவனமாக உபசரித்தார்.

அந்த அரண்மனையின் இயற்கை அழகில் தன்னைப் பறி கொடுத்தார் கவிஞர். ஒரு நாற்காலியை மரங்களின் நிழலில் போட்டுக் கொண்டு, அவர் பல கவிதைகளைப் புனைந்தார். அப்படி அவர் அங்கு எழுதிய காவியமே 'பூர்வி' என்பது. அதன் ஒரு கதாபாத்திரமாக அந்தப் பெண் கவிஞரே இடம்பெற்றார்!

உடல்நலம் நன்கு தேறி கவிஞர் விடைபெற்று இந்தியாவுக்குக் கிளம்பினார். விடைபெறும் நேரத்தில் அந்தப் பெண் கவிஞர், "இங்கு நீங்கள் மர நிழலில் அமர்ந்து எழுதப் பயன்படுத்திய இந்த நாற்காலியையும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். அது என் பரிசாக; நினைவாக என்றென்றும் உங்களிடமே இருக்கட்டும்..." என்று வேண்டினார்.



அந்தப் பெருமைமிக்க நாற்காலி கவிஞரோடு கிளம்பியது!

இந்தியா வந்து சேர்ந்த பிறகு கவிஞர் தினசரி அந்த நாற்காலியிலேயே அமர்ந்து கவிதைகளை எழுதலானார். பின்னாளில் அந்த நாற்காலியைப் பற்றியே கவிஞர் ஒரு கவிதை எழுதினார்!

அந்தக் கவிஞர் வேறு யாருமல்ல. கவியரசர் தாகூர்தான். அந்தப் பெண் கவிஞர் ஒகாம்போ. சாந்திநிகேதனில், தாகூர் தனது இறுதி நாள் வரை அந்த நாற்காலியில்தான் அமர்ந்து எழுதி வந்தார். அவருக்குப் பிறகு, இன்றும் அது அங்குதான் உள்ளது.

அதே போல் ஒகாம்போவும், தாகூரோடு தனக்கு ஏற்பட்ட நட்பின் அடையாளமாகத் தனது அரண்மனையில் அவரோடு தொடர்பு கொண்ட பொருள்களை எல்லாம் பத்திரப்படுத்தி ஒரு காட்சியகத்தை ஏற்படுத்தினார். 1979 ஜனவரி 29 ஆம் நாள் அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டே தாகூரின் நினைவுகளோடு, இப் பூவுலகிலிருந்து மறைந்து விட்டார் ஒகாம்போ.


ஜானகிமணாளன்

"நாங்க வீட்டுப் பாடம் எழுதிகிட்டு போகலைன்னா கூட எங்க வாத்தியார் பெஞ்சு மேல நிக்கச் சொல்ல மாட்டார்!"

"அவ்வளவு நல்ல வாத்தியாரா?"

"எங்க வகுப்புல பெஞ்சே கிடையாது!"

— மேலப்பாதி நாகராஜன்





G.H. எங்கேயிருக்கு?

"E.F" க்குப்பக்கத்தில் தான்!"

— பாளை பசும்பொன்

"முதியோர் பள்ளியில சேரணும்னு போனீங்களே. ஏன் திரும்பி வந்துட்டீங்க?"

"வயசு பத்தாதுன்னு அடுத்த வருஷம் வரச் சொல்லிட்டாங்க!"

— சீர்காழி வி.ரேவதி





"இந்த நாய் பிஸ்கட் புதுசா சார்?"


"சாப்பிட்டுப் பார்த்துட்டு வாங்கிட்டுப் போ தம்பீ...!"

— சீர்காழி வி.ரேவதி

அப்பா தாம்பரம் வரைக்கும் போற 'PP 18'ன்ற பஸ் வந்திருக்கே... இந்த மாதிரி 'டும்டும் 18' கூட வருமாப்பா?

"கொஞ்ச காலம் பொறு கண்ணா... வந்தாலும் வரும்!"

—நரேந்திரன்





மரகதச்சிலை -4
கதை : வாண்டுமாமா
சித்திரம் : ரமணி
அரக்கன் மலைவிழுங்கியின் பிரும்மாண்டமான வெண்கலக்கோட்டையின் ஆசார வாசலை அடைகிறார்கள்.
பத்மநாபன் தன் கொம்பு வாத்தியத்தை முழக்கி கோட்டையிலிருக்கும் அரக்கனைச் சண்டைக்கு அழைக்கிறான்.
யாரடா அது? என் கோட்டை முன்வந்து, என்னைப் போருக்கழைப்பவன்?
மலைவிழுங்கியின் கோபாவேசக் கூச்சலால் அந்தப் பிராந்தியமே நடுங்குகிறது.


சிறந்த வீரனான
பத்மநாபனிடம் ஆதித்தனு
டைய மகிமை பொருந்திய
வாள் இருந்தது. ஆகவே
சிறிதும் அஞ்சாமல் அரக்
கனை எதிர்க்கச்
சித்தமானான்.
ஏழுதலை நாகம் தன் மூச்சினால்
விஷ ஜ்வாலையைக் கக்கிற்று.
பத்மநாபன் அதன் ஒரு தலையை
வெட்டி வீழ்த்துகிறான்.
ஏன் வீண் ஆர்ப்பாட்டம் செய்கிறாய்?
இதோ என் வாளுக்கு உன் ஒரு
கையை உணவாக்குகிறேன்.
வெட்டித் தள்ளிய
அரக்கன் மலைவி
ழுங்கியின் இடக்க
ரத்தின் மீது ஏறி
நின்று பத்மநாபன்
ஆர்ப்பரித்த
அதேவேளை
யில் குள்ளன்
காளி...
...ஒரு தலையைப் பறிகொ
டுத்த பாம்பைக் கட்டிப்
போட மரத்திலேறிக்
கண்ணி வைக்கிறான்.
ஆனால் அக்கொடிய
பாம்பின் வால்....



பத்மநாபா... மோசம் போனேன்! ஆபத்து, ஆபத்து, ஓடிவா!
உன் வீரத்துக்கும் ஆதித்தனின் வாளுக்கும் என் வாழ்த்துக்கள். தக்க சமயத்தில் வந்து காப்பாற்றினாய்.
ஒரு கை இழந்த அரக்கன் மலை விழுங்கி ஆக்ரோஷத்துடன், தன் கதாயுதத்தைச் சுழற்றிக் கொண்டு வருகிறான்.
இந்த மூங்கிலையும் காட்டுக் கொடியையும் கொண்டு வில் தயாரிக்கிறேன் பத்மநாபா.


காட்டுக் கொடிகளினால் குள்ளன் காளி தயாரித்த வில்லிலே நாணேற்றி, கத்தியை அம்பாக்கி...
கண்ணிழந்த அரக்கனின் வலக் கரத்தையும் வெட்டித் தள்ள....
அடியற்ற மரம்போலத் தரையில் சாய்ந்த அரக்கனின் தலையையும் கொய்து தூக்கிச் சிங்க நாதம் செய்ய - நாகநந்தினி பீதி அடைந்து ஓடுகிறாள்.



தப்பி ஓடவா பார்க்கிறாய்? குடிகேடி நாகநந்தினி! நீ இழைத்த கொடுமைகளுக்கு உன்னைச் சித் திரவதை செய்ய வேண்டும்.
காளி! பெண் பிறப்பு - அவளை விட்டு விடு...
நிர்மலா! இவள் பெண்ணே இல்லை. பேயினும் கொடியவள். இவளிடம் இரக்கம் காட்டக் கூடாது.
அப்படியானால் அவளுக்கு இந்தத் தண்டனையே போதும்.
ஒரு பெண் அழகென்று கர்வப்படக் கூடியது அவளது கூந்தல். ஆகவே, அதை வெட்டி அவமானப்படுத்த எண்ணினான் பத்மனாபன். ஆனால் அவளது தலைமுடி துண்டிக்கப்பட்டதும் நாகநந்தினி விகார மாக குரூரக் கிழவியானாள். அவள் நிஜ வடிவம் அதுதான்.





தன் மந்திர சக்தியினால் வயதையும் உருவையும் மாற்றிக் கொண்டு, அதன் சூட்சுமத்தைக் கூந்தலில் வைத்திருந்தாள் நாகநந்தினி. கூந்தல் அறுபட்டதும்....
என்னை இந்தக் கோலமாக்கியதற்கு என் தந்தை உங்களைப் பழிவாங்கியே தீருவார்.
கோட்டைக்குள் சிறைப்பட்டிருக்கும் இளவரசர் ஆதித்தனைச் சீக்கிரம் விடுவித்தாக வேண்டும். அவர் அங்கு என்ன துன்பப்படுகிறாரோ...?
கோட்டையின் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடியும் எங்கும் ஆதித்தனைக் காணவில்லை.
இவ்வளவு பெரிய கோட்டைக்குள் உயிர் இயக்கத்தையேகாணோமே! ஆதித்தனை அரக்கன் எங்கு சிறை வைத்திருப்பான்? நாம் சோதனை இடாதது இந்த அறை ஒன்றுதான்...


அந்தச் சிலையில் ஏதோ மர்மமிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.
குள்ளன் காளி சிலையின் கையைப் பிடிக்க, அது கீழே தழைகிறது. அதேசமயம்....
பாதாளச் சிறைக்குச் செல்லும் வழியும் திறக்கிறது. அதன் வழியே உள்ளே சென்றவர்கள் - அங்கு ஆதித்தனைக் கண்டு ஆனந்தமடைகிறார்கள்.
பல நாட்களாகிவிட்டதனால், ஆதித்தனின் உடலில் உள்ள மந்திரப் பொடியின் மகிமை குறைந்துவிட்டது. பழைய பலமும் அவன் உடலில் தோன்ற ஆரம்பித்திருந்தது. காளியின் மூலிகைகள் அவன் உடலில் புதிய பலத்தையும் சோபையையும் சேர்த்தன. ஆனால் அவன் உள்ளமோ?


நிர்மலா மற்றவனுடன் நெருங்கிப் பழகுவதைத் தவறாக நினைக்கிறது ஆதித்தனின் மனம்.
நடுவில் வந்தவனுடன் நாளெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறாளே! என்னிடம் முன் போலப் பழகுவதில்லை...
புதியவனின் மோகத்தில் மூழ்கிக் கிடக்கும் உனக்கு இனி என் உதவி தேவை இல்லை நிர்மலா.
ஆதித்தா, அவள் உள்ளத்தை உன் சுடுசொற்களால் இப்படிப் புண்ணாக்காதே. உன்னை விடுவிக்க அவள் எப்படித் தவித்தாள் தெரியுமா? இன்று நீ இப்படி இருப்பதற்கு....
...நீதான் காரணம் என்று அவள் உள்ளத்திலும் இடம் பெறப் பார்க்கிறாயாக்கும்...?
அவசரப்பட்டு விட்டாய் ஆதித்தா! ஆத்திரத்திலே ஆராயும் திறனையும் இழந்து விட்டாய்.


இப்போது என்னைப் பார். நீ நினைப்பது போல நிர்மலாவின் உள்ளத்திலே இடம் பெறும் தகுதி எனக்கு உண்டா பார்!


ஆ! என்னைப் போன்ற பெண்ணா நீ?
என்ன... என்ன? பத்மநாபன் ஆண் வேடம் பூண்ட பெண்ணா? என்னால் நம்ப முடியவில்லையே!


ஆண்களே அவசரப் புத்தியுடையவர்கள் என்பதை மெய்யாக்கிவிட்டீர்களே! என் சகோதரி இவள் இல்லாவிட்டால் நான் மறுபடி உங்களை அடைந்திருக்க முடியுமா?



சகோதரி, என்னுடைய அசட்டுத் தனத்துக்காக வெட்கமடைகிறேன். என்னை மன்னித்துவிடு.
அதுபோகட்டும். இப்படி நீ ஆண் வேடம் பூண வேண்டிய காரணத்தை அறியலாமா?
இனி நீங்கள் அறியக் கூடாத ரகசியம் என்னிடம் ஏதுமில்லை. என் உண்மைப் பெயர் பத்மினி. குந்தள நாட்டு மன்னர் குபேரவர்மரின் ஒரே மகள் நான். ஒரு நாள் என் கனவில் ஒரு கட்டழகன் தோன்றினான்.
அந்த மன்மத ரூபனிடம் மனத்தைப் பறிகொடுத்தேன். அவரையே மணாளனாக அடைவதென்று தீர்மானித்தேன். என் எண்ணத்தை என் தந்தையிடம் தெரிவித்தேன். ஆனால் கனவில் கண்டவர் யார், எங்கிருக்கிறார் என்று தெரியாத நிலையில்...
அவரைத் தேடி தேச சஞ்சாரம் செய்ய முடிவு செய்தேன்.
குழந்தாய்! மன்னர் உன்னை மகனாக எண்ணியே வளர்த்திருக்கிறார். வீரத்திலே நீ ஆணுக்கு நிகரானவள். கனவில் கண்டவனைத் தேடி கணவனாக்கிக் கொண்டு கலியாணக் கோலத்தில் வரும் உன்னைக் காணும் நாள் வெகுதூரத்தில் இல்லை. வெற்றியோடு திரும்பு குழந்தாய்...




தந்தையிடமும் குருதேவரிடமும் ஆசி பெற்று நான் பத்மனாபனாக உருமாறிக் கிளம்பினேன்.
சகோதரி! நீ கனவிலே கண்டவரைத் தேடி உன் கணவனாக்குவது இனி என் பொறுப்பு. கவலைப்படாதே.
இன்னும் அவரை நான் காண முடியவில்லை.
நால்வரும் தங்கள் பிரயாணத்தை மேற்கொண்டு முன்னேறினார்கள். வழியில் பயங்கரமான புயலும் மழையும் அவர்களைத் தடுமாற வைக்கிறது.
ஆக்ரோஷமான புயலிலிருந்து தப்ப, தூரத்தில் தெரிந்த ஒரு குகைக்குள் அடைக்கலம் புகுகிறார்கள் நால்வரும்.
குகைக்குள் நுழைந்த குள்ளனை இருளில் இரு கண்கள் திடுக்கிட வைக்கிறது. பிறகு அது ஒரு பெரிய சிலை என அறிகிறார்கள்.



சிலையைச் சோதனையிட குள்ளன், அதன் மீது ஏற நினைத்து அதன் கால்களைப் பற்றியதும், பலத்த ஓசை ஏற்பட சிலையின் கை உயர -' அதன் வயிறு பிளக்க குகைக்குள் குகையாக ஒரு வழி தெரிகிறது.
சிலையின் வயிற்றில் உண்டான வழியின் மூலம் ஆதித்தனும் மற்றவர்களும் அதில் இறங்கிச் செல்கின்றனர் - அது எங்கு செல்கிறது என்பதை அறியும் ஆர்வமுடன்.
காண்பது கனவல்லவே? எத்தனை ரமணீயமான இடம் இது! ஆதித்தா, அதோ ஒரு பர்ணசாலை வா அங்கு போகலாம்.
குடிலின் அருகே ஒரு மரத்தடியில் அருளே வடிவாக ஒரு பெரியவர் தவ நிலையில் இருப்பதைக் கண்டு வணங்கு கிறார்கள். கண் விழித்த முனிவர் அவர்
களை ஆசீர்வதிக்கிறார். (தொடரும்)

இரண்டு கொடு!



காளியப்பன் கிராமவாசி. அவன் ஒருமுறை பட்டணம் போய் வர நினைத்தான்.

ஏற்கெனவே பட்டணத்திற்குப் போய் வந்த காளியப்பனின் நண்பன் ஒருவன், "காளி ஜாக்கிரதை. பட்டணத்தில் ஏமாற்றுப் பேர்வழிகள் அதிகம். எனவே நீ எதை வாங்குவதானாலும் கடைக்காரன் சொல்லும் விலையில் பாதி விலைக்கே கேள். ஏனென்றால் பட்டணத்தில் எல்லாப் பொருட்களுக்கும் ஒன்றுக்கு இரண்டு மடங்காகத்தான் விலை சொல்வார்கள்" என்று எச்சரித்தான்.

காளியப்பனும் அப்படியே செய்வதாகக் கூறிப் பட்டணம் போனான்.

பட்டணத்தில் காளியப்பன் ஒரு குடை வாங்க எண்ணினான். குடைக்காரனிடம், "இந்தக் குடை என்ன விலை?" என்று கேட்டான்.

குடைக்காரனும், "நூறு ரூபாய்" என்றான்.

"அப்படியானால் ஐம்பது ரூபாய்க்குக் கொடுப்பாயா?" என்று கேட்டான் காளியப்பன்.

கடைக்காரனும், "சரி, அறுபது ரூபாய்க்கு எடுத்துக் கொள்" என்றான்.

"அப்படியானால் முப்பது ரூபாய்க்குக் கொடுக்கிறாயா?" என்று கேட்டான் காளியப்பன்.

கடைக்காரனுக்கு எரிச்சல் வந்தது. அவன், "சும்மா கொடுக்கிறேய்யா. வாங்கிக் கொண்டு போகிறாயா?" என்று கிண்டலாகக் கேட்டான்.

காளியப்பன் சிறிது யோசித்தான். நண்பன் கூறிய அறிவுரையை எண்ணிப் பார்த்தான்.

"சும்மா தருவதனால் கூட இரண்டு கொடு" என்றான்.

கடைக்காரன் அவனை, "போய்யா போ" என்று விரட்டி விட்டான்.

- ஏ. ஹரிகிருஷ்ணன்

முதலாளிக்குத் தெரியாது!

கண்ணப்பர் வெயிலின் கொடுமை தாங்காது, ஏதாவது குளிர்பானம் அருந்த அருகில் இருந்த ஓட்டலுக்குள் நுழைந்தார். மின்விசிறி சுழன்று கொண்டிருந்த ஒரு மேசைக்கு அடியில் உட்கார்ந்து வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

''என்ன சார் வேணும்?'' என்ற குரல் கேட்டு கண்ணப்பர் நிமிர்ந்தார்.

'துறுதுறு'வென்று ஒரு சிறுவன் கேட்டான். அவனுடைய பணிவும், பேச்சும், தோற்றமும் ஈர்க்கக்கூடியதாக இருக்கவே கண்ணப்பர் பேச்சுக் கொடுத்தார்.


''எந்த ஊரு தம்பி? புதிதாக வந்திருக்கியா?''

''மதுரைங்க. போன வாரம்தான் இங்கே வந்து சேர்ந்தேன்.''

''அப்பா அம்மா இருக்காங்களா? எதுவரை படிச்சிருக்கே?''

''ரெண்டு பேரும் இல்லீங்க. பத்தாவது வரை படிச்சிருக்கேனுங்க. கணக்கில் மாநிலத்தில் முதலா வந்தேனுங்க. மேலே படிக்க வசதி இல்லே. ஏதாவது நல்ல வேலை கிடைத்தால் பரவாயில்லை. உங்களால் முடியுமானால் உதவுங்க.''

அடுத்து இரண்டு மூன்று முறை கண்ணப்பர் ஓட்டலுக்கு விஜயம் செய்த போது அந்த சர்வர் சிறுவனின் பணிவையும், நாணயத்தையும், உழைப்பையும் நன்கு கவனித்தார். அவனுக்கு ஏதாவது உதவ வேண்டும் என்று முடிவு செய்தார். அவருடைய



பழைய மாணவன் ஒருவன் பெட்ரோல் பங்க் வைத்திருந்தான். அதைக் கவனித்துக் கொள்ள நாணயமான ஒரு சிறுவன் தேவை என்று அவன் கேட்டிருந்தான். அவனையும் அழைத்துக் கொண்டு அன்று மாலை கண்ணப்பர் ஓட்டலுக்கு வந்தார்.

''தம்பி, இவர்தான் உனக்கு வேலை தரப் போகிறவர்'' என்று மாணவரை அறிமுகப்படுத்தினார் கண்ணப்பர். மகிழ்ச்சிப் பெருக்கில் சிறுவன் இனிப்பும், வறுத்த முந்திரியும், ஐஸ்கிரீமும் கொண்டு வந்து வைத்தான். கண்டிப்பாக ஐம்பது ரூபாய் பில்லாகியிருக்கும் என்று எண்ணினார் கண்ணப்பர். ஆனால் சிறுவன் பத்து ரூபாய்க்கே பில் கொண்டு வந்தான்.

''என் நன்றியைக் காட்ட வேண்டாமா? அதான் குறைவாகப் போட்டிருக்கேன். எங்க முதலாளிக்குத் தெரியவா போகிறது?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் சிறுவன். ஆசிரியரும் மாணவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கொடுக்க வைத்திருந்த வேலை நியமனத்தைக் கிழித்துப் போட்டார் கண்ணப்பரின் பழைய மாணவர். இருவரும் ஒன்றும் கூறாது போவதை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான் சிறுவன். உங்களுக்குப் புரிகிறதா?

• அருள்நம்பி



வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் 5-வது பரிசு பெறும் மூன்றாவது கதை



தன்னிலை மறவாதே!

குரங்காட்டி ஒருவனிடம் விஷமக்காரக் குரங்குக் குட்டி ஒன்று இருந்தது. அவன் அதற்கு எல்லா வேடிக்கைகளையும் கற்றுக் கொடுத்து வைத்திருந்தான். அதை வைத்து தெருத் தெருவாக வேடிக்கை காட்டி, அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு குரங்காட்டி பிழைப்பு நடத்தி வந்தான்.

அந்தக் குரங்குக் குட்டி, தப்பிப் போக எப்பொழுது வாய்ப்புக் கிடைக்கும் என்று ஆவலுடன் காத்திருந்தது. ஒருநாள், மாம்பழம் ஒன்றை நறுக்கித் தின்று விட்டு கத்தியை எடுத்து வைக்க மறந்து தூங்கிப் போய் விட்டான் குரங்காட்டி. இந்த மாதிரி வாய்ப்புக்காக ஏங்கியிருந்த குரங்கார், கத்தியை எடுத்து, தன் இடுப்பில் கட்டப்பட்டிருந்த கயிற்றை அறுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டது. "விடுதலை! விடுதலை!" என்று மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டே காட்டை நோக்கி ஓட்டம் பிடித்தது.

காட்டை அடைந்த குரங்கார் நதிக் கரையில் இருந்த மாமரம் ஒன்றில் தங்கி வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் நல்ல மழை பெய்து ஆற்றில் பயங்கரமாக வெள்ளம் வந்தது. குரங்கார் மரத்தில் அமர்ந்தபடி வெள்ள நீரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று யாரோ பாடுவது கேட்டது.

"வாழை மரம் வெள்ளத்தில்
வேகமாக வந்தது
ஆமை நானும்
அதனையே
ஆற்றங் கரையில் ஒதுக்
கினேன்!"

வெள்ளத்தில் அடித்து வந்த ஒரு வாழை மரத்தைத்தான் இழுத்து வந்து கரையில் ஒதுக்கிய பெருமையைக் கூறும் இந்தப் பாட்டைக் குரங்கார் கேட்டார். 'ஆமையாவது, வாழை மரத்தை இழுத்துக் கரை சேர்ப்பதாவது! இது நடக்கக் கூடிய காரியமா!' என்று குரங்கார் விரைந்து ஓடிப் பார்த்தார்.

வெள்ளம் கரைபுரண்டு ஓடிய ஆற்றங்கரையின் திருப்பத்தில் வாழை

என். சிந்துஜா



மரம் ஒன்று வேருடன் ஒதுங்கிக் கிடந்தது. அதன் அருகே ஆமையார் உட்கார்ந்திருந்தார்.

''என்ன ஆமையாரே, உண்மையாகவே இத்தனை பெரிய வாழை மரத்தை ஒரே ஆளாவா இழுத்து வந்து கரை சேர்த்தீங்க! நம்பவே முடியலையே?'' என்று குரங்கார் கேட்டார்.

''மடக் குரங்காரே, தண்ணீரில் மிதக்கும் எந்தக் கனமான பொருளையும் எளிதாகத் தள்ளிக் கொண்டு வந்து விடலாம். இதற்குப் பெரிய பலம் ஏதும் தேவையில்லை'' என்றார் ஆமையார்.

''சரி, இத்தனை பெரிய வாழை மரத்தை என்ன பண்ணப் போகிறீர்?''

''குரங்காரே, இது தான் இப்போ பெரிய பிரச்னை. இதை நட்டு வைத்தால் மரமாகிப் பழம் தரும்.''

''செய்ய வேண்டியதுதானே?''

''தண்ணீரில் இருந்து மரத்தை இழுத்து வந்த மாதிரி இதை எளிதாகப் பண்ண முடியாது. இன்னொருவருடைய உதவியாவது தேவை.''

''நான் உதவி பண்ணறேனே?''

''மிகவும் மகிழ்ச்சி குரங்காரே'' என்றார் ஆமையார்.

''ஆனால் ஒரு நிபந்தனை. மரத்தில் பாதியை எனக்கு வெட்டித் தந்து விட வேண்டும்.''

''அப்படிப் பாதியாக வெட்டினால் எல்லாமே பாழாகி விடும் குரங்காரே.''

''எனக்கு இந்தக் கூட்டுக் கதையே வேண்டாம். மரத்தை உருட்டிக் கொண்டு வருகிறேன். பாதியாக வெட்டலாம். மேல் பாதி ஒருவருக்கு. கீழ்ப்பாதி ஒருவருக்கு. சம்மதமா?''

'இந்த மடக்குரங்கை மாற்றவே முடியாது' என்ற முடிவுக்கு வந்த ஆமையார், ''சரி குரங்காரே. முதலில் மரத்தை உருட்டிக் கொண்டு வருவோம்'' என்றது.

ஆமையார் கீழ்ப்பகுதியில் தலையால் தள்ள, குரங்கார் இரு கைகளாலும் வாழை மரத்தை உருட்டிக் கொண்டு வந்தார்.

''நானே வெட்டுகிறேன்'' என்று வாழை மரத்தை இரண்டாக வெட்டியது குரங்கு.

''யாருக்கு எந்தப் பாகம் என்கிறதை திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்க்கலாமா?'' என்று கேட்டார் குரங்கார்.


''வேண்டாம் குரங்காரே. உங்களுக்கு எந்தப் பாகம் வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு மறுப்பு ஏதும்

இல்லை. தலைப் பாகம் கிடைத்தால் குருத்துடன் வாழை இலையைத் தின்று இரண்டு நாள் பசியாறுவேன்."

"அடிப்பாகம் கிடைத்தால்...?"

"அதை நட்டு வைத்து வளர்ப்பேன். அது மரமாகி தார் போட்டு பழங்கள் தரும். எனக்கு இரண்டுமே பயன்படக் கூடியவை. அதனால் உங்களுக்கு எது தேவையோ எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றது ஆமையார்.

குரங்கு யோசித்தது. ஆமை போட்டி போடாது தேர்ந்தெடுக்கும் முதல் உரிமையைத் தனக்கே வழங்கியதும் குரங்கார் குழம்பிப் போனார். வாழை மரத்தின் அடிப்பாகம் முண்டும் முடிச்சுமாக பார்க்கவே அசிங்கமாக இருந்தது. தலைப்பாகம் பச்சைப் பசேல் என்று இலைகளுடனும், பட்டுப் போல் மென்மையான குருத்துடனும் இருந்தது. குரங்கின் மனதைக் கவர்ந்தது.



''எனக்குத் தலை பாகத்தையே கொடு. அதையே நான் எடுத்துக் கொள்கிறேன்'' என்றார் குரங்கார்.

''சரி. அப்படியானால் நான் அடிப் பாகத்தை எடுத்துக் கொள்கிறேன்'' என்றார் ஆமையார்.

குரங்கார் மேல் பாகத்தை எடுத்துக் கொண்டு போக ஆமையார் அடிப்பாகத்தை முட்டி முட்டித் தள்ளிக் கொண்டு போனார். முன் கால்களைக் கொண்டும், பின்கால்களைக் கொண்டும் மண்ணில் குழி பறித்தார். அடிப் பாகத்தை நட்டு வைத்துத் தண்ணீர் மொண்டு வந்து ஊற்றினார்.

நாட்கள் ஓடின. சில நாட்களில் குரங்கார் தின்றது போக நட்டு வைத்த மீதிப் பகுதி காய்ந்து போய் விட்டது. ஆனால் ஆமையார் நட்டு வைத்த அடிப்பகுதி நன்றாகத் துளிர் விட்டு வளர்ந்து காய்த்துக் குலை தள்ளி பழங்களும் பழுத்து விட்டன. ஆனால் ஆமையாருக்கு மரம் ஏறத் தெரியாததால் பழங்களைப் பறிக்க முடியாது தவித்தார்.

குரங்கார் ஆமையாரின் மரத்தில் காய்த்துப் பழுத்திருந்த பழங்களைப் பார்த்துப் பொருமிக் கொண்டிருந்தார். பழங்களைப் பறிக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

ஆமையார் குரங்காரிடம் வந்து, "குரங்காரே, எனக்காக மரத்தில் ஏறிப்



“உலகத்திலேயே சுதந்திரமான மனிதன் யார்.”

“ஹோம் வொர்க் இல்லாதவன் சார்.”

- கே.பி. ஜோதிராஜன்

பழங்களைப் பறித்துப் போடுகிறீரா? என்னால் மரம் ஏற முடியாது” என்று கேட்டார்.

குரங்காருக்கு ஏற்கெனவே பொறாமை. ஏமாந்து விட்டோமே என்று கோபம். ஆனாலும் ஆமையார் வந்து கேட்டதால் அதனால் மறுக்க முடியவில்லை. பழங்களைப் பறிக்க வாழை மரத்தில் ஏறினார். கனிந்த பழங்களைப் பார்த்ததும் குரங்கின் மனம் மாறிவிட்டது. அத்தனை வாழைப் பழங்களையும் பறித்துப் பறித்துத்தானே தின்னத் தொடங்கி விட்டார்.

ஆமையார் இதைப் பார்த்துத் துடித்துப் போனார். “குரங்காரே, நான் உங்களை ஏமாற்றவில்லை. இதன் பயனை நீங்களும் அடைய வேண்டும் என்றுதான் இருவருமாக மரத்தை நட்டு வைக்கலாம் என்றேன். ஆனால் நீங்கள்தான் பிடிவாதமாக வெட்டிப் பிரித்துக் கொண்டு ஏமாந்தீர்கள். இப்பொழுது கூடப் பழங்களை நானே தின்ன விரும்பவில்லை. ஆளுக்குப் பாதி. நீங்கள் எடுத்துக் கொண்டு மீதியை எனக்குப் போடுங்கள்” என்றார் ஆமையார்.

“எல்லாப் பழமும் எனக்கே” என்றது குரங்கு. ஆமை கெஞ்சியது.

“உனக்குப் பழமா வேண்டும்? இந்தா!” என்று குரங்கு வாழைப் பழத் தோல்களைக் கீழே எறிந்தது.

ஆமைக்குப் பொறுமை போய் விட்டது. கோபம் வந்தது. எங்கிருந்தோ முள்களைக் கொண்டு வந்து மரத்தின் கீழே பரப்பி விட்டு ஒளிந்து கொண்டது.

வயிறு நிறையப் பழங்களைத் தின்று விட்டுக் குரங்கார் மகிழ்ச்சியுடன் கீழே குதித்தார். உடம்பெல்லாம் முள் நன்றாகக் குத்தி விட்டது.

“ஐயோ, அம்மா! அப்பா!” என்று குரங்கார் குதிகுதியென்று குதித்துத் தவித்தார்.

ஆமை ‘கலகல’வென்று சிரித்துக் கொண்டே ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளியே வந்தது.

“உன் வேலையா இது?” என்று குரங்கு பல்லைக் கடித்தது. ஆமையாரைக் குண்டுக்கட்டாகத் தூக்கியது.

“எனக்கு முள் குத்த வைத்த உனக்குச் சரியான பாடம் கற்றுத் தர வேண்டும். சொல்லு, உன்னை இந்த மலை உச்சியிலிருந்து உருட்டி விடட்டுமா? நெருப்பில் தூக்கிப் போடட்டுமா? தண்ணீரில் தூக்கிப் போடட்டுமா?” என்று உறுமியது குரங்கார்.

ஆமையார் கெஞ்சுவது போல் முகத்தை வைத்துக் கொண்டு, “குரங்காரே நீ என்னை மலை உச்சியிலிருந்து வேண்டுமானாலும் உருட்டி விடு. நெருப்பில் வேண்டுமானாலும் தூக்கிப் போடு. ஆனால் தயவுசெய்து தண்ணீரில் மட்டும் போட்டு விடாதே. தண்ணீரில் இருந்து இருந்து எனக்கு அலுத்து விட்டது. அதனால் தண்ணீரில் சாக நான் விரும்பவில்லை” என்று கெஞ்சி வேண்டியது.

“தண்ணீரில் இருந்து உனக்கு அலுத்து விட்டதா? அப்படியானால் உன்னைக் கண்டிப்பாகத் தண்ணீரில்தான் தூக்கிப் போட வேண்டும். நன்றாக மூச்சுத் திணறி நீ தவிப்பதை நான் பார்த்து மகிழ வேண்டும்” என்று கூறிக் கொண்டே ஆமையைத் தண்ணீரில் ‘தொபுகடீர்’ என்று போட்டது குரங்கு.

சில வினாடிகளில் ஆமை தலையை மேலே தூக்கிக் குரங்கைப் பார்த்தது. “மடக்குரங்கு நண்பனே! என் விருப்பத்திற்கு மாறாக நடக்க வேண்டும் என்பதுதான் உன் எண்ணம் என்பதை நான் உணர்ந்து அதற்கு ஏற்றபடி பதில் கூறினேன். நான் நினைத்தபடியே நீ நடந்து கொண்டாய். தண்ணீர்தான் ஆமைகளுக்குச் சொர்க்கம் என்பது மடையனான உனக்கு எப்படித் தெரியும்? மிக்க மிக்க நன்றி!” என்று சிரித்தது.

குரங்கிற்குக் கோபம் கோபமாக வந்தது. பல்லைக் காட்டிப் பழித்து விட்டு மரத்தில் தாவி ஏறி ஓடி விட்டது.

யாருடைய பொந்து?



அடர்ந்த காட்டில் ஒரு மரப் பொந்தில் பல காலமாக ஒரு அணில் வாழ்ந்து வந்தது! அது மிகவும் சாது. பசி இருந்தால் தான் பழங்களைக் கடிக்கும். சேதம் விளைவிக்காது. வம்புச் சண்டை வந்தால் கூட விலகிக் கொண்டு வந்து விடும். எல்லோருக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யும்.

எல்லா விலங்குகளுக்கும் சாது அணிலின் மேல் தனி அன்பு இருந்தது. இதைப் பார்த்து மிகவும் பொறாமைப்பட்டது ஒரு அடாவடி அணில்.

அடாவடி அணில் ஒருநாள் வேண்டுமென்றே சாது அணிலின் பொந்துக்குள் வந்து, "இந்த மரப் பொந்து என்னுடையது! இது என் சொந்த வீடு. நீ வெளியே போ" என்று கூப்பாடு போட்டது.

வேறுவழி தோன்றாத சாது அணில், காட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது!

நீதிபதி மிகவும் நல்லவர். நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர். சாது அணிலைப் பற்றி அவருக்கு நன்கு தெரியும்.

இருந்தாலும் அந்தப் பொந்து தன்னுடையது என்பதை சாது அணில் நிரூபிக்க வேண்டுமே? அதனிடம் அதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லை. நீதிபதி தன்னுடைய செல்வாக்கை வைத்து அடாவடி அணிலுக்குப் புத்திமதி கூறிப் பார்த்தார். அது கேட்கவில்லை. "அது என்னுடைய பொந்தே" என்று கூறி விட்டது.

நீதிபதி ஒரு தந்திரம் செய்தார். தீர்ப்பை மறுநாளுக்கு ஒத்தி வைத்தார்.

நீதிபதி விரும்பியது போலவே அன்று இரவு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. மாறுவேடம் போட்டுக் கொண்டு அந்த மரப்பொந்தின் கதவைத் தட்டினார் நீதிபதி.

கதவைத் திறந்தது. அடாவடி அணில், "ஐயா, வெளியே மழையாக இருக்கு. மழை விட்டதும் சென்று விடுகிறேன். அதுவரை தங்கி இருக்க அனுமதியுங்கள்" என்றார் நீதிபதி. அவரது வயதான தோற்றத்தைக் கண்டு "சரி" என்று உள்ளே விட்டது அடாவடி.

உள்ளே வந்த நீதிபதி, "மிகவும் சாரல் அடிக்கிறது. கதவை நன்கு சாத்துங்களேன்?" என்றார்.

அடாவடி அணிலால் கதவைத் தாள் போட முடியவில்லை. உடனே அந்த சாது அணில் ஒரு மரத்துண்டை எடுத்து, 'கதவுக்கு முட்டுக் கொடுத்து பொந்தை சுத்தமாக அடைத்தது.

சிறிது நேரம் கழித்து மழைத் தண்ணீர் மேலே இருந்து சொட்டு சொட்டாக ஒழுகியது. அடாவடி அணிலுக்கு அதை எப்படி நிறுத்துவது என்பது தெரியவில்லை. ஆனால் சாது அணில் தயாராக வைத்திருந்த ஒரு இலையை அந்த ஓட்டையில் திணித்து அடைத்தது. மழை நீர் ஒழுகுவது நின்று விட்டது. அடாவடி, திருதிருவென்று விழித்தது.

நீதிபதி தன் மாறுவேடத்தைக் கலைத்து, "இந்த வீடு, இந்த சாது அணிலினுடையது தான்! நீ மரியாதையாக வெளியே போய் விடு. இல்லை என்றால் தண்டிக்கப்படுவாய்" என்று தீர்ப்பை வழங்கினார்.

— எம். கே. வேங்கவேல்.



"இப்ப எப்படிடா வர முடியும்? பாதி வடகம் இட்டுக் கொண்டிருக்கேன். பாதியில வர முடியாதே. அக்காவோட பச்சைக் கலர் டைரியில நான் குறிச்சுத் தந்திருக்கேன்னு சொல்லு'' அம்மா மூச்சிறைக்கக் கத்தினாள்.

சில நிமிடங்களில் முத்து மறுபடி இரைந்து கத்தினான்.

"பச்சைக் கலர் டைரி எது வேருக்குன்னு அக்கா கேட்கிறாள்."

"கடவுளே. என்னென்னவோ புதுசு புதுசாக் கண்டு பிடிக்கறாங்களே. போற இடத்திற்கெல்லாம் வீட்டுக்குள்ளேயே கொண்டு போகும்படி ஒரு டெலிபோனைக் கண்டு பிடிக்கக் கூடாதா?'' என்று அம்மா அலுத்துக் கொள்கிறாள்.

ஊஞ்சலிலே ஆடுவேன்; ஆடிக் கொண்டும் பேசுவேன்!

குமார் பாதி குளித்துக் கொண்டிருக்கும் போது அம்மா கதவைத்த தட்டினாள்.

''உன் நண்பன் சசி போன் பண்ணறான். என்ன சொல்ல?''

"இன்னும் பத்து நிமிஷம் கழித்து மறுபடி அவனையே போன் பண்ணச் சொல்லும்மா."

"அவன் பப்ளிக் போன்லேருந்து பண்றேன்னு சொல்றான்."

"அப்ப என்னன்னு கேட்டுக்கம்மா?''

அறிவியல் முன்னேற்றம் எத்தனை வேகமாக வளர்ந்து வருகிறது! இப்படிக் குளிக்கும்போது போன் வந்தால் குளியலறையில் இருந்தபடியே பேசும்படி ஒரு கருவியைக் கண்டு பிடிக்கக் கூடாது? என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான் குமார்.

அம்மா மொட்டை மாடியில் வடகம் இட்டுக் கொண்டிருந்தாள். முத்து கீழே இருந்து கத்தினான்.

"அம்மா, உங்களுக்கு கோவையிலிருந்து எஸ்டிடி வந்திருக்கு. ஊட்டியில் இருக்கும் அத்தையோட முகவரி வேணுமாம்? அக்காதான் கூப்பிடறாள்'' என்று இரைந்து கத்தினான் முத்து.

தோட்டத்தில் மாமர நிழலில் மேஜை போட்டு செஸ் ஆடிக் கொண்டிருந்தான் பாபு. எதிராளி நந்துவின் ராஜாவுக்கு "செக்" வைக்கும் நிலை.

கூடத்தில் இருந்து அண்ணாவின் குரல் இரைந்து கேட்கிறது.

"பாபு. உனக்குத்தான் போன். உங்க பி.டி. மாஸ்டர் போன் பண்றார்."

ஒரு வேளை, நாளைக்கு நடப்பதாக இருந்த மேட்ச்சை ஒத்திப் போடப் போகிறார்களோ? இப்படியே விட்டு விட்டுப் போனால் இந்த எமடன் நந்து என்னமாவது பண்ணிவிடுவான். கடவுளே. இந்த மாதிரி தோட்டத்தில் விளையாடும் போது அங்கிருந்தபடியே பேச ஒரு டெலி

போனைக் கண்டு பிடிக்க மாட்டார்களா? என்று நொந்து கொண்டான் பாபு.

வீட்டுக்குள்ளேயோ வேலை செய்யும் இடத்தில் இருந்தபடியோ பேச ஒரு டெலி போனைக் கண்டு பிடிக்க மாட்டார்களா என்று இப்படி குமார், அம்மா, பாபு போன்றவர்கள் ஏங்கியதைப் போலவே, ஏங்கித் தவித்தவர்கள் ஏராளம். இவர்களது ஏக்கத்தைப் போக்க அறிவியல் ஆராய்ச்சி கை கொடுத்துள்ளது.

சாதாரணமான டெலிபோனில் பேச அது இருக்கும் இடத்திற்கு வந்துதான் பேச வேண்டும். கொஞ்சம் வசதி உள்ளவர்கள் வீடுகளிலும் பெரிய அலுவலகங்களிலும் இந்த டெலிபோன்களுக்கு எக்ஸ்டென்ஷன் எனப்படும் வசதி இருக்கும். உதாரணமாக, கீழ்த் தளத்தில் உள்ள மெயின் டெலிபோனுடன் முதல், இரண்டாவது மாடிகளில் உள்ள டெலிபோன்கள் இணைக்கப் பட்டிருக்கும். மெயின் டெலிபோனுக்கு வந்த ஒரு அழைப்பை, இந்த டெலிபோன்களுக்குக் கொடுத்து பேசிக் கொள்ளும்படி செய்வார்கள். இதிலும் கூட, இந்த எக்ஸ்டென்ஷன் டெலிபோன்கள் ஒரு இடத்தில்தான் இருக்கும். இவை இருக்கும் இடத்துக்கு வந்துதான் பேச வேண்டும்.


"தோட்டத்தில் இருந்தபடியே பேசலாம்! விளையாடிக் கொண்டே கேட்கலாம்! அம்மா கூட வடகம் இட்டுக் கொண்டே பேசலாம்; கேட்கலாம்!"


இப்பொழுது எலக்ட்ரானிக்ஸ் முறையில் இயங்கும், இணைப்பு ஒயர் இல்லாத Chordless டெலி போன்கள் வந்து விட்டன. வீட்டில் அல்லது அலுவலகத்தில் நடுவான ஓர் இடத்தில் மெயின் டெலிபோனை வைத்து விட்டால், அதைச் சுற்றி சுமார் நூறு அடி தொலைவுக்குள் இது இயங்கும். சாதாரண டெலிபோனில் பேசவும், கேட்கவும் உள்ள மேல் பகுதியைப் போலவே இது இருக்கும். மெயின் டெலிபோனுக்கு வரும் அழைப்புகள், அங்கே யாரும் எடுக்காவிட்டால் இதற்கு வந்து 'கிணுகிணுக்கும்'. இதில் நாம் கேட்கலாம், பேசலாம். அங்கிருந்தபடியே அதிலேயே போன் பண்ணும்படி பட்டன்களும் இருக்கின்றன.

இனி குமார் குளித்துக் கொண்டே பேசலாம். அம்மா வடகம் இட்டுக் கொண்டே பேசலாம். பாபு, தோட்டத்தில் ஆடிக்கொண்டே பேசலாம்.

அட்டையில் தோட்டத்தில் ஊஞ்சலாடியபடி Chordless டெலிபோனில் பேசுவது ஜனனி. அருகே மாஸ்டர் அர்ஜுன். வண்ணப் படம் : ஹரி. இங்கே Chordless டெலிபோனில் பேசுவது: சிறுமி பாவ்னா, ஸ்ருதி. வண்ணப்படம் : கேமிரா திருஞானம்.








பாடலின் அடி என்ன? – போட்டி

செப்டெம்பர் மாதம் என்றதுமே பாரதியாரின் நினைவுதான் வருகிறது இல்லையா? குழந்தைகளுக்காக பாரதி பாடிய எளிமையான பாடங்கள் சிறுவர் இலக்கியத்தில் அழியாப் புகழ்பெற்றவை. இவற்றை அறியாத சிறுவர்களே கிடையாது.

இங்கே பத்துப் படங்கள் இருக்கின்றன. இவைகளை நன்றாகப் பாருங்கள். இவை பாரதியாரின் குழந்தைப் பாடல்களின் புகழ்பெற்ற அடிகளின் தொடக்கத்தைக் குறிப்பவை. எல்லாமே நீங்கள் நன்கு அறிந்தவை தான். கொஞ்சம் சிந்திக்க வேண்டும். இந்த அடிகளை மட்டும் ஒரு தபால் கார்டில் எழுதி முகவரிக் கூப்பனையும் வெட்டி ஒட்டி அனுப்புங்கள். பரிசு உண்டு. தவறாமல் உங்கள் முகவரியையும் பின்கோடு உட்பட குறிப்பிடவும். முகவரிக் கூப்பனில்லாது வருபவை ஏற்கப்பட மாட்டா. அயல் நாட்டு வாசகர்கள் இந்தியாவில் தொடர்பு முகவரியைத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி : 30.09.'95

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.


A COMICS SPECIAL ISSUE!
PACKED WITH LOTS OF STORIES TOLD IN PICTURES!
DON'T MISS IT!
WATCH OUT FOR THE SEPTEMBER ISSUE!
GOKULAM
The monthly magazine for children
96 PAGES FOR JUST Rs. 5!
47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.

படிப்பு போனாலும் பரவாயில்லை!

முகமது ஹில்மி

வகுப்பில் அமைதி. வருகைப் பதிவேடு எடுத்துக் கொண்டிருந்த வகுப்பாசிரியர், சோமு வழக்கமாக அமர்ந்திருக்கும் இடத்தைப் பார்த்தார்.

அவன் வரவில்லை.

வகுப்பாசிரியர் சுந்தரானந்தத்தின் முகம் கவலையால் வாடியது. சற்று நேரம் வகுப்பில் அமைதி நிலவியது.

ஸல்மான் சற்றுத் தயக்கத்தோடு எழுந்தான்.

"சார், நேற்று வகுப்பிலிருந்து போகும்போதே, நான் ஆசிரியர் சொல்படி நடக்க மாட்டேன். என் படிப்பு போனாலும் பரவாயில்லை' என்று சபதம் போட்டுவிட்டுச் சென்றான்'' என்று சொன்னான்.

''இனி அவன் பள்ளிக்கூடமே வரப்போவதில்லையாம் சார். நேற்று என்னிடம் சொன்னான் சார்'' - இது மனோகர்.

"சார், நான் அவன் பக்கத்து வீட்லதான் இருக்கேன். அவன் அப்பாவையே எதிர்த்துப் பேசுவான் சார்'' என்றான் பார்த்திபன்.

சுந்தரானந்தத்தின் முகத்தில் வேதனை படர்ந்தது. 'இந்தச் சின்ன வயதில் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறானே! அவனது மனதில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி அவனைத் திருத்த முடியவில்லையே' என்று நினைத்துக் கொண்டார்.

நேற்று நடந்த சம்பவம் அவர் மனத்திரையில் ஓடியது.

ஆசிரியர் சுந்தரானந்தம் வகுப்பில் நுழைந்தபோது மாணவர்கள் எல்லோரும் எழுந்து நின்றார்கள். வகுப்பில் சற்று வித்தியாசமான அமைதி. வகுப்பு தொடங்கும் முன் ஏதோ விபரீதம் நடந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டன. மாணவர்களின் முகங்களைப் பார்த்துக் கொண்டே வந்த அவர் கண்கள் சதீஷ்குமாரின் முகத்தைப் பார்த்ததும் நின்றுவிட்டன. அவன் அழுதிருப்பதற்கான அடையாளம் தெரிந்தது. கண்களில் ஈரம் இன்னும் காயவில்லை.

மாணவர்களைக் கையால் சைகை செய்து அமரச் சொன்னார்.

"சதீஷ்குமார்' என்று அவர் சொன்னதும் காத்திருந்தவனைப் போல வேகமாக எழுந்து நின்றான் அவன்.

"என்னப்பா விஷயம்? நீ அழுதிருப்பதைப் போலத் தெரிகிறதே! என்ன நடந்தது?"

அவரின் பார்வையும் கேள்வியும் அவனைப் பேச வைத்தன.

"சார் சோமு என்னை நகத்தால் கிறீ விட்டான் சார்.''


தரையில் மோதிய பந்தைப் போல வேகமாகக் குதித்தெழுந்தான் சோமு.

"இல்லை சார், அவன்

கையிலே போட்டோக்கள் வச்சிருந்தான். அதை வாங்கும் போது என் கை பட்டுவிட்டது" என்று தன் நியாயத்தைச் சொன்னான்.

"என்ன போட்டோ?" - ஆசிரியர் கேட்டார்.

வகுப்பிலேருந்து சுற்றுலா போய் வந்த போட்டோக்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன் சார். அதை சோமு கேட்டான். நான் கொடுக்கலே. வகுப்பிலே அவன் உட்பட எல்லாரும் பார்த்துட்டாங்க. நான் நேற்று லீவு சார். அதனாலே இன்னிக்குப் பார்த்துக் கொண்டிருந்தேன். சோமு வம்புக்காக போட்டோவை என் கையிலிருந்து பிடுங்கினான் சார். என் கையில் அவன் நகம் கிறி ரத்தம் வந்துருச்சி'' என்று தனது கையைக் காட்டினான்.



சதீஷ்குமாரின் கைகளில் நீண்ட கோடுகள். ரத்தம் இன்னும் காயவில்லை. அவனுக்குக் காயம் எரிச்சலைத் தந்திருக்க வேண்டும். முகத்தில் வேதனை தெரிந்தது.

'சார்' என்ற குரல் கேட்டதும் ஆசிரியர் திரும்பினார்.

வகுப்பு மாணவத் தலைவன் பொன்னையா எழுந்து நின்று ஏதோ பேச வேண்டும் என்பதற்காக அவர் அனுமதியை எதிர்பார்த்து மௌனமாக நின்றான்.

"என்னப்பா..."

"சார், சோமு மாணவர்களைத் தனது நகத்தால் கிறிக் காயப்படுத்துகிறான். அவன் இயல்பிலேயே முன்கோபக்காரன். அற்ப விஷயத்திற்குக் கூட அவனுக்கு 'முனுக்'கென்று கோபம் வந்து விடுகிறது. அதோடு அவனது நகம் மற்றவர்களைக் காயப்படுத்தி விடுகிறது. நேற்று என்னைப் பிராண்டி விட்டான். முந்தா நாள் சல்மானை கிறிவிட்டான். அவனோட பெரிய தொல்லையாக இருக்கு."

ஆசிரியரின் கண்கள் சோமுவையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தன. பின்பு அமைதியாக அவன் பக்கம் சென்றார்.

"எங்கே உன் விரல்களைக் காட்டு பார்க்கலாம்."

சோமு தயக்கத்தோடு விரல்களை நீட்டினான்.

ஆசிரியரின் கண்கள் வியப்பால் விரிந்தன. இடது கை விரல்களின் நகங்கள் அரை இஞ்சுக்குமேல் வளர்ந்திருந்தன. வலது கையின் பெருவிரல் நகம் சுமார் ஒரு இஞ்சுக்கு வளர்ந்திருந்தது. அவன் அதனை வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் மிகவும் சிரத்தை எடுத்திருக்க வேண்டும். நீண்டிருந்தாலும், நகங்களை நேர்த்தியாக வைத்திருந்தான்.

"நீளமான நகம் வளர்க்கிறது நல்லதில்லே தம்பி. அதில் பல விதத் தொல்லைகள் இருக்கு. ஆனால் இப்ப பிரச்னை அது இல்லே. உன்

னிடம் இரண்டு விஷயங்கள் அதிகமாக இருக்கு. ஒன்று உனது கோபம். இரண்டு உனது நீண்ட நகங்கள். இந்த இரண்டும் சேரும்போது மற்ற மாணவர்களுக்கு ஆபத்தாகி விடுகிறது. மற்ற சந்தர்ப்பம் என்றால் நீ ஆசையாக அக்கறையோட வளர்க்கிற நகத்தைப் பற்றி நான் அவ்வளவா கவலைப்பட்டிருக்க மாட்டேன். ஆனால் மாணவர்களின் பொது நலனைப் பாதிக்கும் எதையும் நான் அனுமதிக்க முடியாது."

"சதீஷ் குமாரைக் காயப்படுத்தியற்காக உன்னை மன்னிச்சுட்டேன். ஆனால் ஒரு நிபந்தனை. நாளைக்குப் பள்ளிக்கூடம் வரும்போது உன் விரல் நகங்களை ஒழுங்காக நறுக்கி முறையாக வரணும்." ஆசிரியர் அமைதியாகவும் உறுதியாகவும் சொன்னார்.

சோமுவின் காதுகளில் ஆசிரியர் கடைசியாகச் சொன்னது இடிபோல் இறங்கியது.

வழக்கம்போல் பள்ளிக்குப் புறப்படும் தோரணையில், பள்ளிச் சீருடை அணிந்து, புத்தகப்பை, டிபன் பாக்ஸ் சகிதமாக வீட்டை விட்டு வெளியேறினான். அம்மாவிடமோ, அப்பாவிடமோ முகம் கொடுத்துப் பேசவில்லை. பஸ்ஸுக்குக் காசை வாங்கிக் கொண்டான். 11-ஆம் எண் வண்டியில் ஏறி அமர்ந்தான். பாளையங்கோட்டைக்கு டிக்கெட் எடுப்பதற்குப் பதிலாக ரத்னாவுக்கு டிக்கெட் எடுத்தான். ஸ்டாப் வந்ததும் இறங்கி மௌனமாக டவுன் நகராட்சிப் பூங்காவில் நுழைந்தான். அங்குள்ள சிமெண்ட் இருக்கையில் வசதியாக அமர்ந்து கொண்டான்.

மனதில் கொந்தளிப்பு. 'ஆசையாக வளர்க்கும் நகம் அல்லவா இவை? ஒருபோதும் அதை இழக்க முடியாது' என்று மனதிற்குள் குமுறினான். 'படிப்பாம் படிப்பு. போனால் போகிறதே' - அவன் மனம் வீம்பால் வீங்கியிருந்தது.


கண்களை மூடிய வண்ணம் அப்படியே படுத்த நிலையில் சிந்தித்த வண்ணம் இருந்தான். எவ்வளவு நேரம் அப்படி இருந்தானோ தெரியவில்லை. யாரோ அவனைத் தட்டி எழுப்புவதைப் போன்ற உணர்வு. கண் விழித்தான்.

எதிரே... இது யார்?

கண்களைச் சரிசெய்து கொண்டு பார்த்தான்.

"என்னடா சோமு என்னை அப்படிப் பாக்கறே? பள்ளிக் கூடத்துக்குப் போகாமே இங்க எப்படி? நீ ரொம்பக்





புள்ளி, வரி!

தாமஸ் ஆல்வா எடிசனின் குழந் தைகள் பெயர் என்ன தெரியுமா? ஒரு பிள்ளையின் பெயர் புள்ளி! மற்றொரு பிள்ளையின் பெயர் வரி! வேடிக்கை யாக இல்லை? அவரே வேடிக்கை யாகத்தான் பெயரிட்டார்!

- எஸ். விஜயா சீனிவாசன்

கோபக்காரனாச்சே? யார் மேலே கோபம்? இங்கே வந்திருக்கே! அப்பா, அம்மாவோடவா? அல்லது பள்ளிக்கூடத் திலே சண்டையா?" வந்தவன் மடமட வென்று பேசிக் கொண்டே சென்றான். நீல நிறத்தில் பேண்ட்டும் சட்டையும் போட்டிருந்தான். ஒர்க்ஷாப்பில் வேலை செய்பவனைப் போலத் தோன்றினான். உடைகளில் எண்ணெய் கலந்த அழுக்கு. தலை மொட்டையை மறைக்க கிரிக் கெட் தொப்பி அணிந்திருந்தான்.

"ஓ! நீ இப்ராஹிம் இல்லே? என்னடா தலையிலே மொட்டை போட்டு இருக்கே! ஆள் அடையாளமே தெரி யலே! இந்த வருஷம் ஆரம்பத்திலேயே பள்ளிக் கூடத்திலேருந்து விலகிட்டே இல்லே? இப்ப என்ன செய்யறே? என் றான் சோமு. அவன் முகத்தில் மகிழ்ச்சி. பழைய நண்பனைப் பார்த்ததில் ஒரு ஆறுதல் தெரிந்தது.

"நான் பக்கத்திலே உள்ள ஆட்டோ மொபைல்ஸ் ஒர்க் ஷாப்பில் வேலை பார்க்கறேன். எங்க அப்பா இறந்து போன பின்னாலே எங்க அம்மாவாலே என்னைப் படிக்க வைக்க முடியலே. குடும்பத்துக்கு வருமானம் தேவைப்பட் டது. பாவம், எங்க அம்மாவாலே உழைக்க முடியுமா?" என்றான் இப்ரா ஹிம்.

"ஏண்டா இப்ராஹிம், உனக்கு இரண்டு சக்கர வாகனங்களை ரிப்பேர் பண்ணத் தெரியுமா? வேலைக்குச் சேர்ந் தேன்னு சொல்றியே! உன்னை எப்படி வேலைக்குச் சேர்த்தாங்க?"

"அதை ஏண்டா கேக்கறே? முதல்ல என்னை டீ வாங்கித் தரத்தான் சேர்த் தாங்க. பின்னாலே ஸ்பானர் மற்றும் கருவிகள் பேரைக் கத்துக்கிட்டேன். இப்போ கொஞ்சம் கொஞ்சம் தொழில் புரியுது. சிக்கிரத்திலேயே நானும் தன் னாலேயே இரண்டு சக்கர வாகனங் களைப் பழுது பார்க்கும் மெகானிக்காக வளர்ந்துருவேன்."

"சரிடா. நீதான் பெரிய ஸ்டைல் மன்னனாச்சே! உன் முடிமேலே அப்படி ஆசையாக இருப்பியே. அதைக் கோதி விடரதும் அடிக்கடி சீவிக் கொள் வதும், சின்ன பிளாஸ்டிக் பிரேம் போட்ட கண்ணாடியிலே பார்த்துக் கொள்வ தும் ஏக அமர்க்களமா இருப்பியே. என் னடா இது? உன் முடி எங்கே ஏன் மொட்டை போட்டே?"

'அதைக் கேக்கறியா? எங்க முதலாளி ரொம்பக் கோபக்காரர். எதுக்கெடுத் தாலும் என்னை அடிக்க வந்திருவாரு. திட்டுவாரு. சில நேரங்களிலே என் முடி யைக் கொத்தாகப் பிடித்துத் தள்ளிவிடு வாரு. அதனாலே எதுக்கு வம்புன்னு மொட்டை போட்டுட்டேன்!

"ஐயையோ! ஏண்டா அந்த மாதிரி ஆளிடத்திலே வேலை பார்க்கறே? உடனே நீயுமாச்சு உன் வேலையுமாச்சு என்று வந்துவிட வேண்டியதுதானே?

இப்ராஹிம் சிரித்தான்.

"எங்க மொதலாளி டூவீலர்ஸ் ரிப்பேர் பண்றதிலே பெரிய கில்லாடி. அவர் கிட்டே நல்ல திறமை இருக்கு. நல்ல தொழில் இருக்கு. அதை நாமும் கத்துக் கிட்டா நம்ம சொந்தக் கால்ல நிக்க லாம்ல, நமக்குன்னு ஒரு தொழிலை கத்துக்கணும். அப்பத்தான் தலை நிமிர்ந்து வாழலாம். அதுக்கு நாம கத்துக் கொள்ளும் காலத்திலே கைகட்டிப் பணிவா நின்னாத்தான், பின்னாலே நாம யாருக்கும் கைகட்டி நிக்க வேண்டி யிருக்காது."

"ஆனால் பள்ளிக்கூடத்திலே அப்படிச் சிரமம் கிடையாது. அங்கே கத்துக் கொள்பவர்களுக்கு ராஜமரியாதை. படிக்காதவனைக் கூடக் கவலையோடு முயன்று படிக்க வைச்சிருவாங்க. நான் அந்த வாய்ப்பை அனுபவிக்கக் கொடுத்து வெக்கலே. இருந்தாலும் பரவாயில்லை. நானும் வாழ்க்கையிலே பெரிய ஆளாயிடுவேன்னு நம்பிக்கை இருக்கு."

இப்ராஹிமின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் சோமுவின் காதுகளில் சம்மட்டியைப் போல இறங்கின. சோமு யோசிக்கத் தலைப்பட்டான்.

'என்னடா நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டே போறேன். நீ ஒன்றும் சொல்லாம ஊமையாட்டம் இருக்கியே? ஏன்டா பள்ளிக்கூடம் போகலே?" இப்ராஹிம் அன்போடு கேட்டு மேலும் தொடர்ந்தான்.

"ஆனா ஒண்ணு. பள்ளிக் கூடத்தில் படிப்பதற்கு உரிய வாய்ப்பை வீணாக்கிடாதே. என்ன நடந்திருந்தாலும் சரிதான். மொதல்ல பள்ளிக் கூடம் போயிடு" என்றான் இப்ராஹிம்.

கஷ்டமும் சோதனைகளும் அவனை அந்த இளம் வயதிலேயே அப்படிப் பேச வைத்தன.

ஏதோ தீர்மானித்துக் கொண்டவனாக சோமு தனது பென்சில் டப்பாவைத் திறந்தான். தான் ஆசையாக வளர்த்த நகங்களை ஒரு முறை பார்த்துக் கொண்டான். பின், பிளேடை எடுத்து நகத்தை வெட்டிக் கொண்டே பேசினான்.

"இப்ராஹிம். உன்னைப் பார்த்ததிலே ஒரு புதிய பாடத்தை நான் கத்துக்கிட்டேன். ரொம்ப நன்றிடா" என்று சொல்லியவனாக முழுவதும் எல்லா நகங்களையும் வெட்டிக் கொண்டான்.

"நான் வரேன்டா' என்று சொல்லியபடியே பள்ளிக்குச் செல்லும் பஸ் ஸ்டாப்பை நோக்கி விரையலானான்.

இப்ராஹிமுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தெரியணும்!



பாராட்டத் தெரியணும்
பரிசளித்து மகிழணும்
பழகப் பழக வளருவதும்
அன்புதான் - நீ
பழகிவிட்டால் மலருவதும்
நட்புதான்!

சிந்தனைகள் உயரணும்
திறமையாக உழைக்கணும்
திறமையிலே சேரவேணும்
முயற்சிதான் - உன்
முயற்சியிலே பெறுவதுவும்
வளர்ச்சிதான்!

இனிமை யாகப் பேசணும்
எதிரிகளும் மாறணும்
தணிவினிலே தோன்றுவதும்
கனிவுதான் - அந்தக்
கனிவினிலே தெரிவதுவும்
உறவுதான்!

சொல்லிச் சொல்லிப் படிக்கணும்
சூட்சுமத்தைப் பெருக்கணும்
துருவித் துருவிக் காண்பதனால்
நிறைவுதான் - கல்வி
தோண்டத் தோண்டப்
பெறுவதுவோ
அறிவுதான்!

-பரிதி. இரா. வேங்கடேசன்



கண்ணன் மலையடிவாரம் வந்து விட்டான்.

இனி என்ன செய்வது? எங்கே போவது? ஒரே குழப்பமாக இருந்தது. சாலை முடிந்தது. இனி ஒற்றையடிப் பாதைகள்தான். வடபகுதியில் ஆதிவாசி மக்களின் குடிசைகள் தெரிந்தன. 'அங்கே போக வேண்டாம். யார் கண்ணிலும் படக்கூடாது.'

அவன் தெற்கே வந்து ஒரு பாதை வழியாக அடர்வனத்தினுள் நடந்தான். ஒரு பக்கம் சில்வண்டுகளின் ரீங்காரம், தூரத்தில் எங்கே ஏதோ பறவையின் அவல ஓசை. அவனுக்குப் பயமாக இருந்தது.

காற்று பலமாக வீசியது. 'ஏதேனும் மரக்கிளை மேலே விழுந்து விட்டால்?' மெல்லிய தூறல் விழுந்தது. ஒரு மரத்தடியில் நின்றான். தூறல் நின்றதும் மேலே நடந்தான். பாதையில் கற்களும் சரளிகளும் கரடுமுரடாக இருந்தன. மரங்களிலிருந்து விழுந்த மக்கிய இலைகள் பாதையை மறைத்துக் கிடந்தன.

கண்ணனுக்கு கால் வலி எடுத்ததால் ஒரு மரத்தின் வேர் முண்டில் உட்கார்ந்து கொண்டான்.


வேர்முண்டு அசைவது போலத் தெரிந்தது. படக்கென்று எழுந்தான். தூரத்து இரயில் வண்டி போல அந்த வேர் சரசரவென்று ஊர்ந்து சென்றது. "ஐயோ... மலைப் பாம்பு" என்று அலறியவாறே ஓட்டமெடுத்தான். இண்டமுள் கொடி இழுத்து சட்டை சர் என்று கிழிந்து விட்டது. சட்டையைக் கழற்றித் தூர எறிந்தான். மேலும் ஓடினான்.

தேடவா வந்தே?



தரையில் படர்ந்திருந்த காட்டுக் கொடியில் கால் இடறிக் கீழே விழுந்தான். மெல்ல எழுந்தான். கொடி காலில் சுற்றியிருந்தது.

'இதென்ன! நாம் ஆப்பிரிக்



கக் காடுகளில் இருப்பதாக படித்தோமே, அது போல மனிதர்களைச் சுற்றி இறுக்கிக் கொல்லும் ஆட்கொல்லிக் கொடி வகையா? இங்கு கூட இருக்கிறதா?'

அவன் மெல்லக் குனிந்து கொடியைக் கைகளால் அகற்றி விட்டு பாதைக்கு வந்தான். உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

'அம்மா இந் நேரம் தேடுவார்களே; பாவம். தேடட்டும், தேடி மகனைக் காணவில்லையே என்று அழட்டும், பரீட்சையில் பெயிலாகி விட்டால் சும்மா போட்டு மாட்டடி அடிப்பார்களாக்கும்? நான் அடிகளை வாங்கிக் கொண்டு வீட்டிலே இருப்பேனாக்கும்? அதுதான் ஓடி வந்து விட்டேனே? அம்மாவும் அப்பாவும் நன்றாகத் தேடட்டும். நான் எங்காவது போய் சாகிறேன்.'

ஒரு பாறையில் உட்கார்ந்து கொண்டு விம்மி விம்மி அழுதான். தலையில் ஏதோ இலைகள் விழுந்தன. தலைமுடியைத் தட்டி விட்டுக் கொண்டான். மரக்கிளைகளில் பெரிய பெரிய குரங்குகள் தாவி வந்து அமர்ந்து கொண்டு, 'கிரிக் பரிக்'கென்று சத்தம் போட்டன.

அதைப் பார்த்து கண்ணன் பயத்தால் நடுங்கினான்.

'ஐயோ, இப்போது என்ன செய்வது? யானை, புலி ஏதேனும் வந்து விட்டால்? அடித்துக் கொன்று போட்டால்? நாம் வீட்டை விட்டு வந்திருக்கக் கூடாது! நம் அம்மாதானே அடித்தார்கள்? நாம் படித்து நல்லா இருக்க வேண்டுமென்று தானே அடித்தார்கள்? அவன் குழம்பித் தவித்தான்.

குரங்குகள் போய் விட்டன.

உடம்பு அசதியாக இருக்கவே, கண்ணன் அப்படியே பாறையில் சாய்ந்து

கொ. மா. கோதண்டம்



தூங்கி விட்டான். ஏதோ சத்தம் கேட்டு எழுந்தான்.

அடுத்த பகுதிப் பாதையில் நான்கைந்து பெரியவர்களும் இரண்டு சிறுவர்களும் போவது தெரிந்தது.

'யார் அவர்கள்? எங்கே போகிறார்கள்? நாமும் அவர்கள் கூடவே போய் விடலாமே. ஒண்டியாக இருக்க பயமாக இருக்கிறதே!'

மெல்ல எழுந்தான். சட்டையில்லாத உடம்பும், கலைந்த தலைமுடியும் அவனுக்கே வெட்கமாக இருந்தது. குறுக்குப் பாதை வழியாக அவர்களைப் பின் தொடர்ந்து ஓடினான். முன்னால் சென்று கொண்டிருந்த சிறுவன் இவன் வருவதைப் பார்த்து நின்றான்.

"என்னைப்பா நீயும் எங்க கூட தேடவா வந்தே?" என்றான்.

"ஆங்... ஆமா..." என்றான் கண்ணன்.

"அப்ப எங்க பின்னாலயே வா. தேடுவோம்."

"வரட்டும் நம்ம கூட இவனும் தேடட்டும்."

பெரியவர்களும் சொல்லி விட்டு நாலாபக்கமும் பார்த்துக் கொண்டே சென்றார்கள்.

"இவர்கள் எதைத் தேடுகிறார்கள்?" ஒன்றும் புரியவில்லை கண்ணனுக்கு. கூடவே நடந்தான். அவர்கள் பாறையில் ஏறினார்கள், சரிவில் இறங்கினார்கள். திரும்பி வேறு பக்கம் சென்றார்கள். புதரில் கூர்ந்து பார்த்தார்கள். அடுத்த பாதையில் சென்றார்கள். மரங்களின் மேலேயும் பார்த்தார்கள்.

ஒரு சரிவுப் பாறையில் ஒரு குகை தெரிந்தது.

"ஏய், அது புலி குகையா இருந்தா? பாத்துப் போங்கப்பா."

ஒருவர் பதுங்கிச் சென்று ஒரு மரத்தின் மறைவில் இருந்து குகையை எட்டிப் பார்த்து "உள்ளே ஒண்ணுமில்லே வாங்கப்பா!" என்றார்.

அவர்கள் மேலே நடந்தார்கள்.

தூரத்துப் புல்வெளியில் ஒரு மான் குட்டி மேய்ந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்த கண்ணன், "ஆகா அழகான புள்ளிமான்" என்றான்.

"உஸ் சத்தம் போடாதே. ஓடிப் போகும். வசமான கல்லைத் தேடி எடுத்துட்டு வர்றேன். ஒரே எறி! தலையில பட்டுக் கீழே விழுந்துரும். நமக்கு யோகந்தான்" அவர் மெல்லச் சொல்லி விட்டு கல்லைத் தேடலானார்.

"பாவிங்க கொன்னு போடுவாங்க போலிருக்கே." கண்ணன் ஒரு புல்லைப் பறித்துத் தன் மூக்கில் நுழைத்தான். "அக்ஸ் அக்ஸி" என்று அவன் பெரிதாகத் தும்மல் போட்டதும் புள்ளிமான் துள்ளி ஓடி விட்டது.

"யார்டா இவன் சனியன் புடிச்ச பய? தும்மி காரியத்தைக் கெடுத்திட்டான்" - வைதுவிட்டு எடுத்த கல்லைக் கீழே போட்டார் பெரியவர்.

மான்குட்டியை உயிருடன் விரட்டி விட்டதில் கண்ணனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"தேடித் தேடி இருட்டிடும் போலி

ருக்கு. கண்ணுக்கே தட்டுப்படலியே! வாங்க வடக்கே போயி பார்க்கலாம்.''

அவர்கள் அடுத்த பகுதியிலும் தேட லானார்கள்.

நேரமும் ஆகிக் கொண்டிருந்தது.

தூரத்தில் கோபத்துடனும் தலையில் சுற்றிய துண்டுடனும் ஒரு ஆதிவாசிச் சிறுவன் மலைச்சரிவில் இறங்கி வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்த தும் கண்ணன், "நீலா" என்று கத்தினான்.

இவர்களிடம் ஓடி வந்த நீலன் கண் ணனைப் பார்த்து, வியந்தான்.

''நான் சும்மா வந்தேன். இவங்க ஏதோ தேடிக்கிட்டு வந்தாங்க. நானும் கூடவே வந்தேன் நீலா'' என்றான் கண்ணன்.

"நீங்க என்ன தேடுறீங்க"

"தம்பி, நாங்க பக்கத்து கிராமம். அப் பப்ப மலைக்கு தேக்க எல பறிக்க வரு வோம். இன்னக்கி ஒரு பெரியவரு ஊருக்கு வந்து எங்களை விசாரிச்சு வீட் டுக்கு வந்தாரு. எம் பையன் கோவிச்சிக் கிட்டு மலைப் பக்கம் போயிட்டான். ஒங்களுக்குத்தான் எல்லா பாதையும் தெரியுமில்லே. இன்னக்கி நான் சம் பளம் தந்திடுறேன். நாலஞ்சி பேரு போயி என் பையனைத் தேடிக்கிட்டு வாங்கன்னு சொன்னாரு. பையன் நீல நிற கட்டம் போட்ட சட்டை போட் டிருப்பான். உச்சி வகிடு எடுத்து சீவி யிருப்பான். பேரு கண்ணன்னு சொன் னாரு. அதான் அந்தப் பையனைத் தேடிக்கிட்டு இருக்கோம். நீ எங்கே யாவது பார்த்தாயா?''

"என்ன சாமி, கண்ணன் உங்க கூடத் தானே வராரு!'' என்றான் நீலன்.

கண்ணன் ''கலகல''வென்று சிரித்து விட்டான்.

"அடடா! சட்டையில்லாமே தலை முடி கலஞ்சிருந்ததால நாங்க இந்தப் பையனை சந்தேகிக்கல. என்னப்பா நீயாவது சொல்லக் கூடாது?'' என்றார் பெரியவர்.


''அவரே அவரைத் தேடிக்கிட்டு இல்ல இருந்திருக்காரு! என்ன சாமி?''

"நீங்களும் கேட்கல்லே. என்ன தேடு றீங்கன்னும் சொல்லல்லே. நானும் பொழுது போகட்டுமேன்னு கூடவே வந்தேன்'' என்றான் கண்ணன்.

"சரி சாமி. இனிமே அப்பா அம்மா கூட கோவிச்சிட்டு இப்படியெல்லாம் வராதீங்க! நீங்க இவுகள கூட்டிப் போயி பத்திரமா ஊட்டுல சேத்திடுங்க.''

நீலனிடம் விடைபெற்றுக் கொண்டு கண்ணன் அவர்களோடு வீடு திரும்பி னான்.

மோட்டார் சைக்கிள் பொம்மை



மோட்டார் சைக்கிள் பொம்மை
வேண்டும் என்றான் கண்ணன்

மோட்டார் சைக்கிள் பொம்மை
வாங்கி வந்தால் அழுதான்!

கண்ணன் ஏனோ அழுதான்?
என்ன கேட்டான் தெரியுமா?

மோட்டார் தனியே வேணுமாம்
சைக்கிள் தனியே வேணுமாம்!

பொம்மை தனியே வேணுமாம்
மூன்றும் தனியே வேணுமாம்!

— தம்பி சீனிவாசன்

அந்தப் பையனா நீ?

அந்த ஆரம்பப் பள்ளிக்கு எதிரே, ஒரு சிறிய பழக்கடை இருந்தது. பிள்ளைகள், நண்பர்களோடு சென்று இடைவேளையில், பழங்களை வாங்கிக் கொண்டு உண்டு மகிழ்ந்தனர். ஓர் ஏழைச் சிறுவன் மட்டும் அந்தப் பழக்கடையையும், அங்கே பழங்களை வாங்கித் தின்று மகிழும் பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளையும் பார்த்தபடி நின்றான்.

"தம்பி! இங்கே வா!" என்று அழைத்து, ஒரு பழத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள் பழக்காரி.

"என்னிடம் காசு இல்லையே?" என்றான் சிறுவன்.

"காசு வேண்டாம். உனக்குச் சும்மா தருகிறேன்."

"சும்மாவா? வேண்டாம்! நான் யாரிடமும் பிச்சை வாங்குவது கிடையாது!"

"பிச்சை என்று சொல்லாதே. அன்போடு தருகிறேன்."

"இனாமாக, நான் யாரிடமும் எதையும் வாங்கிப் பழக்கமில்லை."

"சரி... கடனாக வாங்கிக் கொள். நாளைக்குக் காசு கொடு! நாளைக்கு முடிலேன்னா, உன்னால் முடிகிற போது கொடு. சங்கடப்படாமல் சாப்பிடு. நீ காசு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் எனக்கு மகிழ்ச்சியே!"

"அம்மா... நீ என்னைக் கடன் காரனாக்கி விடாதே. கண்டிப்பாய்க் கொடுத்து விடுவேன்."

ஆண்டுகள் பல ஓடின. சிறுவன் வளர்ந்து பெரியவன் ஆனான். பழக்காரியின் அன்பை அவனால், மறக்க முடியவில்லை. அதை விட, அவளுக்குக் கொடுக்காமற் போன கடனையும், மறக்கவே முடியவில்லை. அப்போது, அவன் நாட்டிற்கே மன்னனாகி இருந்தான்! இருந்தாலும், பழக்காரியின் கடனைத் தீர்க்க, அவனுக்கு நேரமே வாய்க்காமல் இருந்தது. ஒரு நாள், அவன் பிரெய்னி நகருக்குச் சென்றான். அங்கேதான் அவன் படித்த ஆரம்பப் பள்ளியும் அந்தப் பழக்கடையும் இருந்தன.

பாட்டியாகி விட்டிருந்த பழக்காரியின் பழக்கடைக்கு முன்பாகச் சென்று நின்றான் அவன். பட்டாளத்து வீரனைப் போல் உடை அணிந்து கொண்டிருந்த அவனைக் கண்டவுடன், பதறிப் போய் எழுந்து நின்றாள் பழக்காரப் பாட்டி. இயல்பாகவே நடுங்கிக் கொண்டிருந்த அவள் உடல் மேலும், நடுங்க ஆரம்பித்தது.

அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.



"ஓ அந்தப் பையனா நீ....! எப்படி வளர்ந்து விட்டாய்!"

"நான் இப்போது இந்த நாட்டுக்கே மன்னன்! முன்பு வாங்கிய கடனைத் தீர்த்துப் போகவே வந்திருக்கிறேன்" என்று கூறினான் அவன்.


பாட்டியின் கண்கள் கலங்கின. விசும்பினாள்.

"பாட்டி அழுகிறாயா?"

"இல்லை தம்பி! ஆனந்தக் கண்ணீர், அன்பு வெள்ளம்!"

ஏழைப் பாட்டிக்கு அந்த இளைஞன் ஒரு புதிய வீட்டைக் கட்டிக் கொடுத்தான். அவள் ஏழையாக இருந்த காரணத்தால், தன் பேரனைப் படிக்க வைக்க முடியாமல் தவித்தாள். அந்தப் பேரனைத் தான் படித்த அதே பள்ளியிலேயே சேர்த்து, நல்ல முறையில் கல்வி பெற வழி செய்தான். தான் எவ்வளவு உயர்ந்த நிலைக்கு வந்த போதும், தனக்கு வறுமை நிலையில், உதவிய எவரையும் மறவாத நல்லியல்பு கொண்ட அந்த இளைஞன்தான் நெப்போலியன் போனபார்ட்.

— வி.மு. தெய்வா



அவன்தான் காரணம்!

ஆயிரம் மாணவர்களுக்கு மேல் படிக்கும் பரணர் மேனிலைப் பள்ளியில், ஏழாம் வகுப்பு மாணவன் மணிசேகரனைப் பாராட்டுவதற்காக ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் பொருத்தமான முறையில் ஆடம்பர ஆரவாரம் இல்லாமல் விழாவை நடத்துவதற்குத் திட்டமிட்டு இருந்தனர்.

மேடையில் தலைமையாசிரியர் கூட்டத்தைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். மணிசேகரனின் பெற்றோர் மகிழ்ச்சியோடு காணப்பட்டனர். மணிசேகரனின் வகுப்பில் பாடம் எடுக்கும் ஆசிரியர்களின் முகங்களில், ஆனந்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

அவ்வளவு மகிழ்ச்சிக்கும் காரணமான மணிசேகரன் மட்டும் ஏனோ நிலை கொள்ளாமல் தவிப்பதைப் போல் அமர்ந்திருந்தான். அடிக்கடி அவன் பின் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் திரும்பும் போதெல்லாம் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தான் குணபதி.

மணிசேகரனும் குணபதியும் ஏழாம் வகுப்பு 'ஆ' பிரிவில் படிப்பவர்கள். இருவருமே நன்றாகப் படிப்பார்கள். என்றாலும் மணிதான் குணாவை விடக் கூடுதலாக மதிப்பெண்கள் பெறுவான்.

குணபதியின் பேச்சு நடத்தை எல்லாமே மணிக்கு நிரம்பவும் பிடிக்கும். மணி அவனிடம் நெருங்கிப் பழக விரும்புவான். குணாவோ, அவனிடமிருந்து ஒதுங்கியே செல்வான்.

அதற்குக் காரணம் இருந்தது. மணிசேகரனைப் போல் தான், வசதியான வீட்டுப் பிள்ளையாக இல்லாமலிருப்பதை அவன் அடிக்கடி எண்ணிப் பார்த்துக் கொள்வான்.

தனக்கு தான் படிக்கிற அளவுக்குத்தான் மதிப்பெண் கிடைக்கிறது என்று குணாவுக்கு உறுதியான நம்பிக்கை. அவனுடைய தாழ்வு மனப்பான்மையை எப்படியாவது போக்கிவிட வேண்டும் என்று அவனிடம் நெருங்கிப் பழக மணி முயல்வான். ஆனால், மணியிடம் தெளிவாகப்

பூவை அமுதன்

பேசுவதைத் தவிர்த்துக் கொள்பவன் போல் நடந்து கொள்வான் குணா.

"டேய குணா! ஏன் என்னைப் பார்த்து இப்படி மிரண்டு ஓடறே! நான் உன்னோடு, உண்மையாப் பழகத்தான் ஆசைப்படறேன்!"

"வேண்டாம் மணி. உன் அளவுக்கு எனக்கு வசதியில்லே. ஒரு நல்ல சட்டை கூட எனக்கு இல்லை. அதனாலே, நான் உன்கிட்டே எதுக்கோ ஒட்டிக்கிட்டு இருக்கிறதா மத்த பையனுங்க பேசுவா னுங்க; ஏசுவானுங்க. என் மனசு தாங் காது. வறுமையைத் தாங்கிக்குவேன். அநாவசியமா, மத்தவங்க கேலி பண்ற தை என்னாலே தாங்கிக்க முடியாது" என்பான் குணா.


நகரத்திலே புகழ் பெற்ற ஒரு பெரிய கம்பெனியார், மாணவர்க்கான ஒரு கட்டுரைப் போட்டியை அறிவித்திருந் தார்கள். 'சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணுவதில் சிறுவர்களின் பங்கு' என் பது கட்டுரையின் தலைப்பு. ஒரு குறிப் பிட்ட நாளில், அனைத்துப் பள்ளிகளி லிருந்தும் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள், அந் நகரத்திலிருந்த வள்ளுவர் அரங்கத்தில் அமர்ந்து ஒரே நேரத்தில் அங்கேயே கட்டுரையை எழுதித் தர வேண்டும்.

அந்த நகரம், அவர்கள் ஊரிலிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருந் தது. மாணவர்கள் அவர்கள் சொந்தச் செலவிலே சென்று போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்.

அந்த வகுப்பிலே ஆறு பேர் கட் டுரை எழுதப் பெயர் கொடுத்தார்கள். மணிசேகரனும் தன் பெயரைக் கொடுத் தான். நிச்சயமாகக் குணாவும் போட்டி யில் கலந்து கொள்வான் என்றுதான் மணி நினைத்தான்.

ஆசிரியர் கூட குணபதியைக் கேட் டார். அவன் வாயைத் திறந்து ஏதும் சொல்லாமல், மௌனமாக எழுந்து நின்று, கலந்து கொள்ளவில்லை என்ப தற்கு அடையாளமாகத் தலையை அசைத்துவிட்டு அமர்ந்து கொண்டான்.

ஆசிரியருக்கே ஆச்சரியமாக இருந் தது. அவன் அருகே வந்து, அவன் முது




கைத் தட்டிக் கொடுத்து, "யோசித்துச் சொல். இன்று மாலை பள்ளி முடி வதற்குள் வந்து பெயர் கொடுத்தாலும் சேர்த்துக் கொள்வேன்" என்று சொல்லி விட்டுப் போனார்.

இடைவேளை மணி எப்போது ஒலிக் கும் என்று காத்துத் தவித்துக் கிடந்தான் மணிசேகரன். மணி ஒலித்ததும், மாண வர்கள் வகுப்பைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். குணா, தனது இடத் திலேயே அமர்ந்திருந்தான். மணி வேகமாக அவனிடம் வந்தான். ஏதும் கேட்காமல் மௌனமாகவே நின்றான்.

"என்ன மணி, நீ என்னை என்ன கேட்கப் போறே? ஏன் கட்டுரைப் போட்டியிலே கலந்துக்கலியான்னு தானே?"

குணா, மணியைக் கேட்டான். மணி ஏதும் பேசவில்லை.

"நகரத்துக்குப் போய் வர பஸ் சார்ஜ் வேணும். உனக்குத் தெரியாதது இல்லே,



என் அப்பாவுக்கு ஆக்ஸிடென்ட் ஆகி அரசு மருத்துவமனையில் சேர்த்திருக்காங்க. அதனாலே அம்மாவும் எங்கேயும் வீட்டு வேலைக்குப் போறதில்லே. அதனாலே நான்......"

மேலே ஏதும் பேச முடியவில்லை அவனால். தொண்டையை அடைத்தது. கண்ணீர் பொங்கியது. அப்போதுதான் மணி மெதுவாகச் சொன்னான், "ரெண்டு பேரும் சேர்ந்து போகலாம். என் கூட நீயும் வா, பஸ் சார்ஜ் பற்றிக் கவலை வேண்டாம்."

குணா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிரிக்க முயன்றான். அவன் ஒத்துக் கொள்ள மாட்டானா என்னும் ஏக்கம் எழுந்து நின்றது மணியின் மனத்தில்.

"என்னாலே யாருக்கும் சிரமம் இருக்கக் கூடாது. நம்மாலே முடிந்ததைத் தான் நாம் செய்யணும். முடியாததுக்கு ஆசையை வளர்த்துக் கொள்ளக் கூடாது. இப்படி, என் அப்பா அம்மா ரெண்டு பேருமே அடிக்கடி எனக்குச் சொல்வாங்க. பஸ் கட்டணம் நீ தரலாம். ஆனால், தமிழ் நாட்டில் பல பள்ளிகளிலிருந்தும் வந்து கலந்து கொள்ளும் அந்தப் போட்டிக்குப் போக, பளிச்சின்னு ஒரு நல்ல சட்டையிருக்கா எனக்கு?" என்றான் குணா.

"நீ நல்லா எழுதுவே. முதல் பரிசே கூட உனக்குக் கிடைக்கலாம். இல்லேன்னாலும் ஏதாவது ஒரு பரிசு நிச்சயமா உனக்குக் கிடைக்கும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு."

"உனக்கு நம்பிக்கை இருக்கலாம். இரவல் சட்டை போட்டுக்கிட்டு மற்றவங்க பணத்திலே பஸ்ஸிலே பிரயாணம் செய்துகிட்டு....."

"போக்கு வரத்துச் செலவைக் கம்பெனியார் அங்கே கொடுப்பாங்கன்னு கூடச் சொல்றாங்க குணா."

"எப்படியிருந்தாலும், எனக்கு மனசு



இந்தப்பா உன் கால் காயத்துக்கு கட்டுப் போட்டுட்டேன், உன் கண்ணுக்கு மருந்து போடணும்னா மேல் மாடியில் குருவியாரிடம் போ....!

ஒரே குழப்பமாயிருக்கே. நான் வரல்லே. நீ நல்லா எழுதிட்டுவா. வேண்டுமானால் நான் உனக்கு எனக்குத் தெரிந்த குறிப்புகளைச் சொல்றேன். கட்டுரைக்குப் பயன்பட்டா எடுத்துக்கோ."

உறுதியாகச் சொல்லி விட்டான் குணபதி. ஏமாற்றத்தை அடக்கிக் கொண்டு மேலும் அவனைத் தொந்தரவு செய்யாமல், வகுப்பறையை விட்டு வெளியே போனான் மணிசேகரன்.

உண்மையில் குணபதி கொடுத்த குறிப்புகள் மணி கட்டுரை எழுதுவதற்குப் பெரிதும் உதவியாக இருந்தன. அவனும் நன்றாக எழுதியிருந்தான். ஆனால் தனக்கே முதற் பரிசு கிடைக்கும் என்பதை அவன் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை.

போட்டி நடந்த அதே வள்ளுவர் அரங்கத்தில் பரிசளிப்பும் பாராட்டும் பெரிய விழாவாக நடந்தன. மணிசேகரன் எழுதியிருந்த கட்டுரையிலிருந்த கருத்துக்களைப் பேச்சாளர்கள் பலரும் பாராட்டிப் பேசினார்கள்.

அந்தக் கருத்துக்களுக்குக் குறிப்பைக் கொடுத்தவன் குணபதி என்பது மணியின் உள்ளத்துக்குத் தெரியும். குணா கலந்து கொண்டிருந்தால் அந்தப் பரிசும் பாராட்டும் அவனுக்குத் தானே கிடைத்திருக்கும்! அவன் பெற்ற வெற்றி அவனுக்கும், அவன் பள்ளிக்கும் அவன் பெற்றோருக்கும் பெருமை சேர்த்தது. ஆனால், அந்தப் பெருமைக்குரியவன் உண்மையில் தானா, குணாவா?

இந்த எண்ணம்தான் மணியை நன்றியுணர்வோடு அடிக்கடி குணாவைத் திரும்பிப் பார்க்கத் தூண்டியது.

"மணி மணி! என்னடா யோசனை? உன்னை மேடைக்கு அழைக்கிறார்கள்!" என்று பக்கத்திலிருந்த மாணவன் அவனைத் தோளில் தட்டிய போதுதான், மணி தன் நினைவுக்குத் திரும்பினான்.


வேகமாக மேடையை நோக்கி விரைந்தான். அவன் கைகளில் கம்பெனியார் தந்த பரிசுப் பொருள்களும் பாராட்டுப் பத்திரமும் இருந்தன.

"இப்போது; தன் எழுத்துத் திறமையால் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசை வென்று, நம் பள்ளிக்கும் பெருமை சேர்த்துள்ள நம் அருமை மாணவன் மணிசேகரன், உங்கள் முன்னே பேசுவான். அதற்கு முன் நம் பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பாக ஒரு ஜோடி யூனிபாரத்தையும் இந்த கைக் கடியாரத்தையும் பரிசாக அளித்து மகிழ்கிறோம்!" என்று கூறி விட்டு அமர்ந்தார் பெற்றோர் ஆசிரியச் சங்கத் தலைவர்.

தலைமை ஆசிரியர் அந்தப் புத்தாடைகளையும், கை கடிகாரத்தையும் மணிசேகரனுக்கு மகிழ்ச்சியுடன் கொடுத்தார். மாணவர்களும் பெற்றோர்களும் கையொலி எழுப்பினர். அது அடங்க, இரண்டு நிமிடங்கள் ஆயின.

அது ஓய்ந்ததும் மணி தன் தலைமை ஆசிரியரிடம் மெதுவாக ஏதோ சொன்னான். உடனே அவர் அவனைத் தட்டிக் கொடுத்து, "உம்! பேசு!" என்றார். மணி பேசத் தொடங்கினான். அவன் பார்வை குணபதியின் மீதே பதிந்திருந்தது.

"...இங்கே உள்ள எல்லோருமே என்னைப் பாராட்டுகிறீர்கள். ஆனால் நான் என் நண்பன் குணபதியைப் பாராட்டுகிறேன். என் கட்டுரை முதற் பரிசு பெற்றதற்கு அவன்தான் காரணம். அவ




னுடைய கருத்துக்களை வைத்துத்தான் நான் கட்டுரையாக எழுதியிருந்தேன். இதை நான் மறந்தால், அல்லது மறைத்தால் நன்றியில்லாதவனாகி விடுவேன். வசதியுள்ள நான், வசதியில்லாத அவன் கருத்துக்களால் அடைந்த பரிசும் பாராட்டும் உண்மையில் எனக்குச் சேர வேண்டியவை அல்ல. ஆகவே பள்ளியில் கொடுத்திருக்கும் இந்தப் பரிசுகளை குணபதிக்கே கொடுக்க வேண்டும் என்று மதிப்புக்குரிய தலைமையாசிரியரைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். அங்கே போட்டி நடத்தியவர்கள் பரிசும் பாராட்டும் அளித்த போது எனக்கு இந்தப் புத்தி தோன்றவில்லை. இப்போது காலம் கடந்தாவது எனக்கு நன்றி மறவாத நல்ல புத்தியைத் தோன்றச் செய்த கடவுளுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்'' என்று மணிசேகரன் கண்ணீர் வழிய மேடையில், பேசினான். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

கீழே குணபதி மணிசேகரனின் பெரிய மனத்தை எண்ணி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான்.

''தங்களுக்குக் கிடைத்துள்ள பெருமைக்கு மற்றவர்கள்தான் காரணம் என்பதை எல்லோரும் மனதளவில் ஒப்புக் கொள்வார்கள். வெளிப்படையாகக் கூறிக் கொள்ள மாட்டார்கள். ஆனால், மணிசேகரன் இவ்வளவு பேர்களுக்கு நடுவே தன்னுடைய பெருமைக்குக் காரணம் நான்தான் என்பதை வெளிப்படையாகக் கூறித் தன்னுடைய தூய்மையான மனதைக் காட்டி விட்டான்! இவனுடைய பரந்த மனத்துக்கு ஈடு இணை கிடையாது'' என்று விம்மினான் குணசேகரன்.

விழாவில் திரண்டிருந்த அனைவரும் மணியையும் குணபதியையும் மா மாறிப் பார்த்து வியந்து பேசிக் கொ டிருந்தனர். மணி விரும்பியப க் பள்ளியில் தந்த அந்தப் பரிசு டு குணபதிக்குக் கொடுத்து, அந்த ரையும் மாணவர்களின் நல்ல குண லைமை போற்றிப் பாராட்டினார் ஆசிரியர்.

நண்பர்கள் சேர வழிகாட்டவும்





பேய் வெளிச்சம்!

பா. அகிலா

அந்தச் சின்ன இரயில்வே ஸ்டேஷனில் இரயில் நின்றபொழுது நேரம் அதிகாலை ஆறு மணி. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியிருந்த மணீஷ் குமார் தன் சிறிய சூட்கேசுடன் இரயிலில் இருந்து இறங்கினான். ஊருக்குள் நடந்தான்.

கிழக்கே வானம் பொன்னிறமாகச் சிவந்திருந்தது. பெண்கள் அநேகம்பேர் தங்கள் வீட்டின் முன் சாணி தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள். சரிவாக இருந்த அந்தத் தெருவில் மணீஷ் நடந்து அந்தப் பெரிய வீட்டின் முன் நின்றான்.

மணீஷைப் பார்த்த வேலைக்காரன் வேலன், மஞ்சள் நிற ரோஜாச் செடிக்குப் பாய்ச்சிக் கொண்டிருந்த தண்ணீர் ட்யூப்பை அப்படியே விட்டு விட்டு ஓடி வந்து கேட்டைத் திறந்தான்.

"அம்மா, குமார் தம்பி வந்திருக்கு" கத்தியபடி சமையல் அறையை நோக்கி ஓடினான்.

வேலனின் குரல் கேட்டு சமையல் அறையில் இருந்து வெளிவந்த பாட்டிக்கு பேரனைக் கண்டதும் மகிழ்ச்சி கரை புரண்டது.

"அம்மா, அப்பா, சுவாதி யாரும் வரலையா குமார்?"

"வரலை பாட்டி. சுவாதிக்கு இன்னும் ஒரு தேர்வு இருக்கு. ஒரு வாரம் கழிச்சு அம்மா அப்பா எல்லாம் வருவாங்க. தாத்தா எங்க போயிருக்காங்க பாட்டி?"

"வயலுக்குப் போயிருக்காங்க."

"தோட்டத்தில் நுங்கு இருக்குதா பாட்டி?"

"ம். நிறைய. வேலனை அனுப்பி வெட்டிட்டு வரச் சொல்றேன்."

மணீஷ் குமாருக்கு அந்தக் குக்கிராமம் ரொம்பப் பிடித்திருந்தது.

அன்று இரவு எட்டு மணி இருக்கும். தாத்தாவும், பாட்டியும் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்க, அருகே சிமெண்ட் தளத்தில் பக்கத்து வீட்டுச் சிறுவர்களுடன் கதை பேசிக் கொண்டிருந்தான் மணீஷ்.

"வானம் ஏன் நீல நிறத்தில் இருக்கு

தெரியுமா?" ஒரு சிறுவன் கேட்ட கேள்விக்கு மணீஷ் பதில் சொல்ல வாயைத் திறந்த போது -

"ஐயா வணக்கங்க" என்ற குரல் கேட்டு அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

ஊர்ப் பெரியவர்கள் ஐந்து பேருடன் கிராமத்துப் பூசாரியும் நின்று கொண்டிருந்தார். அவர்களை வரவேற்றார் தாத்தா. அனைவரும் அமர்ந்தனர்.

''ஐயா, இன்னைக்கு அந்தப் பூஜையை நடத்திடலாம்னு நினைக்கிறோம்.''

"நான் எப்ப வேணுமானாலும் தயார் தான்" என்றார் தாத்தா.

"அதான் பூசாரியையும் கூட்டிட்டு வந்தோம்.

"ரொம்ப நல்லதாப் போச்சு" என்று விடை கொடுத்தார் தாத்தா.

மணீஷ் குமாருக்கு அவர்கள் என்ன பூஜை நடத்தப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. தாத்தாவிடம் கேட்டான்.

தாத்தா சொன்னார்.

"குமார், கொஞ்ச நாளா இந்த ஊரை ஒரு கெட்ட ஆவி சுத்திக்கிட்டு இருக்குது. போன மாசம் கூட அந்த ஆவியால் இருபது பேர் வாந்தி பண்ணி இறந்து போயிட்டாங்க. அந்த ஆவி இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற ஒரு ஒற்றைப் பனைமரத்தின் உச்சியில் இருக்கு. அதை விரட்டுறதுக்குத்தான் பூஜை."

தனக்கு வந்த சிரிப்பை மணீஷ் அடக்கிக் கொண்டான். பெரியவர்கள் முன்னால் சிரிக்கக் கூடாது இல்லையா?

''அந்த ஆவியை நீங்கள் பார்த்திருக்கிறீங்களா தாத்தா?"

"ஆமாடா. பார்த்திருக்கேன். தினமும் ராத்திரி கரெக்ட்டா பன்னெண்டு மணிக்கு அந்த ஒற்றைப் பனைமரத்து உச்சியில ஒரு வெளிச்சம் தெரியும். அந்த வெளிச்சம்தான் கெட்ட ஆவி.

"அப்படியா தாத்தா?"

"ஆமா குமார். அது பேய்தான் சந்தேகமே இல்லை."

"உங்க கூட நாளைக்கு அந்தப் பேயைப் பார்க்க நானும் வர்றேன் தாத்தா."



முதலில் மறுத்த தாத்தா பிறகு அரை மனதுடன் இசைந்தார்.

இரவு பதினொன்று மணிக்கு அந்த ஒற்றையடிப் பாதையில் தாத்தா, பூசாரி உட்பட ஊர்ப் பெரியவர்கள் ஐந்து பேருடன் மணீஷ் குமாரும் நடந்து கொண்டிருந்தான்.

ஒருவர் கையில் ஒரு பெரிய "ஹரிக்கேன் விளக்கு" இருந்தது. பதினைந்து நிமிடம் நடந்த பின்பு இரயில் தண்டவாளம் குறுக்கிட்டது.

''மணீஷ். இப்ப நம்ப பக்கத்துல புதுசா ஒரு ரயில் வண்டி விட்டிருக்காங்க" என்றார் தாத்தா.

தண்டவாளத்தைத் தாண்டி மறுபடி பதினைந்து நிமிடம் நடந்தார்கள். ஒற்றைப் பனைமரம் வந்தது. அந்தப் பனை மரத்தின் அருகில் வேறு மரங்கள் ஏதும் இல்லை. அது மட்டும் காற்றில் 'உய்' என்று சத்தம் எழுப்பிக் கொண்டிருந்தது.

அனைவரும் அதற்கு சற்றுத் தூரத்தில் இருந்த பெரிய கல்லில் அமர்ந்



தனர்.

மணீஷ் குமார் தன் கையில் கட்டியிருந்த ரேடியம் கடிகாரத்தில் மணியைப் பார்த்தான்.

மணி 11.50.

பூசாரி, பூஜைக்கு வேண்டிய தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு ஊதுபத்தி ஆகியவற்றை எடுத்து இலையில் பரப்ப ஆரம்பித்தார்.

நேரம் சரியாகப் பன்னிரெண்டு மணியைத் தொட அந்த ''பளிச்'' வெளிச்சம் அந்தப் பனை மரத்தின் உச்சியில் தெரிந்தது. கண்ணெதிரில் பார்த்த மணீஷ் குமாருக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது.

பூசாரி மணியை எடுத்து ''ணங் ணங்'' என ஆட்டியபடி ஏதோ மந்திரத்தை உச்சரித்தார். 3 விநாடிக்குள் அந்த வெளிச்சம் மறைந்துவிட்டது. பூசாரி பூஜையை முடித்தார். இனிமேல் பேய் போய்விடும் என்று அனைவரும் வீட்டிற்குத் திரும்பி விட்டனர்.

"ஐயா, திருப்தியா பூஜை பண்ணிட்டேங்க. பேய்க்கு சந்தோஷமா இருக்கும். நம்ப ஊரை விட்டுப் போயிடும்'' என்று விடை பெற்றார் பூசாரி.

பளிச்சென்று பனைமர உச்சியில் தெரிந்த அந்தப் பேய் வெளிச்சம் மணீஷ் குமாரை மிகவும் குழப்பியது. உண்மையாகவே பேயின் வருகையைக் காட்டும் வெளிச்சம்தானா அது?

இரண்டுநாள் கழித்து எல்லோரும் மறுபடி போய்ப் பார்த்தார்கள். அந்த பேய் வெளிச்சம் சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு மறுபடி ''பளிச்'' சென்று தெரிய ஊர் மக்கள் பயந்து விட்டனர்.

"இத்தனை பூஜைகள் செய்தும் ஒற்றைப் பனைமர உச்சிப் பேய் இன்னும் போகவே இல்லையே!'' என்று கலங்கினர்.

மணீஷ் குமார் தாத்தாவுக்குத் தெரியாமல் தினமும் அந்த ஒற்றைப் பனைமர வயலுக்குச் சென்று கவனித்து வந்தான். என்ன முயன்றும் அவனால் அந்த வெளிச்சம் என்ன காரணத்தால் ஏற்படுகிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.



மணீஷ் குமாருக்கு விடுமுறை முடிந்து விட்டமையால் வீட்டிற்குக் கிளம்பிவிட்டான். ஒரு வாரம் கழித்து வருவதாகக் கூறியிருந்த அம்மாவும், அப்பாவும் தங்கைக்கு உடம்பு சரியில்லை என்று வரவில்லை; ஏமாற்றி விட்டார்கள்.

மணீஷ் குமார் மட்டும் அதனால் தனியாக ஊருக்குக் கிளம்பிவிட அவனை வழி அனுப்ப தாத்தாவும், வேலனும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தனர்.

"அடுத்த விடுமுறைக்கும் ஊருக்கு வா குமார்" - சொன்ன தாத்தாவின் கண்கள் கலங்கின.

"கண்டிப்பாக வருவேன் தாத்தா."

அவர்கள் ஐந்தரை மணி இரயிலை எதிர் பார்க்க அது ஆறரை ஆகியும் வரவில்லை.

'இரயில் ஏன் வரவில்லை,' என்று விசாரித்தபொழுது ஏதோ கல்லெறிப்புக் கலவரமாம். அதனால் இரயில் வராதாம் என்ற பதில் கிடைத்தது.

"மணீஷ். வாடா வீட்டிற்குப் போகலாம். நாளைக்கு ஊருக்குப் போ!" என்று தாத்தா அவனை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார்.

அன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு யாருக்கும் தெரியாமல் அந்த ஒற்றைப் பனை மரத்திற்கு மறுபடி சென்று பார்த்தான் மணீஷ். ஒரு மணி வரை காத்திருந்தான். அன்று அந்த "பளிச்" வெளிச்சம் தெரியவில்லை.

சட்டென்று மூளையில் ஒரு மின்னல் உணர்வு! "யுரேகா!" என்று மகிழ்ச்சியுடன் கத்தினான் மணீஷ்!

"தாத்தா அந்த ஒற்றைப் பனை மரத்தில் ஆவியும் கிடையாது பேயும் கிடையாது. தினமும் சரியா பன்னிரெண்டு மணிக்கு இந்த வழியா வருகிற புது இரயிலோட ஹெட்லைட் வெளிச்சம்தான் அது. இரயில் ஒரு திருப்பத்தில் திரும்பும் போது இந்தப் பனைமரத்தின் உச்சியில் பட்டு ஒளி பரவுகிறது. நேற்று இரயில் ஒன்றும் வரவில்லை. அந்த "பளிச்" வெளிச்சமும் தெரியவில்லை. காரணம் ரயிலும் வரவே இல்லை. பேயெல்லாம் கிடையாது தாத்தா. மக்கள் சுத்தமா இல்லாட்டிதான் நோய் எல்லாம் வரும். வேணும்னா இதை நிரூபிச்சுக் காட்டுறேன்," என்றான் மணீஷ்.

தன் பேரனை மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டார் தாத்தா. அதில் பெருமை நிறைந்திருந்தது.

எதிர் நீச்சல்

லதா வரதன்



"வா... ஆனந்த், என்ன விஷயம்?"

"ஸார்... உங்ககிட்ட பேசணும்."

"சொல்லு."

"ஸ்கூல விட்டு நின்னுடலாம்னு பார்க்கறேன்."

"அதுக்கு என்ன அவசியம் இப்ப?"

"ரெண்டு வருஷம் ஃபெயிலாயி மூன்றாவது வருஷம் படிக்க அவமானமா இருக்கு."

"பசங்க கேலி பண்ணினாங்களா?"

"ஆமா ஸார்.. வகுப்புல உட்காரவே முடியல" என்று தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான் ஆனந்த்.

"நீ ஏன் சரியா படிக்கறதில்ல?"

"ஸார்...என்ன படிச்சாலும் மனசுல நிக்கமாட்டேங்குது."

"கவனத்தை வேறு எதிலும் சிதற விடாம படிக்கணும். இனிமேலாவது படிக்கத் தயாரா இருக்கியா?"

"கண்டிப்பா ஸார்."

"அப்ப நான் சொல்றபடி கேட்கணும்."

"அப்படியே செய்றேன் ஸார்."

"நீ வகுப்புக்குப் போ. மூன்றாவது பிரியட் வர்றேன்."

ஸ்டாஃப் ரூமை விட்டுக் கண்களைத் துடைத்தபடியே வெளியே வந்தான் ஆனந்த்.

ஆசிரியர் கண்ணன் ஆனந்துக்காக அனுதாபப்பட்டார். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் மாணவர்களுக்காகத் தன்னையே அர்பணித்துக் கொண்டிருப்பவர் ஆசிரியர் கண்ணன். மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றவர். அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியருக்குக் கூட இரண்டாவது இடம் தான். அத்தனை செல்வாக்கு! சிறந்த கல்வியாளர்.

மூன்றாம் பாட வேளைக்கான மணி ஒலித்தது. ஸ்டாஃப் ரூமை விட்டு எழுந்து வகுப்புக்குச் சென்றார் கண்ணன். மனம் முழுதும் ஆனந்தைப் பற்றிய எண்ணமே ஆக்கிரமித்து இருந்தது.

வகுப்புக்குள் நுழைந்ததும் மாணவர்கள் வணக்கம் சொல்ல பதிலுக்கு வணக்கம் சொல்லி நாற்காலியில் அமர்ந்தார்.

மாணவர்களுக்கு ஆச்சர்யமாய் இருந்தது. வகுப்பிற்கு வந்து கண்ணன் சார் நாற்காலியில் அமர்ந்ததை அது வரை யாரும் பார்த்ததில்லை. புதிராக இருக்

கவே ஒரு மாணவன் எழுந்தான்.

"ஸார்... மன்னிக்கணும்... உடல்நிலை சரியில்லையா?"

"மனநிலை சரியில்லை."

"எங்களிடம் சொல்லும் செய்தியாக இருந்தால் கூறலாமல்லவா?"

....

"உங்கள் குட்டிப் பையன் ரமேஷ் நல மாக உள்ளானா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை... இது வேறு பிரச்சினை."

ஆசிரியர் கண்ணனும், அவரது மாணவர்கள் உலகமும் தனியானது. அவரிடம் சலுகையும் உண்டு. கண்டிப் பும் உண்டு. சில நேரம் நண்பராகவும், சில வேளை சகோதரராகவும், வழிகாட் டியாகவும் மாணவர்களால் உணரப்படு பவர். அவர் எது செய்தாலும் தவறே இருக்க முடியாது என்பது மாணவர் களின் உறுதியான நம்பிக்கை.

"என்னவென்று எங்களிடம் கூறக் கூடாதா ஸார்?"

"இதுவரை யாரிடமும் சொல்லாத கதை ஒன்றை உங்களுக்கு இப்பொழுது சொல்லப் போறேன்."

"பத்து வருஷத்துக்கு முன்னாடி கண்ணதாசன்னு ஒரு பையன் இதே ஸ்கூல்ல படிச்சான். ஒன்பதாவதுல மூணு வருஷம் பெயில்... கூடப் படிக்கும் மாணவர்களின் ஏளனம், கேலி தாங்க முடியாம நின்னுட்டான்.

"இப்ப இருக்கும் கணித ஆசிரியர் ரகுவரன் ஸார், அவனோட வீட்டுக்குப் போயி, பெற்றோர்களிடம் பேசி மீண் டும் வகுப்புக்கு அழைத்து வந்தார்.

"கூடப் படித்த மாணவர்கள் +2வில் இருக்க, ஏழாவது படித்த மாணவர்கள் ஒன்பதாவதிற்கு வர, கண்ணதாசன் மட்டும் அதே வகுப்பில் –

"வாழ்க்கை வெறுத்துப் போன கண்ணதாசன், ரகுவரன் ஸாரோட பொறுப்புல படிக்க ஆரம்பிச்சு உயர்ந் தான். இன்றைக்கும் கூட கண்ணதாசன் இங்கதான் வேலை செய்யறான்."

சொல்லிவிட்டு நிறுத்தினார்–

"இந்தக் கதையை எதுக்காகச் சொல் றீங்க?"

"காரணம் இருக்கு."

"ரொம்பப் புதிர் போடறீங்க ஸார்."

"புதிருக்கு விடை கிடைச்சா இன் னும் ஆச்சர்யப்படுவீங்க. கூடவே இவரா இப்படின்னு நினைப்பீங்க."

"அந்தக் கண்ணதாசன் யார்னு சொல்லுங்க?"

"நான்தான்."

வகுப்பே அமைதியானது சில நிமி டங்கள் யாரும் பேசவேயில்லை.

"என்ன ஸார் உண்மையாவா சொல் றீங்க?"

"ரகு ஸார்தான் கண்ணதாசன் என்





கிற இந்த கண்ணனைப் படிக்க வச்சு ஆளாக்கின ஆசிரியர்."

வகுப்பில் ஒரே அமைதி! ஆசிரியரே தொடர்ந்தார். அன்றைக்கு ஒன்பதாவதுல மூணுவருஷம் ஃபெயில்னு படிக்காம நான் இருந்திருந்தா என்ன ஆகியிருக்கும்?"

"ஒரு நல்ல ஆசிரியரை இந்த மாணவ சமுதாயம் இழந்திருக்கும் ஸார்."

"ஸ்கூல்ல நல்லா .படிச்ச எத்தனையோ மாணவர்கள், பின்னாளில் சரியா இல்ல. ஸ்கூல் லைஃப்ல பின்தங்கி இருந்தவங்களும் கூட நல்லா முயற்சி செய்து படிச்சு பெரிய .ஆளா ஆயிருக்காங்க."

"எதுக்காக இதைச் சொல்றீங்கன்னு புரியல ஸார்"

"காலைல ஆனந்த் வந்து அழுது- அவன் ஃபெயில் ஆனதுக்கு நீங்க எல்லாரும் கேலி செய்றதாச் சொன்னான். ஆனந்த் போன்ற மாணவர்களையும் அரவணைச்சு அவர்களையும் உங்களோட சேர்த்துப் படிக்க வைக்கணும். செய்வீங்களா?"

"இனி அது எங்கள் கடமை ஸார். நீங்கள் சொல்லி நாங்கள் தட்டுவதில்லையே."

"பெரிய மகிழ்ச்சி. அதோட இன்னொரு சின்னக் கதையும் சொல்றேன். ஒரு விவசாயி தன் தோட்டத்துக்குத் தண்ணி வேணும்னு கிணறு வெட்டினாராம்.

"முதல்ல ஓர் இடத்துல இருபத்தஞ்சு அடி வெட்டினார்- தண்ணி வரல.

"ரெண்டாவதா வேறு ஓர் இடத்துல முப்பத்தைந்து அடி வெட்ட- அதுலயும் தண்ணி வரல.

"மூணாவதா ஒரு இடத்துல அறுபதடி வெட்டினாராம். அப்பவும் தண்ணி வரல. எப்படி அந்த விவசாயி வெட்டி இருந்தா தண்ணீர் வந்திருக்கும்னு உங்களால சொல்ல முடியுமா?"

"முடியும் ஸார்."

"எப்படி? சொல்லுங்க?"

"ஒரே இடத்துல மொத்த முயற்சியையும் செஞ்சிருந்தா தண்ணி கண்டிப்பா கிடைச்சிருக்கும் ஸார்."

"ரொம்ப சரி. அந்த விவசாயி முயற்சி பண்ணினாலும் அது நிலையான ஓர் இடத்தில் இருக்காம பரவலா இருந்து போச்சு. அதனால அது வீணாகிப் போச்சு. அதனால நீங்க செய்ற முயற்சி ஒரே இலக்கு நோக்கி இருந்தா வெற்றி கண்டிப்பா தேடி வரும்.

"அப்படியே இனிமே செய்கின்றோம் ஸார். இனி அதுவே எங்கள் வழி" என்றனர் மாணவர்கள்.

"சார், எனக்குப் புது நம்பிக்கை வந்திட்டது. இனிமே இவங்க கேலியே பண்ணினாலும் சரி, கலங்கி விட மாட்டேன். எதிர்நீச்சல் போடுவேன். உயர்வேன்" என்றான் ஆனந்த்.



ஆந்தையும்

பாழடைந்த கோபுரம் ஒன்றின் உச்சியில் ஓர் ஆந்தை வாழ்ந்து வந்தது. அதற்கு நிறையக் குஞ்சுகள் இருந்தன. அம்மா ஆந்தைக்கு எதையுமே மிகைப்படுத்திப் பேசும் குணம். அதோடு தற்பெருமை வேறு.

ஒருநாள் அந்தக் கோபுரத்திற்கு ஒரு கழுகு வந்தது. அந்த இடம் அதற்குப் பிடித்துப் போயிற்று. "நண்பா, நானும் இங்கேயே தங்கி விடுகிறேனே?" என்று ஆந்தையிடம் கேட்டது.

"தாராளமாக இருக்கலாம். ஆனால், நீ என் குஞ்சுகளைக் கண்டால் இரையாக்கிக் கொண்டு விடுவாயே?" என்றது ஆந்தை.

"நண்பனாகி, இங்கேயே தங்க ஆரம்பித்து விட்ட பிறகு, உன் குஞ்சுகளைத் தின்பேனா? உன் குஞ்சுகள் எப்படி இருக்கும் என்று கூறு. அவைகளைப் பார்த்தால் அடையாளம் கண்டு பிடித்து தீங்கு விளைவிக்காது காவலாக இருப்பேன்" என்றது கழுகு.

"என் குஞ்சுகள் பேரழகு வாய்ந்தவை. அவைகளின் நெற்றி,

எழுத்துக் கூட்டிப் படிக்க

ஓர் ஈசாப் கதை!



கழுகும்

மூக்கு, கண்கள், காதுகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அத்தனை அழகு. அவை கத்தினால் இன்று முழு வதும் கேட்டுக் கொண்டே இருக்கலாம்" என்று வழக்கப்படி மிகைப்படுத்திப் புகழ்ந்தது ஆந்தை.

கழுகு வெளியே போய் விட்டு வந்த போது ஆந்தைக் குஞ்சு கள் வெளியே வந்து விளையாடிக் கொண்டிருந்தன. அவை களைப் பார்த்த கழுகு, "இத்தனை அழகற்ற குஞ்சுகள் ஆந்தை யின் குஞ்சுகளாக இருக்காது" என்று அவைகளைஅடித்து இரை யாக்கிக் கொண்டது.

ஆந்தை வந்து கதறியது. "உன் குஞ்சுகள் அழகற்றவை என்று கூறியிருந்தால் தின்றிருப்பேனா? தவறு என்னுடையதல்ல. நீ மிகைப்படுத்தி உன் குஞ்சுகள் அழகானவை என்று கூறினாய். மிகைப்படுத்தும் குணத்தின் விளைவே இது" என்றது கழுகு.

எதையும் மிகைப்படுத்தினால் தீங்கில்தான் முடியும்!

ஸ்டாலினை சந்தித்தவர்!

அது 1950 ஆம் ஆண்டு. நமது நாடு சுதந்திரம் பெற்று மூன்று ஆண்டுகளே ஆகியிருந்தது. அயல்நாடுகளில் இந்திய தூதரகத்தைத் தொடங்க இந்திய அரசியல் தலைவர்கள் ஏற்பாடுகளைச் செய்து வந்தனர்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு நாடுகளில் இந்திய தூதரகங்கள் திறக்கப்பட்டு தூதர்களும் நியமிக்கப்பட்டு விட்டனர். ரஷ்யாவுக்கும் ஒரு தூதரை அனுப்ப வேண்டும். ஆனால் யாரை அனுப்புவது என்பது பெரிய பிரச்னையாக இருந்தது. அதற்குக் காரணமும் இருந்தது.

இப்பொழுது வேண்டுமானால் ரஷ்யா பாரதத்தின் சிறந்த நண்பனாகத் திகழ்கிறது. ஆனால் 1950 ல் இப்படி இல்லை. பாரதத்தைச் சிறிதும் அது மதிக்கவில்லை. அப்பொழுது அதன் சர்வாதிகாரியாக ஸ்டாலின் இருந்தார். பொதுவுடைமைக் கொள்கையின் விடிவிளக்காக ரஷ்யா விளங்கி வந்தது. மகாத்மா காந்தி கொலையுண்ட போது, ரஷ்ய அதிபராக விளங்கிய ஸ்டாலின் ஒரு அனுதாபச் செய்தி கூட அனுப்பவில்லை. நம்மை அவர்கள் ஒரு பொருட்டாகக் கூட எண்ணவில்லை. ரஷ்யத் தலைவர்களும், அரசும் மத நம்பிக்கை இல்லாதவர்கள். மதங்கள் மனித குலத்தை வேறுபடுத்துகின்றன என்பது அவர்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

பாரதம் முதலாளித்துவ நாடுகளுக்கு வால் பிடிக்கும் நாடு என்பது ஸ்டாலின் கருத்து. நமது நடுநிலைமைக் கொள்கையை அவர் ஏற்கவே இல்லை.

இப்படிப்பட்ட ஒரு நாட்டுக்கு, தூதராக அனுப்பத் தக்க அறிஞர் ஒருவரை பாபு ராஜேந்திர பிரசாத்தும், நேருவும் ஒன்றாக முடிவு செய்தனர். அவர்களால் அப்படி முடிவு செய்யப்பட்டவர் தத்துவ மேதை என்று உலகப் புகழ் பெற்ற ஒருவர். காந்தியடிகளால் புகழப்பட்டு வந்தவர். இந்தியாவில் இருந்த பல பல்கலைக் கழகங்களிலும் அவர் துணை வேந்தராக இருந்து அரிய பணி ஆற்றிக் கொண்டிருந்தார். வாரம் ஒருமுறை ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திற்குச் சென்று சொற்பொழிவாற்றி வந்தார். நேருஜியும் ராஜன் பாபுவும் அவரை அழைத்து, இந்திய தூதராகப் பொறுப்பு ஏற்குமாறு செய்து மாஸ்கோவுக்கு அனுப்பி வைத்தனர்.

புதிய தூதராகப் பொறுப்பேற்ற அறிஞர் மிக எளிய வாழ்க்கை நடத்துபவர். மாஸ்கோ நகரில் எளிய கம்பளி ஆடை அணிந்து குளிரை எதிர்த்து வாழ்ந்து காட்டினார். மாஸ்கோவில் தூதராக இருந்த போதும் வாரம் ஒருமுறை லண்டன் சென்று பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவாற்றி வந்தார். அந்த நிபந்தனையின் பேரிலேயே அவர் தூதரகப் பொறுப்பை ஏற்க சம்மதித்திருந்தார்.

எதையும் நேரப்படி செய்யும் தூதர், நடுநிசி விருந்து





பொறுப்பை ஏற்றார். துணைக் குடியரசுத் தலைவராகி, பிறகு இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் பொறுப் பேற்றார். இவர்தான் தத்துவமேதை டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்.

சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொண்டு இவர் சிறை புகவில்லை. எனினும் காந்தியடிகளின் தலைமையில் இவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. காங்கிரஸ் மகா சபைக்குள் பெரிய தலைவர்களுக்கு இடையே கருத்து மோதல்கள் காரணமாகப் பல முறை பிளவுகள் தோன்றின. இவைகளைத் தீர்த்து வைத்து இணக்கமாகச் செயல் புரிய வைத்த பெருமை ராதாகிருஷ்ணனுக்கு உண்டு.

சாதாரண ஆசிரியராக இருந்து, பேராசிரியராக நம் நாட்டில் மட்டுமின்றி உலகமுழுவதும் உள்ள பல்கலைக் கழகங்களால் மதிக்கப் பெற்ற தத்துவ மேதை இராதாகிருஷ்ணன், குடியரசுத் தலைவரான போதிலும் இந்திய ஆசிரியர் குலத்தின் மிகச் சிறந்த முன்னோடியாகத் திகழ்ந்தார். இவருக்கு சிறப்புச் செய்யும் வகையிலேயே இவரது பிறந்த நாளான செப்டெம்பர் 5 ஆம் நாள் ஆசிரியர் திருநாளாகக் கொண்டாடப் படுகிறது.

களில் கலந்து கொள்வதில்லை. காரணம், இரவு பத்து மணிக்கெல்லாம் அவர் படுக்கப் போய்விடுவார். யாருக்காகவும் எவருக்காகவும் இந்த வழக்கத்தை அவர் மாற்றிக் கொள்ளவே இல்லை.


ரஷ்ய அதிபர் ஸ்டாலினிடமிருந்து தன்னைக் காண வரும்படி தூதருக்கு அழைப்பு வந்தது. ஸ்டாலினை நேரில் பார்த்த இந்தியர்கள் இரண்டு மூன்று பேரே. அவர்களுள் இவரும் ஒருவர். 51 ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் அன்று தூதர் ஸ்டாலினைச் சந்தித்தார். மனித நேயம் மிக்க தூதரின் பேச்சும், எளிய தோற்றமும், எதையும் புதிய அணுகுமுறையில் விளங்க வைக்கும் ஆற்றலும், இரும்பு மனிதர் என்று பெயர் பெற்றிருந்த ஸ்டாலினைப் பெரிதும் கவர்ந்தன. சர்வாதிகாரப் போக்குக் கொண்ட சக்கரவர்த்தியாக இருந்து, கலிங்கப் போருக்குப் பின்னால் பிக்குவாக மாறிய அசோக சக்கரவர்த்தியின் வரலாற்றை ஸ்டாலினுக்குக் கூறி, அவர் மனத்தில் புதிய விழிப்பை ஏற்படுத்தினார் தூதர். அதற்குப் பிறகு எல்லோருடைய கவனமும் தூதர்பால் திரும்பியது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா திரும்புமுன், ஸ்டாலினிடம் இருந்து தூதருக்கு அழைப்பு வந்தது. அப்பொழுது ஸ்டாலின் நோய்வாய்ப் பட்டிருந்தார். படுக்கையில் இருந்தார்.

தூதர் ஸ்டாலினின் கைகளை அன்புடன் பற்றிக் கொண்டார். அவர் கன்னங்களைத் தடவிக் கொடுத்தார். அன்பு நெகிழ அவரை அணைத்துக் கொண்டார்.

ஸ்டாலின் நெகிழ்ந்து போய், "உலகமே மனித இதயம் இல்லாத கல் நெஞ்சன்" என்று என்னைக் கண்டு முகம் சுளிக்கிறது. ஆனால், நம்பிக்கையுடன் நானும் மனிதனே என்று என்னை மனிதனாக மதித்து நடத்திய துணிவு மிக்க மனிதர் நீங்கள்தான்" என்று கண்கலங்கினார்.

இலக்கியப் பணிகளுக்காக இந்திய அரசு சாகித்ய அகாதமியை நிறுவிய போது தூதர் அதன் தலைமைப்



கேட்கட்டுமா டாக்டர்?



• ஒ. வெங்கட்
ராமன், சீனிவாசன்
பேட்டை.

? சுவிங்க மிட்டாய் சாப்பிடுவதால் 'அல்சர்' ஏற்படும் என்று என் நண்பன் கூறுகிறான், உண்மையா டாக்டர்?

! உண்மைதான், தம்பி. சூயிங்கம் சாப்பிடுவது ஆரோக்கியத்திற்குக் கெடுதல். வயிற்றில் 'அல்சர்' (புண்) ஏற்படும். ஆண்டுக் கணக்கில் சூயிங்கம் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கு வாயில் புற்றுநோயே கூட வர வாய்ப்புண்டு.

• வி. சொக்கலிங்கம், திருச்செந்தூர்.

? இதயம் இயல்பான அளவை விடப் பெரிதாக இருக்குமா? அப்படி இருந்தால் ஏதாவது ஆபத்து ஏற்படுமா?

! இதிலென்ன சந்தேகம், தம்பி? இதயம் தன் இயல்பான அளவை விடப் பெரிதாக இருந்தால் பல தொந்தரவுகள் தலைகாட்டும். மூச்சு விடுவதில் சிரமம், நடந்தால் இளைப்பு வருவது, நெஞ்சு வலி, கை, கால் முகம், வயிறு வீங்குவது, மயக்கம் போன்றவை அவற்றுள் முக்கியமான சில தொந்தரவுகள். இவற்றைக் காலத்தோடு கவனிக் காவிட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது.

• என். இராஜலட்சுமி, மேலப்பாதி.

? விஷம் சாப்பிட்டவரின் வயிற்றில் உப்புக் கரைசல் அல்லது சோப்புக் கரைசல் செலுத்தி சுத்தம் செய்வது ஏன்?

! உப்புக் கரைசலும் சோப்புக் கரைசலும் வாந்தி வருவதைத் தூண்டுபவை. விஷம் சாப்பிட் டவருக்கு இவற்றை வாய்க்குள் செலுத்தும் போது வாந்தி வந்து, வயிற்றில் உள்ள விஷயம் வெளியேறி விடும். இதனால் அந்த நபருக்கு ஆபத்து குறையும்.

டாக்டர். கு. கணேசன்

• கே. தேவி,
சென்னை - 23.

? பிறரிடமிருந்து கண்களை தானமாகப் பெற்றவர்கள் மீண்டும் அக் கண்களை பிறருக்குக்

கொடுக்கலாமா?
! கொடுக்க முடியாது.

* ப. ரபீஸ் அஹமது, ஆடுதுறை.
? நாம் ஓடும் போது நம் இதயம் நிமிடத் திற்கு எத்தனை முறை துடிக்கிறது?
! ஓடும் வேகத்தைப் பொறுத்து இதயத் துடிப்பு மாறும். பொதுவாக நிமிடத்திற்கு 100 லிருந்து 120 வரை துடிக்கலாம்.

* ஹரிசந்திரன், சென்னை - 90.
? மறதி என்ற நோயை எப்படிச் சமாளிப்பது, டாக்டர்? நான் வெகுநேரம் நன்றாகப் படித்தாலும் பின்னர் மறந்து விடுகிறது. இதற்கு ஓர் ஆலோசனை கூறுங்கள், ப்ளீஸ்...
! படிக்கும் பாடங்களில் முழு கவனம் இருக்க வேண்டும். அதில் முழுமை யான ஈர்ப்பும், ஈடுபாடும் இருப்பது அவசியம். அப்போதுதான் மூளையில் அவை பதியும். பின்பு மூளை யில் பதிந்த பாடங்களை அடிக்கடி நினைவுபடுத் திப் பார்க்க வேண்டும். இதற்கு ஒப்பித்தல் அல்லது எழுதிப் பார்த் தல் போன்ற பயிற்சிகள் உதவும். இந்தப் பயிற்சி களை தினந்தோறும் முறையாகச் செய்து வந்தால் உனக்கு ஞாபகசக்தி நிச்சயம் அதிகரிக்கும்; மறதி என்ற பேச் சுக்கே இடமிருக்காது. செய்வாயா, ஹரிசந்திரன்?





* ந. வைத்தியலிங்கம், புதுப்பத்தூர்.
? எனக்குத் தினமும் காதில் அழுக்கில்லாமலேயே அரிக் கிறது. இதற்கு என்ன காரணம்? எப் படித் தடுப் பது?
! உன் காதில் காளான் தொற்று (Fungal infection) இருக்க வாய்ப்பு உள்ளது. உடன டியாக காது-மூக்கு-தொண்டை (E.N.T.) மருத்துவரைப் பார்த்து தேவைப்படும் சிகிச்சையை மேற் கொள்ளவும். காதை சுத்தமாக வைத் துக் கொண்டால் இந்தத் தொந் தரவு திரும்பவும் வராது.

விஷம் சாப்பிட்டவர்களுக்கு உப்புக் கரைசலைக் கொடுப்பது ஏன்?

உங்கள் நூலகம்

அறிவை வளர்க்கும் படப்புதிர்கள் பாகம் - 1, மு. அப்பாஸ் மந்திரி, பக். 140, ரூ. 26/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 600 017.

ஆங்கிலத்தில் Action Puzzle என்று கூறப்படும் அறிவைத் தூண்டும் விளையாட்டு நூல்கள் ஏராளம். தமிழில் இவை போல் இல்லையே என்று ஏங்கிய காலம் இருந்தது. ஏராளமாகப் படங்கள் அச்சிட வேண்டியிருக்கும். அதனால் இதற்குச் செலவு அதிகம். இதன் காரணமாகவே தமிழ் நூல் பதிப்பாளர்கள் இந்த முயற்சியில் அதிகமாக ஆர்வம் காட்டி இறங்காமல் இருந்தார்கள். இப்பொழுது மணிமேகலைப் பிரசுரத்தார் துணிந்து இந்தச் செலவுமிக்க முயற்சியில் ஈடுபட்டு, அருமையாக நூலையும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் புத்தகம் இருந்தால் குழந்தைகள் உங்களைத் தொந்திரவு செய்ய மாட்டார்கள். ஆசிரியருக்கும், பதிப்பாளருக்கும் பெருமைதரும் புத்தகம். பரிசளிக்க முற்றிலும் தகுதியானது.

அயல்நாட்டுக் கதைகள், எஸ். சித்ரா, பக். 76, ரூ 28/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

கோகுலத்தில், வாசகர்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்ட அயல்நாட்டுக் கதைகளைத் தமிழில் தந்த ஆசிரியரின் அருமையான பன்னிரண்டு கதைகளின் தொகுப்பு இது. எல்லாமே கோகுலத்தில் வெளியானவை என்பதே இதன் சிறப்பிற்குப் போதுமானது. கதைகளும், கண்கவர் ஓவியங்களும் எல்லா வயதுக் குழந்தைகளையும் ஈர்க்கும்வண்ணம் அமைந்துள்ளன. அச்சும், அமைப்பும் மேல்நாட்டுப் புத்தகங்களுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் இருப்பது பெருமையளிக்கக்கூடியது. ஆசிரியரையும் பதிப்பாளரையும் எத்தனை பாராட்டினாலும் தகும். போற்றத்தக்க முயற்சி.

சந்தனக் கிண்ணம், வ. இராசையா, பக். 40, ரூ. 50/- அரவிந்தம் வெளியீட்டகம், பழைய வீதி, கோப்பாய், இலங்கை.

சிறுவர்களுக்காக கற்பனைச் செறிவும் இனிய சந்தமும் நிறைந்த பாடல்களைத் தருவதில் பல ஆண்டு அனுபவம் மிக்க கவிஞரின் அருமையான பாடல்களின் வண்ணத் தொகுப்பு இது. பல பாடல்களில் புதிய கண்ணோட்டமும் கற்பனையும் தாளம் போடுகின்றன.

எல்லோர் வீட்டிலும் பாப்பா இருக்கிறது. பாப்பா எல்லாப் பலகாரங்களையும் போட்டி போட்டுத் தின்கிறது. எல்லாம் பல் முளைக்கும் வரை. பல் முளைத்த பிறகு கொழுக்கட்டை பண்ணி, வாசற்படியில் உட்கார வைத்து அதன் தலையில் கொட்டி மகிழ்வார்கள். இதைப் பற்றி "பாப்பாவுக்கு பல்லு முளைத்தது" என்று ஓர் அருமையான பாடல். நெஞ்சை அள்ளும் சந்தத்திற்கு இதோ ஓர் 'முறுக்கு' பாடல் :


முறுக்கு நல்ல முறுக்கு
மொரமொர ரத்த முறுக்கு
நறுக்கு நறுக்கு என்றே
நாங்கள் தின்னும் முறுக்கு

கடித்துக் கடித்துப் பார்க்கிறேன்
பொடித்துப் பொடித்துப் போகுது
பொடித்த முறுக்கை நாவிலே
கலைத்துச் கலைத்துத் தின்கிறேன்

சந்தம் நிறைந்த பாடல்களுக்காக ஒருமுறை, படங்களுக்காக ஒருமுறை படிக்கலாம். பரிசளிக்க முற்றிலும் ஏற்ற படைப்பு.

2000 பொது-அறிவு விநாடி-வினா விடைகள் கே. எஸ். சுப்ரமணி, பக். 288, ரூ. 54/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

பொது அறிவுக் களஞ்சியம் என்று புகழத்தக்க விதத்தில் 2000 கேள்விகளும் அதற்குரிய விடைகளும் இதில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மட்டுமல்ல, வினாடி-வினா நடத்துவோர், பங்கேற்போர் எல்லோருக்கும் பயன்படும் அரிய தயாரிப்பு.



பெரியவன்

"ஆதரவின்றிக் கிடக்கும் விசிறியே, உன்னை விட நான்தான் உயர்ந்தவன்" என்று விசிறியிடம் வம்புக்குச் சென்றது சுழலும் மின்சார விசிறி. பனை விசிறி எதுவும் பேசாமல் அடக்கமாக இருந்தது.

மின்விசிறி விடவில்லை, "உன்னைத்தான் ஓலை விசிறியே, மின்சாரம் இல்லாம நான் வேலை செய்ய முடியாதப் போதான் உன்னைக் கையில் எடுத்து விசிறிக் கொள்ளுவார்கள். அதுவும் சிறிது நேரம்தான். அதற்குப் பிறகு தூக்கி எறிந்து விடுவார்கள். ஆனால் நானோ, நாள் முழுவதும் விடாமல் சுழன்று மற்றவர்கள் களைப்பைப் போக்குகிறேன். அதனால் உன்னை விட நான்தான் உயர்ந்தவன்" என்று திமிராகப் பேசியது.

ஓலை விசிறி இப்பொழுது விடவில்லை, "அட புத்திகெட்ட மின்விசிறியே உன்னிடம் காற்று வாங்க மனிதர்கள் நீ இருக்கும் இடத்திற்கு வருகிறார்கள். ஆனால் என்னை எங்கு வேண்டுமானாலும் தூக்கிக் கொண்டு செல்கின்றனர். அவர்கள் போகுமிடம் எல்லாம் பயணம் செய்து மனிதர்களுக்கு மிகவும் உதவுவது நானே. நான் தான் உயர்ந்தவன்" என்றது.

இப்படி இரண்டும் ஒன்றை ஒன்று ஏசிப் பேசிக் கொண்டிருந்தன. சில நாட்கள் சென்றன. கோடை போன போது காற்றுக் காலம், குளிர் காலம் என்று வரத் தொடங்கியது. காற்றும் குளிரும் சேர்ந்து கொண்டதால் மின்விசிறியையும், பனைவிசிறியையும் யாருமே பயன் படுத்த வில்லை.

அப்போதுதான் இரண்டும் ஓர் உண்மையை உணர்ந்தன. மனிதர்கள் தங்கள் வசதிகளுக்கு ஏற்பவே அவைகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். மின்சாரம் இருக்கும் போது மின் விசிறியும் மின்சாரம் இல்லாத காலத்தில் பனை ஓலை விசிறியையும் அவர்கள் தங்கள் வசதிக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் அது.

- ஆர். முத்துச்செல்வன்

என்ன பழமொழி? — போட்டி முடிவு

பெரும் எண்ணிக்கையில் வாசகர்கள் கலந்து கொண்ட போட்டி என்ற பெருமை இதற்குக் கிடைத்துள்ளது. அதிலும் குறிப்பாக வெளிமாநிலங்களில் இருந்து ஏகப்பட்ட வாசகர்கள் இதில் கலந்து கொண்டு அசத்தியிருக்கிறார்கள். வந்த விடைகளில் கூட 99% எல்லாம் சரியானவை! பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

சரியான விடை :

ஆழம் அறியாமல் காலை விடாதே!

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. எஸ். கண்மணி, அரிமளம்.
2. கே. ஈஸ்வரி, திருவனந்தபுரம், கேரளா.
3. ப. குமாயூன்கபீர், வெளிப்பட்டணம்.
4. ஜி. சஹாசினி, D.G.புதூர் அஞ்சல்.
5. வ. ஷரிபா ஜனி, வாழூர்.
6. சிவபெருமாள், நெடும்காடி அரமனை, கேரளா.
7. RMAL. கருப்பையா, சென்னை - 18.
8. எஸ். குமுதா மேகலை, கோரா சாமா கிராமம், அந்தமான் - 1.
9. எச். மும்தாஜ்பேகம், திருமலைப்பட்டி.
10. எம். ஆர்த்தி, புதுடெல்லி - 16.
11. ஆர். விஜயலட்சுமி, குன்றக்குடி.
12. எஸ். நஜ்முதீன், மடத்துவாசல்.
13. எஸ். கெஜலக்ஷ்மி, சித்தூர், ஆந்திரபிரதேஷ்.
14. கே. ஸ்ரீராம் பாபு, ராமச்சந்திரபுரம்.
15. இரா. கனிதா ஷெனாய், ஊரப்பாக்கம்.
16. T. செல்வமுத்துக்குமரன், திருவாரூர் - 2.
17. ஜெ. அஜில், முன்னா அஞ்சல், கேரளா.
18. எம். அப்துல் மஜீத், பரக்கை அஞ்சல்.
19. எஸ். சஹன்யா, SHIBPUR PO. மே. வங்கம்.
20. மாஸ்டர் டேனி மைக்கேல், நெய்வேலி - 3.
21. ஆர். பார்த்திபன், வில்லியனூர், புதுவை - 10.
22. எல். சஹாயமேரி, தேவகோட்டை.
23. இ. எழிலரசி, கம்பன் நகர், புதுவை - 10.
24. ஏ. சரவணன், குளித்தலை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்து எதிர்காலத்தில் பரிசு பெற உள்ளவர்களுக்கு நன்றி!

சார் தபால்!

✉ அட்டைப் படம் அயரவைத்தது! ஏதோ அயல்நாட்டுப் பத்திரிகையைப் போன்ற மயக்கம்! கொள்ளை அழகு! - மாயவரம், து. பொன்னையன், சாத்தூர் வா. லாவண்யா, மதுராபுரி கு. லட்சுமிகாந்த், திருப்பதி வெ. கோதண்டராமன், பொன் மலை. வா. மான்விழி, சீர்காழி. நா. பழமலை, திருவையாறு கி. அப்புசாமி, துலுக்கானாம்பட்டி. மா. வேங்கடலட்சுமி, மற்றும் ஏராளமானோர்.

✉ 'எனக்கா பரிசு!' – பரிசுக்கு ஏற்ற துடிப்பான கதை. என்னவாகுமோ என்ற தவிப்பை ஏற்படுத்தியது! – சதுரங்கபுரம் கா. கோமளா வரதன், சின்னதாராபுரம் கா. கருணாகரன், விருத்தாசலம் பிரசன்னா குமார் பிரபாகர், மற்றும் பலர்.

✉ என்ன ஆசிரியரே, மரகதச் சிலையின் ஓவியர் ரமணியா, சுப்புவா? ஏன் இப்படிக் குழப்புகிறீர்? – காங்கேயம் வெட்டியப்பன், மயிலாடுதுறை மு. சாவேரிமுத்து, பாளையம்கோட்டை து. சின்னராஜா, நெய்வேலி. மா. ஆதிரை, மகாபலிபுரம் கு. காதர் மொகதீன், பட்டாளம் கா. இளமழிசை மற்றும் பலர்.

(சுப்பு, ரமணி இருவரும் ஒருவரே!
– ஆசிரியர்)

✉ அசத்தலுக்கு மறுபெயர் "புவனா தேடிய புதையலா?" கதை சூப்பர். படங்கள் சூப்பரோ சூப்பர்! – கோவை மா. காமராசன், விருத்தாசலம் மா. சுந்தர பாஸ்கர், சிவகங்கை. கா. சிட்ராபர்ட்ஸ், தேவகிரி மு: மாணிக்கமூர்த்தி, நாகர்கோவில் பவளமலை, ஈரோடு மா. கவிவரதன் மற்றும் ஏராளமானோர்.

✉ எறும்பு தின்னி படமும் கதையும் பிரமிப்பாக இருந்தது. – கடலூர் மா. வாசுதேவன், தாமல்சத்திரம் வா. நாமகிரி, காஞ்சிபுரம் து. சின்னபெருமாள், சிதம்பரம் கா. மணிமேகலை, வாணியம்பாடி. மா. சுக்கூர், தினவரதன்பேட்டை கல்லூர் மஸ்தூர், அரசூர் கி. புண்யகோடி, திருப்பூர். வா. மங்களநாயகி மற்றும் பலர்.

✉ தூக்கத்தைப் பற்றி இத்தனை தகவல்களா? ஆழியின் படத்தைப் போடுங்களேன் சார் – காளஹஸ்தி மா. பிரசன்ன குமார், மேட்டுப்பாளையம் ஜி. இந்திராணி, வலங்கைமான் மா. முத்துக்குமரன், ராணிப்பேட்டை. மா. இப்ராஹீம்கான், அழகர்புரம் ஆ. அருள்மொழி, பள்ளிகரணை. கா. அர்ஜுன் மற்றும் பலர்.


✉ விட்டுக் கொடுப்பதைப் பற்றிய தலையங்கம் இன்றைய தேவையைப் பூர்த்தி செய்கிறது. மனதில் நன்கு பதிய வைத்தது. பாராட்டுகள். பணி தொடரட்டும். – தென்பாதி மு. சல்லடை ராஜன், நத்தைகுத்தி வி. எதிராஜன், பாவலர்குடி வா. இசக்கிமுத்து, பெங்களூர் கா. தினகரன், பனாகரக்கோட்டை கா. வடுகநாதன், கோட்டையூர். மா. அழகப்பன் மற்றும் பலர்.

✉ 'கதையை முடியுங்கள்' போட்டியில் பரிசு பெற்ற கதைகள் எல்லாமே ஜோர் ஜோர்! – வத்தலகுண்டு. மா. ராஜப்பா, நெய்வேலி மு. வித்தகமணி, விழுப்புரம் கி. தெய்வானை, காரமடை மு. சியாமளா, மற்றும் பலர்.

✉ என்ன சார் இது அநியாயம்! திருக்குறள் நாடகங்களை எழுதும் ஆசிரியர் பெயரை வெளியிடாது வைத்திருக்கிறீர்களே! இது நியாயமா? எல்லாமே நெம்பர் ஒன் சார். – திருவானைக்கால் மா. மதிவாணன், பெத்தநாயக்கன்பட்டி. மாவிருபாட்சன், கரூர். மா. தேன்மொழி, சாத்தூர் கி. ஆழி.மா.ரமணன் மற்றும் பலர்.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.




தட்டுத்தடுமாறும் தவழ்நடைக்காரர்களுக்கு
அகில உலகத் தரமிக்க சில மாறுபட்ட பயணங்கள்.
வேடிக்கைக் கற்பனை உலகிற்கு சிட்டுச் சிறார்களை ஏற்றிச் செல்லும் பொம்மைகள். பன்னாட்டு ரகங்களில் மம் டாய்ஸ் வழங்கும் பாதுகாப்பு மிக்க எலெக்ட்ரானிக் விளையாட்டுப் பண்டங்கள். ஓரிடத்தில் சற்றும் ஓய்வு காணாத நீங்கள் கொண்டாடி மகிழும் குழந்தைக்கு முற்றிலும் ஈடுகொடுக்கும் ஏற்ற பொம்மைகள்.
டம்ப்லிங் மார்ஸ் ரேன்ஜர்
உங்கள் வீட்டுச் சின்னஞ்சிறு விண்வெளி வீரனுக்கு வான சாஸ்திரப் பயிற்சி.
ரேசிங் டாம் ஜெட்
கர்ஜிக்கும் நாளைய பைலட்டுக்கு ஜெட்யுகத் தமாஷ்.
ஓரியன் எக்ஸ்பிரஸ்
ஓயாத உங்கள் செல்லக் குழந்தைக்கு வேடிக்கையூட்டும் கூச் ஓசை.
ஃபர்ஸ்ட் ரைடர்
உங்கள் வீட்டுச் சின்னஞ்சிறு 'எல்' போர்டுக்கு ட்ரைவிங் பயிற்சிகள்.
காஸ்மோ காப்
அந்தச் சின்னஞ்சிறு கள்வனை அடக்கி வைக்க நாளைய வரலாறு சொல்லும் இன்றைய போலீஸ் கார்.
MUM TOYS
HEAD OFFICE: M.M. Toys Industries Ltd., 5, Chandra Bagh Avenue, Mylapore, Madras-4.
8000.96